தர்மசக்கரம்



துந்துபி ௵ ஆவணி ௴ சக்கரம் 31 ஆரம் 8

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

டிபாசிட் சந்தாதாரர்களின் கவனத்திற்கு

தர்ம சக்கரத்தின் ஆண்டு சந்தா தொகை ரூ. 15-00 ஆகவும், சகாய சந்தா ரூ. 10-00 ஆகவும், டிபாசிட் சந்தா தொகை ரூ. 150-00 ஆகவும் கடந்த 1—6—1982 முதல் உயர்த்தப்பட்டுள்ள விவரங்களைத் தர்ம சக்கரம் ஆனி, ஆடி மாத இதழ்களில் அறிவித்திருந்தோம். இதன்படி டிபாசிட் சந்தாதாரர்கள் மேலும் ரூ. 50-00 அனுப்பிப் புதுப்பித்துக்கொண்டுள்ளனர். கூடுதல் டிபாசிட் தொகையை இதுவரை அனுப்பாத டிபாசிட் சந்தாதாரர்கள் அனைவரும் இந்த அறிவிப்பைப் பார்த்தவுடன் பாக்கித் தொகை ரூ. 50-00ஐயும் தங்கள் வசமுள்ள பழைய 100 ரூபாய் ரசீதையும் இங்கு அனுப்பித் தந்து ரூ. 150-00க்குரிய புது டிபாசிட் ரசீதைப் பெற்றுக்கொண்டு தொடர்ந்து தர்மசக்கரம் இதழைப்பெற்றுப் பயன் பெறக் கோருகிறோம். தர்ம சக்கரம் அடக்க விலைக்கே வெளியிடப்படுவதால் இந்த உயர்வைப் பொருட்படுத்தாது உடன் பாக்கித் தொகையை அனுப்பித் தந்து புதுப்பித்துக் கொள்வதுடன் ஆன்மீக நாட்டம் கொண்டுள்ள பலரையும் இதில் ஈடுபடுத்தி எங்கள் பிரசார' கைங்கரியத்தில் தாங்களும் பங்குகொள்ளக்கோருகிறோம். டிபாசிட் சந்தா திட்டத்தில் தாங்கள் பங்குகொள்வதன் மூலம் எங்கள் வேலைப்பளு பெருமளவு குறையும்.

இப்பொழுதுள்ள சந்தா விவரம் வருமாறு :

உள்நாடு	டிபாசிட்	சந்தா	ரூ.	150-00
உள்நாடு	வருட	சந்தா	ரூ.	15-00
உள்நாடு	சகாய	சந்தா	ரூ.	10-00
வெளிநாடு	வருட	சந்தா	ரூ.	35-00

வெளிநாட்டிற்கு டிபாசிட் சந்தாமுறை இல்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் - ராமேஸ்வரம்

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி இம்மடாலயம் துவக்கப் பெற்றது. அன்று முதல் அங்கு மஹேஸ்வர பூஜை முறையில் அன்னம் வழங்குதல் நடைபெற்று வருகிறது. 1981 டிசம்பர் 1ஆம் தேதி முதல் 1982 ஜூன் மாதம் முடிய எல்லா வேளைகளிலும் 12349 பேர் உணவு ஏற்றுக்கொண்டனர். அதற்கான உணவுச் செலவு ரூ. 28820. உண்டியல் மூலமும் அன்பர்கள் நேரில் தந்ததுமாக ஜூன் முடிய வந்த நன்கொடை வரவு ரூ. 12564-50. மூலதனமாக வைத்துக் கொண்டு வட்டியை மட்டும் செலவிடுமாறு ஜூன் மாதம் முடிய வந்த தொகை ரூ. 43325. இம்மடாலயத்தைப் புதுப்பிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. ஜூன் மாதம் முடிய இதற்கு ஆகியுள்ள கட்டடச் செலவு ரூ. 1,51,093-60.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துந்துபி ஸு ஆவணி மீ	ஆரம் 8

பொருளடக்கம் — பக்கம்

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்குவந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லே. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம்பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியதுமுதல் அல்லது அடுத்த மாதம்முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும் படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினேந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாதலால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறுகிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப்பயனடையக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

கோவை ஜில்லா—செங்குட்டைப் பாளையத்தில் 18—8—82 புதன்கிழமை

இடம்: சுவாமி சித்பவானந்த கிராம சேவா சங்கம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—பல்லடத்தில் 29—8—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: காந்திரோடு, ஹைஸ்கூல் எதிரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—அம்பாசமுத்திரத்தில் 29—8—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு அகஸ்தியர் கோவில்
நேரம்: காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

கோவை ஜில்லா—சித்திரச்சாவடியில் 5—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம், மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம்செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சி ஜில்லா—கைலாசபுரத்தில் 5—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாய்லர் பிளாண்ட் நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் நண்பகல் 1-00 மணி வரை
நடத்துபவர் ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—ஓமலூரில் 12—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: குப்புசாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 19—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சி. ச. அண்ணாமலை நாடார் கல்யாண மண்டபம்
(பெரிய காளியம்மன்கோவில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் 12-00 மணிவரை,
மாலை 5-00 மணி முதல் 8-00 மணி வரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துந்துபி ஹூ ஆவணி மீ	ஆரம் 8

பிரார்த்தனை

यातीतगोचरा वाचां मनसां चाविशेषणा ।
ज्ञानिज्ञानपरिच्छेद्या तां वन्दे चेश्वरीं पराम् ॥

— विष्णु पुराणम्

யாதீதகோசரா வாசாம் மனஸாம் சாவிசேஷணா ।
ஞானி ஞானபரிச்சேத்யா தாம் வந்தே சேச்வரீம் பராம் ॥

— விஷ்ணுபுராணம்

மனம் மொழிகளுக்கு எட்டாதவளும் ஞானியர்கள் ஞானத்தால் அறியப்படுபவளுமாகிய உன்னுடைய சக்தியாகிய சர்வேச்வரியை நான் போற்றுகிறேன்.

வந்தித்து நின்னை மறவாக் கடன்ஆகச்
சிந்திக்க நின்னதுஅருள் செய்யாய் பராபரமே.

— தாயுமானவர்.

அருள் விருந்து

நல்லாரிணக்கம் மனிதனை மேலோனாக்குகிறது.

கள்குடி ஒரு சமுதாயத்தை அதிவிரைவில் பாழ்படுத்துகிறது.

பிரபஞ்ச வாழ்வு துன்பக்கடல்; பாரமார்த்திகப் பெருவாழ்வு இன்பக் கடல்.

பொறை பெண்ணின் பாங்கு; அதேபாங்கில் பணிவு பண்பட்டவன் பாங்கு.

விதை விதைப்பதற்கு நிகர் எண்ணம்; அறுவடை செய்வதற்கு நிகர் அதன் விளைவு.

துணிந்து தீய செயலில் ஈடுபடுகிறவனை எந்தவித விரதமும் பண்படுத்த மாட்டாது.

நலனை உறுதியாகக் கடைப்பிடிப்பது யாண்டும் எல்லார்க்கும் பொது வான நியதியாம்.

நனவிலே நம்மைப்பேணிவரும் இப்பரந்த உலகம் உறக்கத்திலே மறைந்து பட்டுப் போகிறது.

பரம்பொருளை அறிந்துகொள்ள விரும்புகிறவன் உலக வியவஹாரங்களை ஒதுக்கித்தள்ள வேண்டும்.

பிறரிடம் குற்றமே காண்பவன் தன்னிடத்துள்ள குற்றத்தைப் பிறர் எடுத் துக்காட்டினால் அதை அவன் சகியான்.

நாம் அறிந்திருக்கும் பொழுதும் அறியாதிருக்கும் பொழுதும் இறைவன் அருள் நம்மைக் காப்பாற்றி வருகிறது.

விருப்பு வெறுப்பு, இன்பத்துன்பங்கள் ஆகிய இருமைகளை ஒழித்தா லொழிய பரம்பொருளின் காட்சி கிட்டாது.

சாந்தமே வடிவெடுத்திருப்பது பரமனுடைய பாங்கு. ஆதலால்தான் அவரைத் தாக்குபவர்களையும் அவர் தாங்கி வருகிறார்.

உலகப்பற்று அதிகரிப்பதற்கேற்பக் கவலைகளும் அதிகரிக்கின்றன. தெய் வப்பற்று ஓங்குதற்கேற்பக் கவலைகள் அழிந்துபட்டுப்போகின்றன.

மயக்கமும், தயக்கமும் இடையிடையே மனிதனை வந்து தாக்குகின்றன ஆனால் தீவிர அதிகாரி அதிவிரைவில் அவைகளை ஒதுக்குகிறான். இறைவா, தீய எண்ணங்களை என் உள்ளத்தினின்று தயை கூர்ந்து தகர்த்துத் தள்ளுவாயாக.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

இரவு மணி ஒன்பது. கிரீஷரின் இல்லத்துக்கு எழுந்தருளப் பரமஹம்சதேவர் ஆயத்தமானார். அன்று இரவு பரமஹம்சதேவர் பலராம் போஸுவின் இல்லத்தில் அமுது பண்ண ஏற்பாடாகியிருந்தது. ஆதலால் பலராம் போஸுவுக்கு எந்தவித ஏமாற்றமும் உண்டாகாதபடி பரமஹம்சதேவர் பார்த்துக்கொண்டார். அவர் பகர்ந்ததாவது: ''நீ நமக்காகவென்று ஆயத்தப்படுத்தியிருக்கும் அமுதினை அப்படியே கிரீஷ் சந்திரர் இல்லத்துக்குக் கொண்டுவந்து சேர்ப்பாயாக. ஆங்கு நாம் அனைவரும் ஒன்று கூடி அதை ஏற்றுக்கொள்வோம்.''

பலராம்போஸுவினுடைய மாளிகையின் மாடியிலிருந்து பரமஹம்சதேவர் கீழே இறங்கி வந்துகொண்டிருந்த பொழுது அவருக்கு ஆனந்தப் பரவச சமாதி கூடியது. குடிவெறி பிடித்தவன் போன்று அவர் தென்பட்டார். அவருக்கருகில் நாராயணனும் மகேந்திரரும் இறங்கி வந்துகொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து ராம், சீனன் ஆகிய மற்ற பக்தர்கள் வந்துகொண்டிருந்தனர். மாடிப்படியைக் கடந்து தரைக்கு வந்தபொழுது பரமஹம்சதேவர் ஆழ்ந்து சமாதியில் மூழ்கினார். கால் தவறி அவர் கீழே விழாதிருத்தல் பொருட்டு நாராயணன் முன் வந்து அவருடைய கரத்தைப் பற்றினான். பரமஹம்சதேவர் அவன் அங்ஙனம் செய்ததை ஆமோதிக்கவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு பரமஹம்சதேவர் பரவசநிலை கலைந்து புறவுலக ஞாபகத்துக்கு வந்தார். அப்பொழுது அன்போடு நாராயணனிடம் இயம்பியதாவது: ''நீ இப்படி என்னைத் தாங்கிப் பிடித்தால் நான் குடி மயக்கத்தில் இருக்கிறேன் என்று பார்ப்பவர்கள் பொருள் படுத்துவார்கள். ஆதரவு ஏதுமின்றி நானே நடந்து வருகிறேன்.''

கிரீஷ்சந்திரகோஷருடைய வீடு அருகிலிருந்தது. போஸ்பரா சந்தையைக் கடந்து பரமஹம்சதேவர் நடந்து போனார். சிறிது நேரத்துக்குள் அவர் விரைந்து நடக்க ஆரம்பித்தார். அவர் போன வேகத்தை முன்னிட்டுப் பக்தர்களுக்கு அவரைத்தொடர்ந்து செல்ல இயலாது போயிற்று. அப்பொழுது சிறிது தூரத்துக்கு அப்பால் நரேந்திரன் இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது தென்பட்டது. பொதுவாக நரேந்திரனைப் பற்றி நினைக்கும்பொழுதோ அவனைப்பற்றிக் கேள்விப்படும்பொழுதோ பரமஹம்சதேவர் அகமகிழ்வு மிகக்கொள்வார். ஆனால் இப்பொழுதோ தம்முடைய அன்புக்குரிய சிஷ்யனோடு அவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

கிரீஷ்சந்திரருடைய இல்லத்துக்கு அருகில் வந்தபொழுது பரமஹம்சதேவர் படைத்திருந்த பரவசநிலையினின்று உலக ஞாபகத்துக்கு அவருடைய மனது கீழே இறங்கி வந்தது. உள்ளன்போடு நரேந்திரனிடம் அவர் வினவியதாவது: ''குழந்தாய், நீ நலனுற்று இருக்கின்றாயா? சிறிது நேரத்துக்கு முன்பு உன்னோடு உரையாட எனக்கு இயலவில்லை. அப்பொழுது என் மனது பரநாட்டத்தில் ஆழ்ந்து மூழ்கியிருந்தது.'' பரமஹம்சர் பகர்ந்த ஒவ்வொரு சொல்லிலும் இனிய அன்பு சொட்டிக்கொண்டிருந்தது. கிரீஷருடைய இல்லத்துக்கு அருகில் வந்தாய்விட்டது. ஆயினும் அவர் இல்லத்தை அவர் இன்னும் எட்டவில்லை. நடந்து வந்தவர் திடீரென்று நின்றுகொண்டார். நரேந்திரனிடம் அவர் இயம்பியதாவது: '' உன்னிடம் ஒன்று சொல்லுகிறேன், கேள்.' தம் சரீரத்தைச் சுட்டிக் காட்டி, 'இது ஒன்று.' பிறகு, நரேந்திரனுடைய சரீரத்தைத் தொட்டு 'இது மற்றொன்று,'' என்று இயம்பினார். அப்படி அவர் சொல்லிக்கொண்டிருந்த பொழுது தமது உள்ளத்தினுள்ளே தாம் கொண்டிருந்த கருத்து யாது என்று யார்தான் யூகிக்க முடியும்!

பரமஹம்சதேவரை வரவேற்கும் பாங்கில் கிரீஷர் வாயிலண்டை நின்று

கொண்டிருந்தார். இல்லத்தினுள்ளே பரமஹம்சதேவர் பிரவேசித்தபொழுது கிரீஷர் அடியற்ற மரம் போன்று விழ்ந்து வணங்கினர். அவரை எழுந்திருக்கும்படி பரமஹம்சதேவர் இயம்பினர். அப்படி எழுந்தவர் தம்முடைய நெற்றியைக்கொண்டு பரமஹம்ச தேவரின் திருவடிகளைத் தீண்டினர். மாடியிலே முன் மண்டபத்தின்கண் பரமஹம்சதேவர் அழைத்துச் செல்லப்பட்டார். உடன் வந்த பக்தர்கள் அக்கூட்டத்தினுள் சென்று ஆங்காங்கு அமர்ந்து கொண்டனர். பரமஹம்ச தேவரைப் பார்த்த வண்ணமாய் இருக்கவும், அவர் பகர்ந்தருளிய அருள் மொழிகளுக்குச் செவி சாய்க்கவும் அவர்கள் ஆவலுற்று இருந்தனர்.

பரமஹம்சதேவர் அமர்தற்கென ஆசனம் ஒன்றுஆயத்தப்படுத்தப்பட்டிருந்தது.அதில் அவர் அமரச் சென்ருர். அப்பொழுது அந்த ஆசனத்துக்கருகில் சமாசாரப் பத்திரிகை ஒன்று கிடந்ததைக் கவனித்தார். உடனே அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று அவர் தெரிவித்தார். அவர் தெரிவித்த படியே அப்பத்திரிகை அப்புறப்படுத்தப்பட்டது. சமாசாரப் பத்திரிகைகளில் உலக விஷயங்களும் வீண் வம்புகளும் பரஸ்பர நிந்தையும் பொய்யும் புளுகும் நிரம்பியிருப்பதால் அவைகள் புன்மையானவை என அவர் கருதினர். அதன் பின்னர் அவர் ஆசனத்தில் அமர்ந்தார். நித்யகோபால் அவர் சந்நிதானத்துக்கு வந்து வீழ்ந்து வணங்கினர்.

பரமஹம்சதேவர்: "தாம் நெடுநாள் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு வரவில்லை."

நித்யகோபால்: "ஆம் ஐயனே. இத்தனை நாள் ஆங்கு வர எனக்கு இயலாது போயிற்று. என் உடல் நிலையும் சிறிது நலம் குன்றியிருந்தது. உடலெங்கும் எனக்கு வலி எடுத்து இருந்தது."

பரமஹம்சதேவர்: "இப்பொழுது எப்படி இருக்கின்றீர்?"

நித்யகோபால்: "இப்பொழுதும் நான் முற்றிலும் குணமடைந்தவனல்லன்."

பரமஹம்ச தேவர்: "உம்முடைய மனதுக்குச் சிறிது ஒய்வு தாரும்."

நித்யகோபால்: "உலகத்தவர் இணக்கம் எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் என்னைக் குறித்து ஏதேதோ இயம்புகின்றனர். சில வேளைகளில் அதைக் குறித்து நான் மனக் கிலேசம் அடைகிறேன். பிறகு அதி விரைவில் என் மனதை நானே தேற்றிக்கொள்கிறேன்."

பரமஹம்சதேவர்: "அது இயல்பே. உம்மோடு யார் வசித்து வருகிருர்?"

நித்யகோபால்: "தாரக் என்னோடு வசித்து வருகிருன். அவன் எப்பொழுதுமே என்னோடு கூடியிருக்கிருன். ஆயினும் சில வேளைகளில் அவனுடைய கூட்டுறவும் எனக்கு உபத்திரவமாயிருக்கிறது."

பரமஹம்சதேவர்: "என்னை ஆட்கொண்டவர் விஷயம் ஒன்றை எனக்குத் தெரிவித்தார். அவருடைய மடாலயத்திலே துறவியர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்கு யோகசித்திகள் சில வாய்த்திருந்தன. அவருடைய கண் பார்வை வானத்தைப் பார்த்த வண்ணமே அவர் இங்குமங்கும் நடமாடினர். அன்னவருடன் வாழ்ந்திருந்த மற்றொரு துறவியர் அவரைவிட்டுப் பிரிந்துபோனதை முன்னிட்டு அவர் கவலை மிகக்கொண்டார்."

சிறிது நேரத்திற்குப் பிறகு பரமஹம்ச தேவருக்குச் சமாதிநிலை கூடியது. ஏதோ எண்ணங்கள் அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்தன. ஆதலால் அவர் பேச்சற்று இருந்தார். சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் இயம்பியதாவது: "நீ இங்கே வந்துள்ளாயா? நானும் இங்கே இருக்கிறேன்." இத்தகைய பேச்சின் உட்பொருளை யார் அறிய வல்லவர்?

பரமஹம்சதேவரின் பக்தர்களில் பலர் ஆங்கு அறையினுள் இருந்தனர். அவர்களுள் நரேந்திரன், ராம், கிரீஷ், ஹரிபாதர், சீனன், பலராம், மகேந்திரர் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆயினர். பரம்பொருள் மானுட வடிவத்தில் அவதரித்து வருகிருர் என்னும் கொள்கையை நரேந்திரன் அக்காலத்தில் நம்பவில்லை. ஆனல் கிரீஷர் கொண்டிருந்த கொள்கை அதற்கு முற்றிலும் மாருனது. இடையிடையே பரம்பொருள் மானுட வடிவம் பூண்டு அப்போ

தைக்கப்போது தேவையாயிருந்த தெய்வி கக் கோட்பாடுகளை நிறைவேற்றி வைப்ப தற்கு அவதரித்து வருகிறுர் என்பது கிரீஷ் சந்திரர் கொள்கை.

பரமஹம்சதேவர் கிரீஷரிடம் பகர்ந்ததா வது: ''நீயும் நரேந்திரனும் ஆங்கிலத்திலே உரையாடுவதைக் கேட்க நான் விரும்பு கிறேன்.''

சம்வாதம் துவங்கியது. ஆனல் அவர் கள் ஆங்கிலத்தில் பேசவில்லை. தங்களுடைய தாய்மொழியாகிய வங்காள மொழியில் பேசினர். நரேந்திரன் இயம்பியதாவது: ''கடவுள் அகண்ட வஸ்து; அவரைக் கிர ஹிக்க நமக்கு இயலாது. எல்லார் உள்ளத் திலும் அவர் வீற்றிருக்கிறுர்; யாரோ ஒரு மூர்த்தியின் வாயிலாக அவர் தம்மை விளக் கிக்கொள்ளுகிறுர் என்பது உண்மையன்று.''

பரமஹம்சதேவர் இனியபாங்கில் பகர்ந்த தாவது: '' நரேந்திரனுடைய கொள்கை எனக்கு முற்றிலும் சம்மதம். கடவுள் எங்கும் நிறைபொருள். ஆயினும் அவரு டைய மகிமையானது வெவ்வேறு மூர்த்தி களில் வெவ்வேறு பாங்குகளிலே தன்னை விளக்கிக் கொண்டிருக்கிறது. அப்பரம னுடைய அவித்யாசக்தி சில இடங்களில் ஓங்கியிருக்கிறது. வேறு சில இடங்களில் அவருடைய வித்யாசக்தி முன்னணியில்வந்து நிற்கிறது. பலப்பல கருவிகளின் வாயிலாக அவருடைய விபூதிகள் வெவ்வேறு படித் தரங்களில் விளங்கிக்கொண்டிருக்கின்றன. ஆதலால் பான்மையிலே மக்கள் எல்லாரும் ஒரே தரத்திலிருப்பவர்கள் அல்லர்.''

ராம் : ''இத்தகைய பயன்படாத விவா தங்களால் ஆவதென்ன?''

பரமஹம்சதேவர்: (சிறிது ஆத்திரத் துடன்)''இல்லை! இல்லை! இத்தகைய ஆராய்ச் சியில் பயன் மிக உண்டு.''

கிரீஷர்: (நரேந்திரனைப் பார்த்து) ''கட வுள் மானுட வடிவெடுப்பதில்லை என்று நீ பகருகின்றுய். அதற்கு ஆதாரம் எங்கு உளது?''

நரேந்திரன்: ''கடவுள் மனம், மொழிக்கு எட்டாதவர்.''

பரமஹம்சதேவர்: ''இல்லை. அப்படி யில்லை. தூய அந்தக்கரணத்தைக்கொண்டு பரமனை அறிந்துகொள்ளலாம். தூய அந் தக்கரணமும் பரம்பொருளும் ஒன்றே. ஞானிகள்பரம்பொருளைத்தங்களுடைய தூய ஞானக்கண் கொண்டுதரிசிக்கலாயினர்.''

கிரீஷர்: (நரேந்திரனிடம் பகர்கிறுர்): ''கடவுள்தாமே மானுட வடிவெடுத்து வந்து பாரமார்த்திகப் பேருண்மைகளைப் புகட்டா விட்டால் வேறு யார் அச்செயலைச் செய்ய முடியும்? பரஞானத்தையும் பக்தியையும் புகட்டுதற்கென்றே பரமன் மானுட வடி வெடுத்து வருகின்றுர். அவர் அங்ஙனம் செய்யாவிட்டால் மக்கள் பரத்தைப்பற்றிய உண்மைகளை ஒருபொழுதும் அறிந்து கொள்ள மாட்டார்கள்.''

நரேந்திரன்: ''கடவுள் நம் எல்லாருடைய உள்ளத்தினுள்ளும் வீற்றிருக்கின்றுர். மனச் சாட்சியாக மனத்தகத்தே அமர்ந்து கொண்டு நமக்கு நலம்தருபவை எவை,கேடு செய்பவை எவை என்பதை யாண்டும் புகட் டிக்கொண்டிருக்கிறுர்.''

பரமஹம்சதேவர்: (கனிந்த பாங்குடன் பகர்கின்றுர்) ''ஆம்; ஆம். மனச் சாட்சியாக உள்ளத்தினுள்ளே இருந்துகொண்டு அவர் நமக்கு யாண்டும் புகட்டிக்கொண்டிருக் கிறுர்.''

படிப்படியாக நரேந்திரனும், கிரீஷரும் ஆழ்ந்த விவாதங்களில் ஈடுபட்டனர். அகண்ட வஸ்துவானது எவ்வாறு துண்டிக் கப்படும்? இக்கோட்பாட்டைப்பற்றி மேல் நாட்டுப் பேரறிஞராகிய ஹேமில்டன் (**Hamilton**) என்ன பகர்ந்துள்ளார்? ஹெர் பெர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer), டென்டால், ஹக்ஸ்லி ஆகியவர்களின் கருத் துக்கள் யாவை? இவைபோன்ற விஷயங் களை அவ்விருவரும் மும்முரமாக ஆராய்ச்சி பண்ண ஆரம்பித்தனர்.

பரமஹம்சர் மகேந்திரரிடம் பகர்வாராயி னர்: '' இதுபோன்ற விவாதத்தைப் பாராட்ட எனக்கு இயலுவதில்லை. எதற் காக விவாதம் பண்ண வேண்டும்? ஈசனே உலகனைத்துமாகஇலங்கிக் கொண்டிருக்கிறுர் என்பதைத் தெற்றென நான் காண்கிறேன். அனைத்துமாய் ஆகியிருப்பவர்அவரே.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

7-6. மூக்குணத்தை ஜீவன்என்னும்மூடத்தை [விட்டு அருளால்
அக்கணமே எம்மை அறிந்துகொள்வது [எந்நாளோ.

சத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களைக் கொண்டு உருவாகியிருப்பது பிரபஞ்சம். இந்த முக்குணங்கள் காரணமாயும் பிரபஞ்சம் காரியமாயும் அமைந்திருக்கின்றன. சத்வ குணத்தின் நிறம் வெண்மை. ரஜோ குணத்தின் நிறம் சிவப்பு. தமோகுணம் கருமை நிறமானது. உயிர்த் தத்துவத்தை விளக்கவல்லது சத்வ குணம். ரஜோகுணம் இயங்கும் பாங்குடையது. தமோகுணம் செயலற்று ஜடமாய்க் கிடக்கிறது. இந்த மூன்று குணங்களுக்கிடையே உள்ள பாகுபாடுகளை முன்னிட்டு ஜகத்திலுள்ள சேதன அசேதனமாகிய அனைத்தும் தோன்றியிருக்கின்றன. மனிதனிடத்தும் இந்த மூன்று குணங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தெளிந்த சாந்த நிலையில் மனிதன் இருக்கின்றபொழுது அவனிடத்துச் சத்வகுணம் ஓங்கி நிற்கிறது. அவன் நடமாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறபொழுது ரஜோகுணம் முன்னணியில் வந்து நிற்கிறது. இதே மனிதன் உறங்கும் பொழுதும் செயலற்று வெறுமனே இருக்கிற பொழுதும் தமோகுணம் ஆதிக்கம் செலுத்துகிறது. இனி ஒருகுணம் மற்றொரு குணமாக மாறியமைய வல்லது. அதன் விளைவாகவே ஜடப்பொருள்கள் படிப்படியாகச் சேதனப் பொருள்களாக முன்னேற்றமடைகின்றன. சில வேளைகளில் சேதனம், அசேதனமாகப் பின்னணிக்குப் போவதும் இயற்கையின் பாங்கு ஆம்.

மனிதன் புரிகிற ஆத்ம சாதனங்கள் வாயிலாக மனிதன் ஜடநிலையினின்று படிப்படியாகச் சேதன நிலைக்கு முன்னேறி வருகிறான். மனிதன் உண்கின்ற உணவிலும் இந்த மூன்று குணங்களும் ஆதிக்கம் செலுத்துகின்றன. தமோகுணமய உணவைப் புறக்கணிக்கவும், ரஜோகுணமய உணவில் தனக்குப் பொருந்திய பகுதியை ஏற்றுக்கொள்ளவும் சத்வகுணம் நிரம்பிய உணவை ஏற்பதன் வாயிலாகவும் சாதனத்தில் மனிதன் முன்னேற்றமடைகிறான். மேலும் உணவை அளந்து உண்பதன் வாயிலாகவும், உறக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைப்பதன் வாயிலாகவும் மனிதன் தமோ குணத்தை வெல்லுகிறான். தீவிரமாக வினையாற்றுவதற்கு இடையில் தன் மனதை நடுநிலை பிறழாது வைத்திருப்பதன் வாயிலாகவும் மனிதன் ரஜோ குணத்தை வெல்லுகிறான். அமைதியாகவும், உற்சாகத்துடனும், தியான சீலனாகவும், இருப்பதன் வாயிலாக மனிதன் சத்வ குணத்தை முற்றிலும் அடையப் பெற்றவனாகிறான்.

இந்த மூன்று குணங்களும் பிரகிருதியின் கூறுகளேயாம். மற்று மனிதனுடைய நிஜ சொரூபம் ஆத்மா. ஆத்மாவானது மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டது. அத்தகைய ஆத்மாவைக் குணமயமாகக் கருதுவது பொருந்தாது. அப்படிச் செய்வது அவிவேகத்தின் அறிகுறியாம். இது இக் கண்ணியின் சாரம்.

7-7. காலைஉயிர் என்னும் கலதிகள்சொல் கேளாமல்
சீலமுடன் எம்மைத் தெளிந்துகொள்வது [எந்நாளோ.

அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விக்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்று ஆத்மாவுக்கு ஐந்து கோசங்கள் அல்லது உறைகள் இருக்கின்றன.

இந்த ஐந்து கோசங்களும் பிரகிருதியின் கூறுகளாம். இவை ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. உணவு உண்பதன் வாயிலாக உடல் உருவெடுத்திருப்பதால் அது அன்னமயகோசம் எனப்படுகிறது. இந்த அன்னமய கோசத்தின் நுண்ணிய பகுதிகளாக ஏனைய கோசங்கள் அமைந்திருக்கின்றன. அன்னமயகோசத்துக்கு மிக அருகில் இருப்பது பிராணமயகோசம். பிராணமயகோசமே உயிர்த்தத்துவம் எனப்

படுகிறது. சில நாட்களாக மனிதன் அன்னம் ஏலாவிட்டால் உயிர் இளைத்துப்போய் பிறகு மடிந்தும் போகிறது. மனிதன் செத்துப் போனால் உயிர் போய்விட்டது என்றோ பிராணன் போய் விட்டது என்றோ சொல்லுகிறோம். ஆத்மா போய்விட்டது என்று சொல்லுவதில்லை. ஏனென்றால் ஆத்மாவுக்கு போக்கோ வரவோ, ஜனனமோ மரணமோ இல்லை. ஆதலால் பிராணனை ஆத்மாவெனக் கருதலாகாது. இதுவே இக்கண்ணியின் உட்பொருளாம்.

7-8. வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை நான்கெடுத்துத் தேடாமல் நன்குஅறிவது [எந்நாளோ.

பஞ்ச பூதங்களுள் அசைவற்றிருப்பதும் செயலற்றிருப்பதும் ஆகாசம் என்னும் முதல் பூதம். ஆகாசம் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கிறது. அதை ஆதாரமாகக் கொண்டு ஏனைய நான்கு பூதங்களால் ஆகிய சந்திரன், சூரியன், பூமி ஆகிய கிரஹங்கள் வான வெளியில் ஆங்காங்கு இடம் பெற்றிருக்கின்றன. இந்தக் கோளங்களுக்கு இடம் மாறிப்போகும் பாங்கு உண்டு. ஆனால் ஆகாசம் எங்கும் வியாபகமாயிருப்பதால் அதற்குப் போக்கும் வரவுமில்லை. இது ஜட ஆகாசம். இதற்கு நிகரார்க ஆத்ம சொரூபம் இருக்கிறது. இது சிதாகாசம் எனப்படுகிறது. சிதாகாசத்துக்கும் போக்கும் வரவும் புணர்வும் இல்லை.

எங்கும் நிறைபொருளாகியஆகாசத்தைத் தேடித்திரிவது அறிவிலார் செயலாகும். அதற்கு நிகராக அறிவு சொரூபியாகிய மனிதன் அறிவு சொரூபமாகிய ஆத்மாவைத் தேடித்திரிவது பொருளற்றதாம். மனிதன் தேடுகிற அனைத்தும் உண்மையில் தன்னிடத்தே அமைந்திருக்கின்றன. பலகோடி ஜன்மங்கள் எடுத்துப் புறத்தில் தேடியலைந்து சலித்துப்போன பின்பே தான் நாடும் பெருநிலை தன்னிடத்தே விருக்கிறது என்பதை மனிதன் அறிய வருகிறான் என்பது இக் கண்ணியின் உட்கருத்து.

8-1. ஈனம் தரும்நாடு இதுநமக்கு வேண்டாஎன்று ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ.

நாம் எடுத்திருக்கும் உடல் இயற்கையோடு சம்பந்தப்பட்டது. இயற்கையில் நலன், கேடு இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. நலனிலே கட்டுண்டு கிடக்கும் நாம் கேட்டை மறந்து விடுகிறோம். மற்று, கேட்டை ஞாபகத்துக்குக்கொண்டுவருகின்ற அளவு உடற்பற்றுத் தானாக ஒடுங்குகிறது. இந்த உடல் வாழ்க்கையைத் தாயுமானவர் ஈனம் தரும் நாடு என்கிறார். ஈனம் என்பது ஹீனம் என்னும் வடமொழியின் திரிபு. கீழ்மையை உண்டுபண்ணுகிற என்பது அதன் பொருள். உடல் வாழ்க்கை கடவுள் வழிபாட்டுக்குப் பயன்படுவது யாரோ சிலருக்குத்தான். பெரும்பான்மையோர் உடல் வாழ்க்கையிலேயே அபிமானம் வைத்து அதில் கட்டுண்டு கிடக்கின்றனர். உடலைப் பேணுதற்காக மனிதன் படாதபாடு படுகிறான். மற்றவர்களுக்கு அடிமையாகின்றான். இவ்விஷயத்தில் மனிதன் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கீழான நிலையை எய்துகிறான். அகப்படுகிற உணவைப் புசித்துச் சிற்றுயிர்கள் திருப்தியடைந்திருக்கின்றன; அயர்ந்து உறங்குகின்றன. ஆனால் மானுடன் ஒருவன் மட்டும் திருப்தி இன்னதென்று அறியாது அல்லும் பகலும் உடலைப்பேணும் விஷயத்தில் கவலையுற்றுக் கிடக்கிறான்.

இதே உடல் வாழ்க்கையைச் சான்றோர்கள் பரநாட்டத்துக்கென்றே பயன்படுத்தினர். ஆதலால் அதைக்குறித்துக் கவலையற்று இருந்தனர். ஆனால் உலகப்பற்றுள்ள மனிதனுடைய போக்கு அத்தகையதன்று. சாதாரணமனிதனுக்குக் கீழே உள்ள விலங்குகளும் பறவைகளும் கவலையற்றிருக்கின்றன. அசாதாரணமான மக்களாகிய சான்றோர்களும் கவலையற்றிருக்கின்றனர். மக்களில் பெரும்பான்மையோர் சாதாரண மானவர்களாகவே இருந்து வருகின்றனர். ஈண்டுத் தாயுமானவர் பகர்வது தம்மைப் பற்றியதன்று. சாதாரண மக்களுக்குப் பாடம் புகட்டும் முறையில் கவலைப்படும் பொறுப்பைத் தம்முடையதாக அவர் எடுத்துக்கொள்கின்றார். ஆத்மசாதகர்கள் தெய்வப்பற்றை வளர்க்கின்றவளவு ஆனந்தம் தரும் நாட்டில் அவதரித்தவர்களாகிறார்கள். இதுவே இக்கண்ணியின் உட்கருத்தாம்.

பாமர மக்களின் நிலை

(சுவாமி விவேகானந்தர்)

பாமர மக்களைப் புறக்கணித்தது நம் நாடு செய்த பெரிய பாபம் என்று நான் நினைக்கின்றேன். நம் நாடு வீழ்ச்சியுற்றதற்கு உள்ள காரணங்களுள் அது ஒன்றாகும். நம் நாட்டிலுள்ள பாமர மக்களைப் பாருங்கள். அவர்கள் முகத்தில் கவலைக்குறி இருப்பதைக் காணுங்கள். அவர்களுடைய இதயம் உற்சாகமோ, ஆர்வமோ உடையதாக இல்லை. அவர்களுடைய வயிறு பருத்து இருக்கிறது. ஆனால் அவர்கள் கை கால்களில் பலம் இல்லை. அற்ப விஷயத்துக்கும் அஞ்சுகின்ற கோழைகளாக அவர்கள் இருக்கின்றார்கள். நம்முடைய தேசம் குடிசையில் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். குடிசைவாழ் மக்களுக்கு யாரும் மனித உணர்வை ஊட்டவில்லை. அவர்களுக்கு மனித உணர்வு இல்லாதவாறு செய்து விட்டோம். அவர்களுடைய உள் ஒளியை வெளிப்படுத்துவதற்கு நாம் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை. ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகமதியர்களும் அவர்களை நசுக்கவே முயல்கிறார்கள். பணம் படைத்தவர்களுக்கு அடிமைகளாக வாழப் பிறந்திருக்கிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டு விட்டது.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த இந்தியர்களைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. இந்திய விவசாயிகளும், நெசவாளிகளும், இன்னும் அவர்களைப் போன்ற தொழிலாளர்களும் அன்னிய நாட்டினர்களால் அடக்கி வைக்கப்பட்டார்கள். அவர்களுடைய சொந்த நாட்டு மக்களும் அவர்களை இழிவாக நடத்தினார்கள். வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் அவர்கள் மௌனமாக உழைத்து வருகிறார்கள். அவர்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தையும் பெறாமல் இருந்து வருகிறார்கள். பிராமணர்களுக்குச் செல்வாக்கும், க்ஷத்திரியர்களுக்குப் பராக்ரமும், வைசியர்களுக்குச் செல்வமும் அப் பாமர மக்களின் உழைப்பு இல்லாவிட்டால் எப்படி நிலைத்து நிற்கும்? சமுதாயத்தின் முக்கியமான பகுதியாக அவர்கள் இருந்தும் கீழான மக்களென்றே எல்லாக் காலங்களிலும் அழைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இந்தியாவினுடைய தொழிலாளிகள்மௌனமாக உழைத்து வந்ததன் விளைவாகப் பாபிலோனியா, பாரசீகம், அலெக்ஸாண்ட்ரியா, கிரீஸ்,ரோம், வெனிஸ், ஜினேவா,பாக்தாத், சாமர்கண்ட், ஸ்பெயின், போர்ச்சுக்கல், பிரான்ஸ், டென்மார்க், ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக மேன்மையையும், புகழையும் அடைந்தன. ஆனால் இந்தியத் தொழிலாளர்களாகிய உங்களுடைய நிலை என்ன? உங்கள் நலனைப் பற்றி நினைப்பவர் யார்?

இந்திய நாட்டுப் பாமர மக்கள் வயிற்றுக்கு உணவு தேடுவதற்கு இரவும் பகலும் உழைத்து வந்தமையால் கல்வி அறிவை வளர்த்துக்கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. இயந்திரம்போன்று அவர்கள் நெடுங்காலம் உழைத்தார்கள். கல்வி அறிவைப் பெற்றிருந்த புத்திசாலிகள் அவர்களுடைய உழைப்பின் பயனை அனுபவித்தார்கள்.

ஆனால் காலம்இப்பொழுது மாறியமைந்து கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் படிப்படியாக எழுச்சி அடைந்துகொண்டிருக்கின்றனர். தாங்கள் உரிமை பெறுவதற்குப் போராடவும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலுமுள்ள பொதுமக்கள்தாம் எழுச்சியுற்று முதல் முதல் போராடத் தொடங்கினார்கள். இந்தியாவில் விழிப்புணர்ச்சி வந்து கொண்டிருக்கிறது என்பதற்குஇப்பொழுது தாழ்ந்த வகுப்பினர்களுக்கிடையே வேலை நிறுத்தங்கள் நிகழ்வது அறிகுறியாகும். இனி, உயர்ந்த வகுப்பினர்கள் எவ்வளவு தான் முயன்றாலும் தாழ்ந்த வகுப்பினர்களை நசுக்கமுடியாது. தாழ்ந்த வகுப்பினர்களுக்குரிய உரிமைகளைப் பெறுவதற்கு உதவுவதன்மூலம்தான் உயர்ந்த வகுப்பினர்கள் நன்மை அடைய முடியும்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-168

943. **விமானஸ்தா விமானஸ்தா**– விமானத்தில் வீற்றிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஊர்ந்து செல்லும் வண்டி வாகனங்கள் விமானங்கள் எனக் கூறப்படுகின்றன. ஜீவாத்மாக்களின் சரீரங்கள் விமானங்களாகப் பயன்பட்டு வருகின்றன. அனந்தங் கோடி சரீரங்கள் அன்னை பராசக்திக்கு விமானங்களாகப் பயன்பட்டு வருகின்றன. சரீரங்களனைத்திலும் அன்னை பராசக்தி வீற்றிருந்துகொண்டு அந்த ஜீவனுடைய பிரபஞ்ச வாழ்க்கைக்கு அதிஷ்டான தெய்வமாக இலங்கி வருகின்றாள். இக்கோட்பாட்டைக் கருத்தில் ஏற்றுக்கொள்ளும் ஆத்ம சாதகனுடைய பொறுப்பு மிகப் பெரியது. அவன் தன்னுடைய சரீரத்தை அன்னை பராசக்தியின் விமானமாகக் கருதுதல் வேண்டும். அது தனக்குச் சொந்தமானதன்று. ஜீவர்கள் பண்பாடடைதற்பொருட்டு அன்னை பராசக்தி ஒவ்வொரு ஜீவனையும் சரீரத்தில் தாற்காலிகமாக வாழ்ந்திருக்க அனுமதித்திருக்கின்றாள். ஆதலால் சரீரவாழ்க்கை நிகழ்ந்துகொண்டிருக்கையில் அந்தச் சரீரத்தைத் தனக்குச் சொந்தம் எனக்கருதுபவன் பிழைபோகிறான். அன்னை பராசக்தியின் விமானம் அவனிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தூய நிலையில் அதைக் காப்பாற்றி வைப்பது ஆத்மசாதகன் கடமை. அதை வைத்துக்கொண்டு தான் எங்குச் சென்றாலும் எக்காரியத்தை நிறைவேற்றினாலும் அவை யாவும் அன்னையின் கிருத்தியங்கள் என்றே அவன் கருதுதல் வேண்டும். அந்தச் சாதனத்தில் உறுதி பெறுதற்கேற்ப அகங்காரமும் மமகாரமும் அவனைவிட்டு அகன்று போகின்றன. அன்னையின் அருளுக்கு அன்னவன் தகுதியுடையவன் ஆகிறான்.

விமானம் என்னும் சொல்லுக்குப் பொருத்தமான பொருள் மற்றொன்று உளது. வி அல்லது விசேஷமாக, மான-பக்தர்களைப் பாதுகாப்பதில் கருத்துடையவளாக, ஸ்தா—அன்னை பராசக்தி இருக்கின்றாள். பக்தர்களைப் பொறுப்புடன் காப்பாற்றுவது அவளுடைய கடமையாகின்றது. பக்தர்கள் பக்தியிலே மேலோங்கிப் போகப்போக அன்னவர்கள் அகங்காரம், மமகாரம் அற்றவர்களாகின்றார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அகங்காரமில்லை, மமகாரமில்லை. அத்தகைய சிசுக்களைப் பரிபாலிப்பது பெற்றெடுத்த தாயின் பொறுப்பாகிறது. அகிலாண்டகோடி ஜீவர்களை ஈன்றெடுத்த அன்னை பராசக்தி அத்தனை ஜீவர்களையும் முறையாகக் காப்பாற்றி வருவதற்கிடையில் தன் பக்தர்களைக் காப்பாற்றுவதில் தனிக் கருத்துச் செலுத்துகின்றாள். பிரகலாதன், திருநாவுக்கரசர் ஆகியவர்களை இக்கோட்பாட்டுக்குச் சான்றுகளாக எடுத்துக்கொள்ளலாம். எத்தனை எத்தனையோ இன்னல்களும் சோதனைகளும் அந்தப் பக்தர்களுக்கு இடைஞ்சல்களாக வந்து அமைந்தன. அவைகளை இடைஞ்சல்களாக அந்தப்பக்தர்கள் கருதவில்லை. ஏனென்றால் அவர்களுடைய மனது முழுதும் பரநாட்டத்திலேயே இலயித்திருந்தது. அத்தகைய அனன்ய பக்தி வாய்க்கப் பெற்ற பக்தர்களுக்குக் கேடுவராது காப்பாற்றுவது அன்னையின் பொறுப்பு ஆயிற்று. எக்காலத்திலும் இப்பொறுப்பை அன்னை பராசக்தி நிறைவேற்றி வருகின்றாள். ஆதலால் அது காலத்தைக் கடந்துள்ள ஓர் அருள்நிலையாம். அன்னை பராசக்தி யாண்டும் இப்பொறுப்பை நிறைவேற்றி வருகின்றாள்.

மானம் என்பது மனதின் வியவகாரச் செயல் ஆகும். விமானம் என்பது பிரகிருதி சம்பந்தமான வியவகாரங்களனைத்துக்கும் அப்பாற்பட்டது. ஆங்கு மனது செயல் புரிவதில்லை. ஆகையினால் அது மனதற்ற பரிசுத்தநிலை அல்லது பரபிரம்ம போதமாகிறது. பிரபஞ்சத்தின் செயல்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பார்மார்த்திகப் பெருநிலையில் நன்கு வீற்றிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள். தீவிர ஆத்ம சாதகன் தன்னுடைய மனதை ஒதுக்கித் தள்ளிவிட்டு அன்னையின் அருளால் இந்த அதீத நிலையை அடைவது சாத்தியம்.

944 **வஜ்ரிணீ வஜ்ரிணீ** — வஜ்ராயுதத்தை உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

ஆயுதங்களுள் 'நான் வஜ்ராயுதமாய் இருக்கிறேன்' என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம் மஹிமைகளைக் குறித்துக் கீதையில் பகர்கிறார். வஜ்ராயுதம் மனிதனுக்குரியதாகிறது. தெய்வ சம்பத்தைப் பகர வருகிற பரமாத்மா சக்ராயுதத்தைப் பகர்ந்திருக்கலாம், கதாயுதத்தைப் பகர்ந்திருக்கலாம், சூலாயுதத்தைப் பகர்ந்திருக்கலாம்—இவை யாவற்றையும் ஒதுக்கிவிட்டு வஜ்ராயுதத்தைப் பகர்வதில் சிறந்த கருத்து ஒன்று இருக்கிறது. தெய்வங்கள் படைத்திருக்கிற சக்ராயுதம், தெய்வத்திடத்து இன்றியமையாது அமைந்திருக்கிற தர்ம சக்கரத்தைக் குறிக்கிறது. சூலாயுதம் யாண்டும் தெய்வம் செய்து சாதிக்கின்ற அஞ்ஞான இருளை நீக்கும் செயலைக்குறிக்கிறது. ஆகவே, தெய்வங்களுக்குரிய ஆயுதங்கள் அந்தந்தத் தெய்வத்தினிடத்து விபூதியாய் அமைந்திருக்கும் மஹிமைக்கு விளக்கமாய் அமைந்திருக்கின்றன. மற்று, வஜ்ராயுதம் அத்தகையதன்று. மனிதன் தன்னை மேலோனாகத் திருத்தியமைத்துக் கொள்ளும் செயலுக்குச் சின்னமாய் அது அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் நிறைமனிதனாகப் பண்பாட்டில் மேலோங்கி வருகிற பொழுது அவன் வஜ்ராயுதமாகத் திருந்தியமைகிறான்.

தேவேந்திரன் படைத்திருக்கும் வஜ்ராயுதம் ததீசி மஹரிஷியின் அஸ்தியினின்று அமைக்கப்பெற்றது. தேவர்கள் எல்லாரும் பெரிதும் அசுரர்களிடம் தோல்வியடைந்து வந்தனர். அதைக் குறித்து அவர்கள் படைப்புக் கடவுளாகிய பிரம்ம தேவனிடம் சென்று முறையிட்டனர். அதற்குப் பிரம்மதேவன் வஜ்ராயுதத்தைக் கொண்டு தான் அசுரர்களைத் தோற்கடிக்க முடியும் என்று பகர்ந்தார். புராண வரலாறாக இக் கோட்பாடு பகரப்பட்டது. பிறவியிலிருந்தே பிரம்மச்சரிய விரதத்தினின்று பிறழாதிருக்கும் முனிவர் ஒருவர் மனமுவந்து பிரம்ம நிஷ்டையிலிருந்து கொண்டு தம் சரீரத்தை ஒதுக்கவேண்டும். அத்தகைய சரீரத்தினுள்ள எலும்பினால் வஜ்ராயுதம் அமைக்கப் பெறுகிறது. அசுரர்களைத் தோற்கடிப்பதற்கு அந்த ஆயுதம் ஒன்றே உற்ற உபாயம் ஆயிற்று. தேவேந்திரனும் தேவர்களும் தங்கள் நோக்கம் நிறைவேறுதற் பொருட்டுத் ததீசிமஹரிஷியை அணுகினார்கள். அவர் நைஷ்டிக பிரம்மச்சாரி. ஆதலால் அவருடைய சரீரத்திலிருந்த எலும்பு வஜ்ராயுதம் செய்வதற்குப் பொருத்தமாயிருந்தது. அவரும் பிரம்மநிஷ்டையிலிருந்து கொண்டு தம் சரீரத்தை ஒதுக்கினார். அதன் எலும்பினின்று தேவர்கள் வஜ்ராயுதத்தை அமைத்தனர். அசுரர்களைத் தோற்கடித்தனர். இது புராண வரலாறு. இதில் அடங்கியிருக்கும் தத்துவமே முக்கியமானது.

மானுடன் ஒருவன் பிறப்பிலிருந்தே நைஷ்டிக பிரம்மச்சாரியாக வாழ்ந்து வருவானாகில் அவனிடத்து அலாதியான தெய்வீக ஆற்றல்கள் வடிவெடுக்கின்றன. பண்பாடே வடிவெடுத்திருக்கிற அம்மனிதன் உலக நன்மைக்காக உழைப்பானாகில் உலகிலுள்ள கேடுகள் பலவற்றை அகற்றுதற்கு அவனுக்குச் சாத்தியமாகிறது. கேடுகளே அரக்கர்கள் என உருவகப்படுத்திப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆக, பண்பிலும் சீலத்திலும் ஒழுக்கத்திலும் மேலோனாவதற்கு ஏற்ப ஒரு மனிதன் தானே வஜ்ராயுதமாகத் திருந்தியமைகிறான். தீமைகளை அகற்றும் விஷயத்தில் அன்னவன் அலாதியான வல்லமை படைத்தவனாகிறான். இதுவே அடிப்படைத் தத்துவம்.

இனி, வஜ்ராயுதத்திற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அது கூர்மையில் க்ஷவரக் கத்திக்கு ஒப்பானது. வலிமையில் கோடரிக்கு ஒப்பானது. எஃகினால் செய்யப்பட்ட கோடரி ஒன்றைக்கொண்டு க்ஷவரம் பண்ணலாம்; பிறகு அதே கோடரியைக் கொண்டு மரம் வெட்டலாம், விறகு பிளக்கலாம். மாறி மாறி மரம் வெட்டுகிற செயலும் க்ஷவரம் பண்ணுகிற செயலும் நிகழலாம். எக்காரணத்தை முன்னிட்டும் அந்த ஆயுதத்தின் கூர்மை மழுங்கிப்போவதில்லை, உறுதிப்பாடு கெடுவதில்லை. இந்த விளக்கம் மனிதனு

டைய பண்புக்கு ஒத்ததாகிறது. பண்பட்ட மேலோன் யாண்டும் தன் தூய்மையினின்று பிசகாதிருக்கிறன். வாழ்க்கை சம்பந்தமான நுட்பங்களை அறிந்துகொள்ளும் வல்லமை அவனுக்குண்டு. அத்தகைய அறிவுத்திறன் கூர்மையான க்ஷுவரக்கத்தியோடு ஒப்பிடப் படுகிறது. சோதனைகள் பல நிறைந்துள்ள கஷ்டமான செயல்களை விளையாட்டுப் போன்று செய்து சாதிக்கும் வல்லவனாக அதே மேலோன் அமைகிறன். அது அவன் படைத்துள்ள வல்லமையின் விளைவு. அந்த வல்லமை விறகு பிளக்கும் கோடரியோடு ஒப்பிடப்படுகிறது. இத்தகைய நுண்ணறிவும் பேராற்றலும் வாய்க்கப்பெற்ற சான்றோர்கள் உலக நலனில் ஈடுபடுவார்களானல் அதிலுள்ள கேடுகள் பலவற்றை நீக்கித் தள்ள அன்னவர்களுக்கே இயலுகிறது.

ஒவ்வொரு மனிதனும் முயற்சியால் தன்னை வஜ்ராயுதமாகத் திருத்தியமைத்துக்கொள்ள இயலும். வாழ்வாங்கு வாழ்வதின் விளைவு இது. சமுதாயம் ஒன்றில் வஜ்ராயுதம் போன்ற பெருமக்கள் பலர் தோன்றுவார்களாகில் அவர்களே அந்தச் சமுதாயத்திலுள்ள கேடுகளைஅகற்ற வல்லவராகின்றனர். அத்தகைய வஜ்ராயுத மயமாக அன்னை பராசக்தி இருக்கிறள். ஏனென்றல் அவளுடைய திட்டம் மக்களை வல்லமை வாய்ந்த, அறிவு நிறைந்த மேலோராகத் திருத்தியமைப்பதேயாம். ஆக, மக்களுள் அன்னை பராசக்தி உபாசனை பண்ணுகிறவர்கள் வழிபாட்டிலே முறையாக ஈடுபடுதல் வேண்டும். அதன் வாயிலாக அவர்கள் ததீசி மஹரிஷி போன்று தவ சிரேஷ்டர்களாகத் திருந்தியமைவார்கள். அன்னை தானே வஜ்ரிணீயாக இருந்து இத்தத்துவத்தை விளக்கி வருகின்றள்.

அகத்துறவு சிறந்தது

ஒரு பெரிய ஓடையில் முழங்கால் அளவு நீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அவ் ஓடையைக் கடந்து ஓர் அவசரமான காரியத்துக்குப் போவதற்காக இளநங்கை ஒருத்தி ஓடையின் கரையில் நின்றுகொண்டிருந்தாள். அவ்வமயம் ஒரு குருவும் சிஷ்யனும் அங்கு வந்து சேர்ந்தார்கள். குரு முதலில் ஓடையில் இறங்கச் சிஷ்யன் அவர் பின்னல் ஓடையில் இறங்கினன். அப்பொழுது அந்நங்கை தன்னுடைய அவசரமான நிலையை அவர்களிடம் விளக்கி ஓடையைக் கடக்க உதவவேண்டுமென்றள். சிஷ்யன் அவ் இளநங்கையின் கையைப் பற்றிப்பிடித்து ஓடையைக்கடக்க உதவினன். ஓடையைக் கடந்ததும் அந்நங்கை அவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டுச் சென்றள்.

அன்று மாலை குருவும் சிஷ்யனும் போய்ச்சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்தார்கள். அவ்விருவரும் ஆங்கு ஓர் அறையில் தங்கியிருந்தபொழுது வழியில் நடந்த நிகழ்ச்சியைக் குறித்து அவர்கள் சம்பாஷித்துக் கொண்டார்கள்.

குரு: நீ ஓர் இளைஞன். வழியில் ஓடையைக் கடக்கும்பொழுது இளநங்கை ஒருத்தியின் கையைப் பற்றிக் கொண்டுவந்தது பொருந்தாது.

சிஷ்யன்: நான் அவ்இளநங்கையின் நிலையைக்குறித்துப் பரிதாபப்பட்டேன். ஓடையைக் கடப்பதற்கு அப்பெண்ணுக்கு உதவிசெய்யும் வாய்ப்புக் கிடைத்ததைத் தெய்வப் பணியாக எண்ணிச் செய்தேன். கரை சேர்ந்ததும் அந்நிகழ்ச்சி என் உள்ளத்தை விட்டு அடியோடு மறைந்துவிட்டது. தாங்கள் இப்பொழுது அப்பெண்ணைத் தங்கள் உள்ளத்தில் இங்கேயே எடுத்துக்கொண்டு வந்துவிட்டீர்கள்.

அகத்துறவுதான் மேலானது. புறக்கரணங்கள் செயலில் ஈடுபட்டிருப்பதற்கிடையில் அகத்தில் தெய்வம் குடிகொண்டிருப்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இருக்க வேண்டும். தெய்வம் தவிர நம் உள்ளத்தில் வேறு எதுவும் இடம் பெற்றுவிடக்கூடாது.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (319) *கடவுள் வழிபாட்டுக்காகத் தீபம் ஏற்றுகிறேம். நாமே அதை அணைக் கலாமா? எப்படி அணைப்பது?*

கடவுள் வழிபாட்டில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று மானச பூஜை. மற்றது பாகிய பூஜை. இவ்விரண்டினுள் மானச பூஜை மிக முக்கியமானது. அதை உறுதிப்படுத்துதற்குப் பாகிய பூஜையை அமைத்துக் கொள்கிறேம். பாகிய பூஜையில் வழிபாட்டுக்குரிய மூர்த்தியை ஒரு விக்ர ஹத்தின் வாயிலாக அல்லது ஒரு படத்தின் வாயிலாக வழிபடுகிறேம். அத்தகைய பாகிய பூஜையில் கையாளும் பொருள்கள் யாவும் மானச பூஜைக்குப் புறச் சின்னங் களாக அமைந்திருக்கின்றன. மனதில் எழும் மேலாம் எண்ணங்களுக்கு அறிகுறி யாக அன்றலர்ந்த தூயமலர்களைக் கையாளு கிறேம். அதே விதத்தில் மனத்தகத்து ஏற்றி வைக்கவேண்டிய விவேகம் என்னும் விளக்குக்குப் புறச்சின்னமாகப் பாகிய பூஜையில் தீபம் ஏற்றி வைக்கிறேம். இங் ஙனம் தீபம் ஏற்றிவைப்பது முக்கியமான தன்று. இதன் உட்பொருளாகிய உள்ளத் தினுள் அமைந்திருக்கும் ஞானவிளக்கே முக்கியமானது. புறத்தில் செய்யும் பூஜை யில் பொருள்களைப் பலர் மிகைபட்ப் பயன் படுத்துதலில் வீண் செலவு செய்கின்றனர். அதற்குச்சான்று ஒன்று. எண்ணெய் விளக்குக்குப் பதிலாக நெய் விளக்கு ஏற்று வது வீண் செலவு. மக்களில் பலபேருக்கு உண்ணுதற்கு நல்ல நெய் கிடைப்பதில்லை. இந்த நெருக்கடியில் நெய் விளக்கு ஏற்றி வைப்பது பக்திக்கு அறிகுறி அன்று; அது வீண் ஆடம்பரச் செலவாம். ஈண்டு எழுந் திருக்கும் கேள்வி விளக்கேற்றி வைப்பதை ஒட்டியதாம். இக்கேள்விக்கு விடையில்லை. ஏனென்றல் ஏற்றி வைத்த விளக்கை அணைப்பதும், தானே அணைந்துபோகும்படி விட்டுவிடுவதும் வழிபடுபவருடைய மனப் பான்மையை ஒட்டியதாம். இதைக் குறித்துச் சாஸ்திரம் என்ன சொல்லுகிறது அல்லது சான்றேர் என்ன சொல்லுகிறர் என்னும் ஆமோதிப்பை நாடுவதே பொருளற்றதாம். ஒவ்வோர் ஆத்மசாத கனும் இதுபோன்ற சிறிய செயல்களைச் சம யோசிதம் போன்றும், தன் மனதுக்கு ஏற்ற முறையிலும் கையாளுதலே சிறந்ததாம்.

கேள்வி: (320) *பொருந்தாத காம விகாரம் படைத்தவர்கள் கடவுளை அடைய முடியுமா?*

மக்கள் எல்லாரும் கடவுளை அடைய முடி யும். அப்படி அடைதற்கான நிபந்தனையை நிறைவேற்ற ஆத்ம சாதகன் ஒவ்வொருவ னும் கடமைப்பட்டிருக்கிறுன். காமவிகா ரம் என்பது மனதின் பண்படாத கீழான பாங்காம். காமவிகாரம் தன்னள வில் கேடுடையதன்று. காம நோய்க்கு உட் படாதவனே மக்களுள் தலைசிறந்தவனு கிறுன். மற்று மக்களுள் பெரும்பான்மை யோர் காமவெறிக்கு அடிமைப்பட்டவர் களாகவே வாழ்ந்து வருகின்றனர். முயற்சி யின் வாயிலாகக் கீழானஇயல்புகளை மேலான இயல்புகளாக மாற்றிக்கொள்ளுவது மனி தனுக்குச் சாத்தியம். இதையொட்டிய கோட்பாடு ஒன்றைப் பௌதிக விஞ்ஞானத் தினின்று மனிதன் கற்றுக்கொள்ளவேண் டும். ஒரு நிலையிலுள்ள விசை (energy)யை மற்றொரு நிலைக்கு மாற்றுவது விஞ்ஞானத் தின் செயல். மின்சக்தி என்னும் விசையை வெப்பமாகவும், வெளிச்சமாகவும், ஓசையா கவும் மாற்றுவது நாம் அனைவரும் அறிந் துள்ள விஷயமாம். அதேவிதத்தில் மனிதன் தன்னிடத்துள்ள காமம், குரோதமாகிய கீழான இயல்புகளைத் தெய்வீகம் நிறைந்த மேலான இயல்புகளாக மாற்றியதற்கு எடுத் துக்காட்டாகச் சான்றேர்களின் ஜீவிதங் கள் அமைந்திருக்கின்றன. அருணகிரிநாதர் ஆரம்பதசையில் காமவெறி பிடித்தவராக விருந்தார். பக்தியின் வாயிலாக அதைத் தெய்வப் பெற்றியாக மாற்றுவது அவருக் குச் சாத்தியமாயிற்று.

எங்கு ராமன் இருக்கின்றுனே அங்குக் காமன் இல்லை என்பது பரமஹம்சர் வாக்கு. நல்ல மகன் ஒருவன் தாய் தந்தையர் முன்

னிலைக்குப் போகின்றபொழுது அவனுடைய கீழான இயல்புகள் மிக எளிதில் பின்னணிக்குப் போகின்றன. அதே விதத்தில் கடவுள் பக்தியைத் தன் உள்ளத்தில் ஓங்குவிப்பதற்கு ஏற்பக் காம நோய் தானே தணிகிறது. எனவே உள்ளன்போடு கடவுள் பக்தி பண்ணுவது ஒன்றினாலேயே காம விகாரத்தைப் பொருத்தமான அருள் நாட்டமாக மாற்றுவது சாத்தியம்.

கேள்வி: (321) *இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவை மக்களுக்குப் பணி செய்வதில் சிறந்து விளங்குகின்றன. ஹிந்துமதம் அப்படிஏன் சேவை செய்வதில்லை?*

இக்கேள்வி ஆதரவற்றது. மக்கள் சேவையில் ஹிந்து மதத்துக்கு நிகரானது உலகில் வேறு எந்த மதமும் இல்லை. கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் வழிபாட்டுக்காகத் தேவாலயம் சென்று திரும்பும் பொழுது வழியில் அமர்ந்திருக்கும் ஏழைகளுக்குத் தானம் பண்ணுகின்றனர். அது பாராட்டத் தக்க செயலே. ஆனால் அச்செயலில் பெரும் பகுதி அந்த ஏழை மக்களைப் பிடித்துக்கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றியமைப்பது அவர்களின் நோக்கமாகும். இனி, முஸ்லிம்கள் இஸ்லாமிய ஏழைகளுக்கு உதவி பண்ணுவதுபோன்று அவ்வளவு தாராளமாக ஏனையவர்களுக்கு உதவி பண்ணுவதில்லை. ஆனால் ஹிந்துக்களின் மனப்பான்மை அத்தகையதன்று. மதம் மாற்றுதலைப் பற்றிய எண்ணம் ஹிந்துக்களுடைய உள்ளத்தில் ஒரு பொழுதும் எழுவதில்லை. நரசேவையே நாராயண சேவை என்றும், ஜீவ சேவையே சிவ சேவை என்றும் அடக்க ஒடுக்கத்தோடு பணிவிடை பண்ணும் பாங்கு ஹிந்துக்களுக்கே உரியதாம். மேல்நாடுகளில் யாசகம் பண்ணுகிறவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்து விடுகிறார்கள். அதுவே உண்மையில் அந்த நாட்டவர்கள் அனுஷ்டிக்கும் மதமாம். மற்று இந்தியாவில் வறியவர்களும் துறவியர்களும் கையில் காசு ஏதும் இல்லாது நாடெங்கும் யாத்திரை போகிறார்கள். ஆங்காங்கு மக்கள் பண்ணும் தானமே அவர்களை நன்கு பரிபாலித்து வருகிறது. துருவி ஆராய்ந்து பார்த்தால் மக்களுக்குப் பண்ணும் பணிவிடையில் ஹிந்துக்களுக்கு நிகரானவர்கள் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லையென்றே இயம்பலாம்.

கேள்வி: (322) *தோன்றிற் புகழொடு தோன்றுக ... ... விளக்கம் யாது?*

முறைப்படி வாழ மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். யாரொருவன் அறநெறி பிறழாதிருக்கின்றானோ அன்னவன் முறைப்படி வாழ்பவனாகிறான். நெறி பிறழாது நல்வாழ்வு வாழ்கின்றவனை உலகம் போற்றுகிறது. ஆகவே, மானுடனாகப் பிறந்திருப்பவன் நெறியான வாழ்க்கை வாழ்வானாகில் அவன் புகழொடு தோன்றியவனாகிறான். ஆகவே, நல்வாழ்வு காரணமாகவும் புகழ் அதன் விளைவு அல்லது காரியமாகவும் அமைந்திருக்கிறது. காரணத்துக்கேற்ற காரியம் இயற்கையின் மாறாத கோட்பாடாகும். ஆனால் இக்காலத்தவர் பலபேர் புகழுக்கேற்ற பெருவாழ்வு வாழ்வதற்குப் பதிலாக நேர் புகழைப் பெற விரும்புகின்றனர். அப்படி முயலுவது வண்டியை முன்னுக்கும் காளையைப் பின்னுக்கும் இணைப்பதற்கு ஒப்பாகிறது. சுலபத்தில் கீர்த்தி பெறுவதற்கு இக்காலத்தில் முறைகள் சில இருக்கின்றன. சமாசாரப் பத்திரிகைகளைச் சரிக்கட்டி விளம்பரத்தின் வாயிலாகக் கீர்த்தி பெறுவது ஒரு முறை. அரசியல் துறையில் இறங்கிப் பகட்டான பல காரியம் பண்ணித் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வது மற்றொருமுறை. சமுதாயத்துக்குப் பயன்படாதிருந்தாலும் ஏதேனும் ஒரு செயலில் இறங்கி அச்செயலைப் பாராட்டுதற்கான கூட்டுறவுகளை அமைத்துக்கொள்வது மற்றொரு முறை. இவையாவும் விலைக்கு வாங்கிய கீர்த்தியாகும். இவை நெடுநாள் நிலைத்திருக்கமாட்டா. வாணவேடிக்கை போன்று அதிவிரைவில் மறைந்துபட்டுப் போகும். தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதன் உட்பொருள் மானுடனாகப் பிறந்துள்ள ஒருவன் தன் பிறப்புக்கேற்ற பெருவாழ்வில் உறுதியாக ஈடுபடுதல் வேண்டும் என்பதாம். அங்ஙனம் நல்வாழ்வு வாழ்பவனை உலகம் தானே போற்றுகிறது.

ஆத்ம போதம்

(திரு. V. S. நரசிம்மன்)

आत्मनः सच्चिदंशश्च बुद्धेर्वृत्तिरिति द्वयम् ।
संयोज्य चाविवेकेन जानामीति प्रवर्तते ॥

आत्मनः (ஆத்மன:) ஆத்மாவின் सत् चित् (ஸத் சித்) உண்மையும், அறிவும் अंशः च (அம்ச: ச) பகுதிகள் बुद्धेः (புத்தே:) புத்தியின் वृत्तिः (விருத்தி:) அசைவு इति द्वयं (இதி த்வயம்) ஆகிய இரண்டையும் अविवेकेन (அவிவேகேந) அக்ஞானத்தால் संयोज्य (ஸம்யோஜ்ய) இணைத்து, जानामि इति (ஜாநாமி இதி) நான் அறிகின்றேன் என்று प्रवर्तते च (பிரவர்ததே ச) உண்டாகின்றது.

ஆத்மாவின் சத்சித் அம்சங்களையும், புத்தியில் தோன்றும் அசைவையும் அக்ஞானத்தால் ஒன்று எனக் கருதி இணைப்பதால் 'நான் அறிகின்றேன்' என்ற உணர்வு வெளிப்படுகின்றது.

ஆத்மாவிற்கும் புத்திக்கும் இணக்கம் கிடையாது. ஆயினும் விவகாரத்தில் அது காணப்படுகின்றது. சைதன்ய சொரூபம் ஆத்மா; புத்தியில் சைதன்யத்தைப் பார்ப்பது 'அக்ஞானத்தினால்.' அந்தச் சைதன்யம் ஆத்மாவிற்கே உரியது. இங்ஙனம் ஆத்மாவின் ஸ்வரூபத்தால் பிரகாசிக்கும் புத்தியில், 'நான் அறிகின்றேன்' என்ற ஞானம் உண்டாகிறது. புத்தியைச் சைதன்யமாகப் பார்க்கின்றவன், இந்த ஞானத்தையும் தனக்கே (அகங்காரம்) உரியதாகக் கருதித் தன்னையே 'கர்த்தா, போக்தா' என்று எண்ணுகின்ருன். சத்-சித் அம்சம் புத்திக்கோ, அகங்காரத்திற்கோ இல்லை என்ற தத்துவத்தை இந்தச் சுலோகம் உணர்த்துகின்றது.

आत्मनो विक्रिया नास्ति बुद्धेर्बोधो न जात्विति ।
जीवः सर्वमहं (लं) ज्ञात्वा ज्ञाता (कर्ता) द्रष्टेति मुह्यति ॥

आत्मनः (ஆத்மன:) ஆத்மாவிற்கு विक्रिया (விக்ரியா) மாற்றங்கள் नास्ति (நாஸ்தி) இல்லை. बुद्धेः (புத்தே:) புத்திக்கு बोधः (போத:) அறிவு न जातु (ந ஜாது) ஒருக்காலும் கிடையாது. इति (இதி) இங்ஙனம் जीवः (ஜீவ:) ஜீவன் सर्व (ஸர்வம்) எல்லாம் अलं (அலம்) தவருக अहं (அஹம்) நான் என்று ज्ञात्वा (ஞாத்வா) புரிந்து கொண்டு ज्ञाता (ஞாதா) அறிபவன் कर्ता (கர்த்தா) செய்பவன் द्रष्टा (த்ரஷ்டா) காண்பவன் इति (இதி) என்று मुह्यति (முஹ்யதி) மயக்கம் அடைகின்ருன்.

ஆத்மாவிற்கு மாற்றங்கள் இல்லை; புத்தி தானே சைதன்யமாக ஒருபோதும் இருப்பதில்லை. ஆனால் ஜீவன் அனைத்தையும் தவருகக் கருதி (தான் என்று கருதி) தான் அறிகின்றவன், (கர்மம் செய்கின்றவன்), பார்க்கின்றவன் என்று மயக்கம் அடைகிருன்.

கால, தேச, வர்த்தமானத்தில் மாற்றங்களும், விகாரங்களும் தோன்றக்கூடும். எனவே மாற்றம் ஆத்மனில் தோன்றக் காரணம் இல்லை. 'புத்தி' என்ற சொல் ஈண்டு அந்தக்கரணத்தைக் குறிக்கின்றது. ஆத்மாவுடன் சம்பந்தப்படுவதால் அது அறிவுடன் இலங்க முடிகின்றது. அன்றேல் அது ஜடமே. அதுபோன்று ஆத்மா கர்த்தா, போக்தா அல்ல. ஜீவனின் தவருன எண்ணமே இத்தகைய மயக்கத்தை உண்டாக்குகின்றது. வேதாந்தத்தில் இந்த உண்மை பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது. 'அத்யாரோபம்' 'அத்யாசம்' 'அக்ஞானம்' என்று பலவாறு குறிப்பிடப்படும் தவருன மனப்பாங்கே எல்லா மயக்கத்திற்கும் காரணம். 'சர்வம் அலம் ஞாத்வா—' 'சர்வம் அஹம் ஞாத்வா' என்று இரண்டு விதமாகவும் பாடல் காணப்படுகின்றது. இரண்டும் ஒரே உண்மையை வலியுறுத்துகின்றன. 'அனைத்தையும் தவருகப் புரிந்து கொள்வது,' 'அனைத்தையும் நான் என்று கருதுவது' இரண்டும் ஒன்றே.

'அஹம் இதம் ஜாநாமி-நான் இதை அறிகின்றேன்' என்பது வாக்கியம். இங்குக் காணப்படும் அறிவு என்ற சொல்லின் கர்த்தா 'அஹம்' என்ற சொல். இந்த 'அஹம்' ஆத்மாவா? அல்ல. ஏனென்ருல் ஆத்மாவில் அறியாத நிலை, அறிந்த நிலை என்ற விகாரம் எழ முடியாது. அப்படியெனின் 'அஹம்' என்று பேசுகின்ற ஜீவனை-

அவன் புத்தியை அது குறிக்குமோ? இல்லை. ஏனென்றால் புத்தி, ஜடம். அங்குச் சைதன்யம் தானே தோன்றுது. எனவே சைதன்ய ஆத்மாவுடன் சேர்ந்த புத்தி விருத்தியே 'அஹம்' என்ற பதத்தின் இலக்கு ஆகின்றது. இரும்பு தன்னளவில் பிரகாசமும், வெப்பமும்அற்றது; ஆயினும்பழுக்கக்காய்ச்சிய நெருப்புக் கோளமாக அது இருக்கும் போது பிரகாசமும், வெப்பமும் உடைய தாகக் காணப்படுகின்றது. ஜடமயமான புத்தியும் ஆத்மாவின் சம்பந்தத்தால் சைதன்யம் எனத் தோற்றுகின்றது.

रज्जुसर्पवदात्मानं जीवं ज्ञात्वा भयं वहेत् ।
नाहं जीवः परमात्मेति ज्ञातश्चेन्निर्भयो भवेत् ॥

रज्जु (ரஜ்ஜு) கயிற்றை सर्पवत् (ஸர்பவத்) பாம்பு என்று आत्मानं (ஆத்மானம்) தன்னை जीव ज्ञात्वा (ஜீவம் ஞாத்வா) ஜீவன் என்று எண்ணி भयं (பயம்) அச்சத்தை वहेत् (வஹேத்) அடைகின்றான். अहं (அஹம்) நான் जीवः न (ஜீவ: ந) ஜீவன் அல்லன், परमात्मा इति (பரமாத்மா இதி) பரமாத்மா என்று ज्ञातं चेत् (ஞாதம் சேத்) அறிந்துகொண்டால் निर्भयः (நிர்பய:) அச்சமின்மையை भवेत् (பவேத்) அடைகின்றான்.

கயிற்றைப் பாம்பு என்று எண்ணிப் பயப்படுவது போன்று தன்னை ஜீவன் என்று எண்ணி அஞ்சுகின்றான். 'நான் ஜீவன் அல்லன்;பரமாத்மாவே' என்று அறிந்தால் அச்சமின்மையை அடைகின்றான்.

''யத்ர த்வைதம் பச்யதி, தத்ர பயம் வர்த்ததே'' எங்கு த்வைத நிலையைப் (தனக்கு வேறான, இரண்டாவது சொரூபத்தை) பார்க்கின்றானோ அங்குப் பயம் உண்டாகின்றது.'' ''தத்ர கோ மோஹ: க: சோக: ஏகத்வம் அனுபச்யத: — எங்கும் ஒரே பரம் பொருளைப் பார்க்கின்றவனுக்கு, மயக்கமேது, துக்கமேது?'' ''யதா ஹி ஏவ ஏஷ ஏதஸ்மின் உதரம் அந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி — எவன் ஒருவன் இதனின்று சிறிதளவேனும் வேறுபட்டவனாகத் தன்னைக் கருதுகின்றானோ, அவனுக்குப் பயம் உண்டாகின்றது.'' — இவை உபநிஷத் மொழிகள்.

பயத்திற்குக் காரணம் அக்ஞானமே. நாயம் ஆத்மா பலஹீனேன லப்ய:- இந்த ஆத்மா பலவீனன் ஒருவனால் அடையப் படாது. பலம் என்பது சரீர பலம் மட்டும் அன்று; மனோ பலமே தைரியம், தீரம் ஆகும். ஆத்மசாதகன் தீரனாக இருக்கவேண்டும். உண்மை. நிலையை, சொரூபத்தின் தன்மையை, உள்ளது உள்ளபடி உணராது இருப்பதே அக்ஞானம். கயிற்றைச் சரியாக உணராது இருப்பதே அச்சத்திற்குக் காரணம். இந்த வியவஹார உபமானம் நன்கு தெரிந்த ஒன்றே.

பாம்பும், ஜீவபோதமும் ஆரோபிதம்; கற்பிக்கப்பட்ட தவறான எண்ணங்கள். கயிறும், பரமாத்மனும் அத்தகைய ஆரோபித வஸ்துவிற்கு ஆதாரமாகத் திகழும் சத்தியப் பொருள்கள். இந்த ஞானம் இல்லாது 'த்வைத' உலகில் எத்தகைய மன நிலையை மேற்கொண்டாலும் அது அச்சத்தை அகற்றாது.மரணம், இதனை அனைவரும் கண்டு அஞ்சுவது; பயத்தின் உச்சநிலை அதுவே. மரணமற்ற பெருவாழ்வு, அமரத் தன்மை என்பது அழியக்கூடிய பௌதிக சரீரத்தைக் குறிக்காது. 'நான் ஜீவன் அல்லன்;சச்சிதானந்த பரமாத்மாவே நான்' என்ற ஆத்மபோதமே அதற்கு மார்க்கமாகின்றது. 'பிரம்மவித் பிரம்மைவ பவதி- பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மம் ஆகின்றான்.' பொய்த் தோற்றத்தை உள்ளபடி உணர்ந்த மறுகணம் அச்சம் அகலுவதைப் போன்று ஞானம் பெற்ற பின்பே அச்சமற்ற நிலை ஏற்படுகின்றது.

தவம் செய்து சாதனையில் மேநிலை அடைந்த யோகினி ஒருவர், மயானத்தில் தியானம் புரிவது வழக்கம். அருகே இருந்த தனது குடிலுக்கு ஓய்வு எடுக்கச் செல்வார். அவருடன் ஒரு முறை சீடனும் தவத்தில் அமர்ந்தான். சிறிது நேரம் கழித்து அந்த யோகினி தன் இருப்பிடம் சென்றுவிட்டார். சீடன் மயானத்தில் தனித்து இருக்கநேரிட்டது. திடீரென அவன் மனதில் அச்சம் மேலோங்க, குருவின் குடிலுக்குச் சென்று கதவைத் தட்டினான். ''என்ன விஷயம்?'' என்று வினவினார். ''மயானத்தில் தனியாக இருக்க முடியவில்லை.'' ''ஏன்?'' ''பயமாக

இருக்கின்றது.'' ''அப்படியா? பயம் ஏன் தோன்றுகிறது தெரியுமா?'' சீடன் மௌனமாக இருந்தான். ''உன்னுடைய சிறிய வியக்தியாகிய ஜீவனில், உனது சரீரத்தில் நீ வைக்கின்ற பற்றுதான் பயமாக உருவெடுக்கின்றது. எங்கும் நிறை பூரணப் பொருளாகிய நீ எதைக் கண்டு பயப்பட வேண்டும்?'' சீடனுக்கு உபநிஷத் மொழிந்த தத்துவத்தை எளிய மொழியில் விளங்க உரைத்தார். சீடன் தன் இருப்பிடம் திரும்பிச் சென்று, ஆத்ம விசாரத்தில் ஆழ்ந்தான்.

தனக்குப் புறத்தே உள்ள பொருளின்மீது வைக்கும் பற்று, அதைத் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளவேண்டும் என்றவேட்கை, அது தனக்குக் கிடைக்காது போகுமோ என்ற மன அங்கலாய்ப்பு, அப்படியே கிட்டினாலும் தன்னிடம் தங்குமா என்ற ஐயத்தால் தோன்றும் மனப் பதைபதைப்பு, கிட்டாதுபோய் விடின் விளையும் ஏமாற்றம் — ஆகிய பலவித கிலேசங்களுக்கும் அடிப்படையாக அமைவது அக்ஞானமே. தன்னுடைய சொரூபத்தைத் துறந்து, புறத்தே தேடி அலைபவர் மனநிம்மதி பெறுவது அரிது. 'ந ஹி துருவேசு அதுருவம் பிராப்யதே-நிலையற்ற பொருள்களின் மூலம் நிலைத்த சத்தியத்தைப் பெற முடியாது.' ''தத் பரம் யதாக்ஷரம் அதிகம்யதே — எதன்மூலம் அழிவற்ற நிலை அடையப்பெறுகின்றதோ அதுவே மேலான(பர) வித்யை.'' உபநிஷத் கூறும் இந்தத் தத்துவத்தை 'நாஹம் ஜீவ: பரமாத்மா ச இதி ஞாத்வா என்று ஆசாரியர் குறிப்பிடுகின்றார்.

ஒரு நல்ல தொண்டு

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. நோயில் இரண்டு விதம் உண்டு. ஒன்று உடலைப்பற்றியது; மற்றது உள்ளத்தைப்பற்றியது. உடலைப்பற்றிய நோயை மருத்துவர்கள் கண்டு பிடிக்கின்றனர். மன நோயை மனிதன் தானே சரிப்படுத்தவேண்டும். மனநோயை நீக்குவதற்கு நல்லறிவு ஒன்றே உற்ற உபாயமாகிறது.

நோய் வராமல் தடுப்பதற்கும், ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கும், மனதைத் திருத்தி அமைப்பதற்கும் உரிய வழிகளை விளக்கும் 'நோய்க்கு இடம்கொடேல்' என்னும் சிறிய நூல் ஒன்று தபோவனத்தினின்று வெளியாகியுள்ளது. ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளிகளுக்கிடையில் இந்தப் புத்தகத்தைப் படிக்கக் கொடுத்துப் பின் திரும்ப வாங்குவது நல்ல பலன் தரும். இப்பணியில் ஊக்கமுடைய அன்பர்கள் சில பிரதிகளை வாங்கிக் கைவசம் வைத்துக்கொள்ளலாம். பிறகு டாக்டர் அனுமதி பெற்று ஆஸ்பத்திரி சிப்பந்திகளைக்கொண்டு இந்தப் பணிவிடையை நன்கு நிறைவேற்றலாம்.

ஆகார நியதியைப்பற்றிய விவரம் இப்புத்தகத்தில் வெளியாகியுள்ளதை ஈண்டு மாதிரிக்குத்தருகிறோம். பெரும்பான்மையான உயிர்கள் பொருத்தமான உணவு எது, பொருத்தமற்ற உணவு எது என்பதை மோப்பத்தால் நன்கு கண்டு பிடிக்கின்றன. ஆனால் மனிதனுக்கு மோத்தல் அறிவு மிகக் குறைவானது. ஆதலால் சுவை பார்ப்பது ஒன்றே அவனுக்கு ஏற்றதாகும். நல்ல உணவு எது என்பதை நாக்கு கண்டுபிடிக்கிறது, நாவுக்கு ஒவ்வாததை வயிற்றினுள் செலுத்தலாகாது. பின்பு, உண்ட உணவு எளிதில் ஜீரணமாகிறதாவென்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். செமிப்பதற்குக் கடினமாயுள்ள ஆகாரத்தைக் குறைவாகப் புசிக்கவேண்டும். மற்று, அதைப் புசிக்காது ஒதுக்கி வைப்பது அதைவிட உத்தமம். நல்லுணவை அளந்தெடுத்து அருந்துபவனுக்கு ஆயுள் விருத்தி உண்டாகிறது; நோய்க்கு இடமில்லை. பசி எடுத்த பின்பே புசித்தல்வேண்டும். ஆரோக்கியத்தை உறுதிப்படுத்துதற்கு அதுவே உற்ற உபாயமாகும். பசியை ஒரு பிணி என்கிறோம். ஆயினும் பசிப்பிணியை நன்கு சகித்துப் பழகுபவனுக்கு ஏனைய பிணிகள் எளிதில் வரமாட்டா. இடையிடையே உபவாசம் இருப்பது நல்ல பயிற்சி. பசித்திருக்கிறபொழுது உடலிலுள்ள பொருந்தாத தாதுக்களையெல்லாம் ஜீரணக் கருவி செமித்து விடுகிறது. ஆதலால்தான் உபவாசம் இருந்து பழகுகிறவர்களுக்கு நோய் அதிகம் வருவதில்லை.

யோக வாழ்வு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் திருவேடகத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கான கோடைப் பயிற்சி முகாமில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[256ஆம் பக்கத் தொடர்ச்சி]

சௌசம், சந்தோஷம், சுவாத்யாயம், ஆர்ஜவம், ஆத்ம சமர்ப்பணம் என்பன ஐந்தும் நியமப் பகுதியில் அடங்கும். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரண சுத்தியோடு இருப்பது சௌசம் எனப்படும். சரீரத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். சொல் சுத்தமாக இருக்கவேண்டும். எண்ணம் தூயதாக இருக்கவேண்டும். இராவணன் சீதை இருந்த பர்ணசாலைக்கு வந்தபொழுது சன்னியாச வேடம் பூண்டு வந்தான். அப்பொழுது அவன் சொல்லிலும் எண்ணத்திலும் சுத்தமாக இல்லை. அப்படிப் பொய் சன்னியாச வேடம் பூண்டு உள்ளவனை இராவண சன்னியாசி என்று அழைப்பதுண்டு. எண்ணுகின்ற எண்ணத்துக்கும் சொல்லுகின்ற சொல்லுக்கும் செய்கின்ற செயலுக்கும் முரண்பாடு வந்தால் அவன் மேல்நிலைக்குப் போகமுடியாது. மூன்று கரணங்களும் ஒன்றையொன்று ஒத்திருக்குமானல் அது சௌசம் எனப்படும்.

வியாகுலப்பட்டுக் கொண்டிருப்பவனுக்கு யோகம் இல்லை. பதைபதைப்போடு இருப்பவனுக்கு யோகம் இல்லை. மிகைப்பட்ட மகிழ்ச்சிக்கு மாணு உவகை என்பது பெயர். அது பெருவாழ்வுக்குப் பொருந்தாது. அற்ப விஷயங்களில் மகிழ்ச்சிகொண்டிருக்கும் அந்தக்கரணம் சீரிய கருத்துக்களை வாங்காது. வியாகுலப்பட்டுக் கொண்டிருக்கின்ற மனதும் யோகத்துக்குப் பயன்படாது. கீதையின் ஒவ்வோர் அத்தியாயத்துக்கும் யோகம் என்று பெயர். அர்ஜுனன் வியாகுலப்பட்டது யோகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எதைக் குறித்து வியாகுலப்படுவது என்பது கேள்வி. உலக விஷயத்தைக் குறித்து வியாகுலப்படக்கூடாது. பாரமார்த்திக விஷயத்தைக் குறித்து வியாகுலப்படலாம். இலங்கையிலிருந்த சீதாப்பிராட்டி இராமனைக் குறித்து வியாகுலப்பட்டாள். அவ்வியாகுலம் உலக வியாகுலத்தோடு சேர்ந்ததன்று. சீதாப்பிராட்டி தான் கொண்ட வியாகுலத்தின் மூலம் பண்பாடு அடைந்தாள். அஃதே போன்று அர்ஜுனனுக்கு வந்த விசனமும் உலக சம்பந்தமான விசனமன்று. ஆச்சாரியரையும் பிதாமகரையும் கொல்லுவது தர்மமாகுமா? தர்மத்தைத்தான் கடைப்பிடிக்கவேண்டும். அதர்மத்தில் ஈடுபடக்கூடாது. இங்ஙனம் தர்மத்தைக் குறித்து அர்ஜுனன் வியாகுலப்பட்டான். ஆகையால் அவன் அடைந்திருந்த வியாகுலம் உலக சம்பந்தமான வியாகுலமன்று. **'Blessed are the distressed in the heart; for they shall be consoled'** என்பது ஒரு பெரிய கோட்பாடு. பாரமார்த்திக விஷயத்தில் ஏற்படுகின்ற விசனம் உலக விசனத்தோடு சேர்ந்ததன்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதை ஓர் உபமானத்தின்மூலம் விளக்குகின்றார். தித்திப்புப் பண்டங்களை அளவுக்குமேல் சாப்பிடுவது உடல் வாழ்வுக்கு நல்லதன்று. ஆனல் தித்திப்புப் பண்டமாகிய கற்கண்டு விதிவிலக்கு ஆகின்றது. நல்ல கற்கண்டுக்கு நிகர் தெய்வீக விஷயத்தில் வரும் விசனம். உலக சம்பந்தமான விசனம் வெறும் இனிப்புப் பண்டத்திற்கு நிகராகும். வெறும் இனிப்புப் பண்டம் உடலுக்குக் கேடு செய்வது போன்று உலக சம்பந்தமான விசனம் உள்ளத்தைக்கெடுத்துவிடும். உலக சம்பந்தமான விஷயங்களில் மாணு உவகைகொள்வதும், விசனப்படுவதும் ஆகிய மனது பிரசாந்த மனது ஆகாது. மனம் பிரசாந்தநிலையில் இருக்கும்போதுதான் மேலானகருத்துக்களை வாங்குவதற்குத் தகுதி உடையதாகின்றது. 'சந்துஷ்ட: சததம் யோகி' என்பது கோட்பாடு. யோகி ஒருவன் யாண்டும் அகமகிழ்வு உடையவனாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவன் உள்ளத்தில் பாரமார்த்திகச் சிந்தனைகள் உண்டாகும். எனவே மனமகிழ்ச்சியுடன் இருந்து பழகவேண்டும்.

அனுபூதிமான்கள் இயற்றிய நூல்களைப் பக்திபூர்வமாக ஆராய்ச்சி செய்வது சுவாத்யாயமாகும். சுவாத்யாயம் செய்து அறிந்த உண்மைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லுவதைக் கேட்பவர்கள் பயன் அடைகின்றார்கள். சுவாத்யாயம் அந்தக்கரண சுத்தியை உண்டுபண்ணுகின்றது. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம் என்பது சுவாத்யாயத்தின் அவசியத்தை எடுத்துப் புகட்டுகின்றது. உடற்பயிற்சி செய்கின்றவனுக்கு உடல் திட்பம் உண்டாகின்றது. சுவாத்யாயம் செய்கின்றவனுக்கு உள்ளத் திட்பம் உண்டாகின்றது.

அடுத்தபடியாக ஆர்ஜவம் என்பது வருகின்றது. மனதில் ஒன்றை எண்ணிக் கொண்டு புறத்தில் மற்றொன்றைக் கூறுவோமானால் அது ஆர்ஜவம் ஆகாது. ''உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்று வள்ளலார் கூறியுள்ளார். மனதில் என்ன இருக்கின்றதோ அது சொல்லாக வடிவெடுக்க வேண்டும். சுத்தமான எண்ணமாகவும் சுத்தமான சொல்லாகவும் இருக்க வேண்டும். சூர்ப்பநகை இராமனையும் சீதையையும் சந்தித்து நீங்கள் யார் என்று கேட்டாள். சீதையும் இராமனும் உண்மையைக் கூறினார்கள். அது ஆர்ஜவம். ஆனால் உலகத்தில் மக்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களாக நடந்துகொள்வார்கள். அது ஆர்ஜவம் ஆகாது. சிலர் பேச்சுத்திறமை உடையவர்களாக இருப்பார்கள். பேச்சுத் திறமையின்மூலம் தங்களுடைய எண்ணத்தை மறைத்துவைத்து விடுவார்கள். அது ஆர்ஜவம் ஆகாது. நம்முடைய எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கே மொழி அமைந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தியாவுக்கு எல்லா நலன்களும் செய்வதாகப் பார்லிமெண்டில் சர்ச்சில் பேசிவிடுவார். ஆனால் அப்பேச்சை ஆராய்ச்சி பண்ணிப் பார்த்தால் விஷயம் ஒன்றும் இருக்காது. ஆர்ஜவம் படைத்தவர்கள் இப்படிப் பேசக் கூடாது. ஏனென்றால் அத்தகைய பேச்சு அந்தக்கரண சுத்தியை உண்டாக்காது. அந்தக்கரண சுத்தியை உண்டாக்குவதற்குப் பதிலாக அந்தக்கரணத்தை மேலும் அதுமாசுபடுத்துகிறது. ''சரள சுபாவம்படைத்தவர்களாக இருக்கவேண்டும். குயுக்தியின்றி, மட்டமான எண்ணமின்றி குழந்தை போன்று உள்ளதை உள்ளபடி சொல்பவனாக இருக்கவேண்டும். அதனால் வாழ்க்கையில் ஒரு நஷ்டமும்வந்துவிடாது.'' இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார்.

ஆத்மசமர்ப்பணம் என்பதற்குச் சுயநலமின்றிச்சமுதாயத்தின் நலத்துக்காக, தர்மத்தின் பெருமைக்காக நம்முடைய ஜீவிதத்தை அர்ப்பணிப்பது என்பது பௌத்தர்களுடைய வியாக்யானம் ஆகும். கணபதிக்கு ஒரு தேங்காயை உடைத்துவிட்டு கணபதி பூஜைசெய்து விட்டதாக எண்ணுகின்றவர்கள் உண்டு.அது கணபதி பூஜை ஆகாது. ஈசனுடைய பெருந்திட்டத்துக்கு நாம் செய்கின்ற செயல் ஒத்திருக்குமானால் அச்செயல் தோல்வி அடையாது. ஈசனுடைய திட்டத்துக்கு நம் செயல் முரண்படுமானால் அக்காரியம் தோல்வி அடையும். கணபதிக்கு விக்னேச்வரர் என்ற பெயரும் உண்டு. விக்னேச்வரர் என்பதற்கு விக்கினத்தை உண்டு பண்ணுபவர் என்ற பொருளும் உண்டு. விக்னத்தைப் போக்குபவர் என்ற பொருளும் உண்டு. ''விக்னேச்வரா! நல்லது என்று எனக்குத் தோன்றுகின்ற காரியத்தில்தான் இறங்குகின்றேன். அது உனக்கு உடந்தையாக இருக்குமானால் அனுக்கிரகம் செய். உனக்கு உடந்தையாக இல்லை என்றால் விக்னத்தை உண்டாக்கி அதை நிறுத்திவிடு'' என்று ஆத்ம சமர்ப்பணம் செய்தவர்கள் பிரார்த்திப்பார்கள். காரியத்தின் முடிவில் கேடு வருவதற்குப்பதில் காரியத்தின் ஆரம்பத்திலேயே தடை வந்து விடுவது நல்லதன்றோ? சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். பக்தர் ஒருவர் பஸ்ஸில் முன் சீட்டில் அமர்ந்தார். அவரைக் கீழே இறக்கிவிட்டு அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் மற்றொருவர் அமர்ந்து பிரயாணம் செய்தார். பக்தருடைய பிரயாணத்திற்குத் தடை ஏற்பட்டது. பஸ் கொஞ்ச தூரம்

சென்றதும் விபத்துக்குள்ளாகியது. பக்தரை இறக்கிவிட்டு அவர் இடத்தில் அமர்ந்து பிரயாணம் செய்தவர் விபத்துக்குள்ளாகி இறந்தார். பக்தருடைய பிரயாணத்திற்கு விக்னமாக வந்தது அவருடைய உயிருக்குப் பாதுகாப்பாக அமைந்தது. முற்றிலும் தன்னைத் தெய்வத்திடம் ஒப்படைத்திருப்பவர்களுக்குக் காரியத்தில் தடை வந்தால் அதில் நலன் இருக்கிறது. அதிலுள்ள நலன் உடனே நமக்கு விளங்காது.

பிரான்சில் அசிசி என்ற ஒரு கிறிஸ்தவப் பெரியார் இருந்தார். அவர் வழியில் போய்க்கொண்டே இருப்பார். எங்கே போவது என்று அவர் தீர்மானம் செய்ய மாட்டார். வழியில் நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் வந்தால் எந்தச் சாலையில் போவது என்பதைத் தீர்மானிப்பதற்குக் கண்களை மூடிக்கொண்டு தம்மையே சுற்றிக்கொள்வார். திடீர் என்று சுற்றுவதை நிறுத்திவிட்டுக் கண்களைத் திறந்து பார்ப்பார். அப்பொழுது எந்த வழி அவர் முன் தென்படுகிறதோ அந்த வழியில் ''இது ஏசுநாதர் திருவுளம்'' என்று அந்த வழியே செல்வார். அது அவருக்கு நலனாக வந்து முடியும். இறைவனுடைய கையில் கருவியாக இருப்பதுதான் ஆத்ம சமர்ப்பணம் ஆகும். ''தாயே, நான் ஓர் இயந்திரம். நீ இந்த இயந்திரத்தை இயக்கும் இயந்திரி'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்வார். ஆத்ம சமர்ப்பணத்தின் மூலம் ஆணவ அகங்காரத்தை ஒழித்துவிட முயல்கின்றோம். ஆணவ அகங்காரம் ஒழிந்துவிட்டால் எஞ்சியிருப்பது ஆத்ம சொரூபமாகும். இதுவரையிலும் இயம, நியமப் பகுதிகளை ஆராய்ந்தோம். இனி ராஜயோகத்தில் மனதை ஒருமுகப்படுத்துகின்ற பகுதிகளை ஆராய்வோம்.

சரீரத்துக்கும் மனதுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஸ்தூல நிலையிலிருப்பது சரீரம். சூட்சும நிலையிலிருப்பது மனது. ராஜயோகத்தின் எட்டு அங்கங்களுள் இரண்டு அங்கங்கள் சரீர சம்பந்தமானவை. அவற்றுள் ஒன்று ஆசனம். ஆசனத்தைப் பற்றி விரிவாக ஹட்யோகத்தில் உள்ளது. தியானத்துக்கு சுக ஸ்திர ஆசனம் போதுமானது. சிரமம் இல்லாது சுகமாக அமர்ந்திருக்கவேண்டும். அமர்ந்திருக்கும்பொழுது அசையாது ஸ்திரமாக இருக்கவேண்டும். மயூர ஆசனம் போட்டுத் தியானம் பண்ணினால் சிரமப்படவேண்டும். மயூர ஆசனம் சுக ஆசனம் அன்று. பத்மாசனம்தான் சுக ஆசனமாகும். பத்மாசனத்தில் அமர்வது முடியவில்லை என்றால் நமக்குச் சுலபமான ஆசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும். அமர்ந்திருக்கும் பொழுது நெஞ்சு, கழுத்து, தலை ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருக்கும்படி நிமிர்ந்து உட்காரவேண்டும். நாம் உட்கார்ந்து இருக்கும் இடமும் அசையாது இருக்கவேண்டும். ஊஞ்சலில் அமர்ந்து தியானம் செய்யக்கூடாது. நேராக உட்கார்ந்திருக்கும்பொழுது தான் உள்ளத்தில் மேலான எண்ணம் உதயமாகும். ஸ்திரமாகவும் சுகமாகவும் உட்கார்ந்து இருக்கும்பொழுது ஆசனநியதியைப் பூர்த்தி செய்கின்றோம். யோகாசனம் சரீர சம்பந்தமான சாதனையாகும்.

சரீர சம்பந்தமான இரண்டாவது அங்கம் பிராணயாமமாகும். பிராணனுடைய போக்குவரவை ஒழுங்குபடுத்துவது பிராணயாமம் எனப்படும். சுவாசத்தின் போக்குவரத்துக்கும் மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை யோகிகள் ஆராய்ச்சியில் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அச்சம் ஏற்படும் பொழுது சுவாசப் போக்குவரத்தில் தடை உண்டாகிறது. கோபம், பொறாமை முதலியன உண்டாகின்ற பொழுது அதற்கேற்றாற்போன்று சுவாசம் மாறுகிறது. நாம் சாந்தத்துடன் இருக்கும் பொழுது சுவாசத்தில் ஓர் ஒழுங்குப்பாடு ஏற்படுகிறது. ஒருவருடைய பேச்சிலும் பண்பாடு இருக்கிறது. ஒரே கருத்தை இருவர் பேசுகின்றபொழுது பேசுகின்றவருடைய மனபரிபாகத்துக்கு ஏற்பப் பேச்சில் உண்டாகின்ற அலையில் மாறுதல் தென்படுகின்றது. மனபரிபாகம் அடைந்திருப்பவருடைய பேச்சில் உண்டாகும் அலையில் ஓர் ஒழுங்குப்பாடு இருக்கின்றது. மனபரிபாகம் இல்லாதபொழுது பேச்சின்அலையில் சிதைவு

உண்டாகிறது. பிராணன் சூட்சுமமானது; மனம் அதைவிட சூட்சுமமானது. ஸ்தூலமாகஇருப்பதை ஒழுங்குபடுத்தினுல் சூட்சுமமாகஇருப்பது ஒழுங்காகிவிடுகிறது.சூட்சுமமாக இருப்பதை ஒழுங்குபடுத்தினுல் ஸ்தூலம் ஒழுங்குபட்டுவிடும். இராஜ யோகிகள் பிராணுயாமத்துக்கு இடம் தந்திருக்கின்ருர்கள். ஞான மார்க்கத்தில் செல்கின்றவர்கள் பிராணுயாமத்துக்கு இடம் தருவதில்லே. விவேகமும் வைராக்கியமும் இன்றியமையாதவை. விவேகம், வைராக்கியம் இல்லாதவன் பிராணுயாமம் செய்வதில் பயனில்லே. அத்தகையவன் பிராணுயாமம் செய்வதற்கும் கொல்லன் துருத்தி ஊதுவதற்கும் வித்தியாசம் இல்லே. ஆனுல் கொல்லன் துருத்திக்கு உயிர் இல்லே; மனிதனுக்கு உயிர் உண்டு. விவேகம், வைராக்கியம் உள்ளவனிடத்துப் பிராணுயாமம் தானுக நிகழ்கிறது. பிராணுயாமத்தை ஒழுங்காகச் செய்தால் அதில் பயன் இருக்கிறது. பிராணுயாமத்தில் ரேசகம், பூரகம், கும்பகம் என்னும் மூன்று நிலேகள் இருக்கின்றன. காற்றை உள்ளே வாங்குவது பூரகம் எனப்படும். காற்றை உள்ளே நிறுத்திவைப்பது கும்பகம் எனப்படும். காற்றை வெளியே விடுவது ரேசகம் எனப்பெயர் பெறும். எளிய முறையில் பிராணுயாமம் செய்யலாம். இடநாசியின் வழியாகக் காற்றை உள்ளே வாங்க வேண்டும். வாங்கின உட்னே வலப்பக்க நாசியின் வழியாகக் காற்றை வெளியே விட் வேண்டும். அடுத்து உடனே வலப்பக்கநாசியின் வழியாகக் காற்றை உள்ளே வாங்கி அதை இடப்பக்க நாசியின் வழியாக வெளியே விடவேண்டும். இப்படி ஒரு முறை செய்து முடித்தால் அது ஒரு பிராணுயாமம் எனப்படும். புதிதாகப் பழகுபவர்கள் ஆரம்பத்தில் மேற்கூறிய முறையில் நான்கு பிராணுயாமங்கள் செய்தால் போதுமானது. காற்றை உள்ளே வாங்கும் பொழுது 'ஓம்' என்று மனதில் எண்ணிக் கொள்ளவேண்டும். அதேபோன்று காற்றை வெளியில் விடும்பொழுதும் 'ஓம்' என்று மனதில் எண்ணிக்கொள்ள வேண்டும். இம் முறையில் நான்கு பிராணுயாமங்கள் செய்தால் நாடிசுத்தி உண்டாகிறது. மனதும் அமைதியடைகின்றது. பிராணுயாமத்தில் சிறப்பான பகுதிகளும் உண்டு. பூனுவில் குவலயானந்த என்ற சாது ஒருவர் இருந்தார். ஆசனத்தின் மூலம் அவர் நோயைப் போக்குவதற்கு வழிகாட்டித் தந்தார். பிராணுயாமத்தின்மூலம் நோயைப் போக்குவதற்கும் நோயாளியைப் பக்கத்தில் வைத்துப் பயிற்சி தந்தார். பிராணுயாம முறையில் அவர் நோயைப் போக்கி வந்தார். ஆயுர்வேத முறையில் சித்த வைத்திய முறை ஒன்று உண்டு. அந்தச் சித்த வைத்திய முறையைத் தென்னுட்டில் சிறந்த ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். சித்த வைத்திய முறையில் சரீரத்தை நல்ல முறையில் வைத்திருப்பதற்கு மணி, மந்திரம், ஔஷதம் என்னும் மூன்று முறைகள் இருக்கின்றன. மணி என்பது பாதரசத்தை மந்திர சக்தியோடு கட்டியாகச் செய்து சரீரத்தில் அணிந்து கொள்வதாகும். அந்த மணி சரீரத்தில் இருக்கும் வரையில் சரீரத்துக்கு நோய் வராது. மணியைச் சரீரத்திலிருந்து எடுத்துவிட்டால் சரீரத்துக்கு நோய் மறுபடியும் வந்துவிடும். பழனியில் சாதுசாமி என்னும் ஒரு மகான் இருந்தார். அவர் பெரிய அளவில் அன்னதானம் வழங்கி வந்தார். அவருக்கு ஒரு மணி கிடைத்தது. அவர் சரீரத்தில் அதை வைத்திருந்த வரையில் அவர் சரீரத்துக்கு நோய் வரவில்லே. அவரிடம் மணி இருப்பதை அறிந்த ஒருவன் அவருக்குத் தெரியாமல் அவரிடமிருந்து அதை எடுத்துக்கொண்டு போய் விட்டான். மணி அவருடைய உடலேவிட்டு நீங்கியதும் அவருடைய சரீரத்துக்கு நோய் வந்து விட்டது. அவரிடம் எல்லாவித மக்களும் இருந்தார்கள். அவரிடமிருந்தவர்களில் கெட்டவர்களும் இருந்தனர். ஆனுல் அவர் அவர்களேப்பற்றிக் கவலேப்படவில்லே. ஒரு மண்டபத்தில் சாதுக்கள் அமர்ந்திருந்தார்கள். ஓர் அன்பர் தன் சாமான்களேயெல்லாம் சாதுக்கள் அமர்ந்திருந்த மண்டபத்தில் வைத்துவிட்டுக் குளிக்கப்போனுர். அவர் குளித்துவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபொழுது அவர் வைத்திருந்த நூறு

ரூபாய் நோட்டு ஒன்றைக் காணவில்லை. நடந்ததை அவ்வன்பர் சாது சாமிகளிடம் தெரிவித்தார். "இங்கு இருப்பவர்கள் யாவரும் பரமஹம்சர்கள் என்று நீ நினைத்து விட்டாய் போலும்! நூறு ரூபாய் நோட்டைத் திருடியவன் இங்குதான் இருப்பான்." திருடிய ஆளும் அங்குதான் உட்கார்ந்திருந்தான். யாவருக்கும் அவர் இடம் தந்து வைத்திருந்தது அவருடைய பரந்த மனப் பான்மையைக் காட்டுகிறது. மனதை நடு நிலையில் வைத்துப் பழகும்பொழுது பிராணாயாமம் தானாக நிகழ்கிறது. மனம் சஞ்சலப்படும் பொழுதோ கவலைப்படும் பொழுதோ பிராணாயாமத்துக்குத் தடை உண்டாகிறது. தக்க குருவின் வழிகாட்டுதலின்றிப் பிராணாயாமத்தை முரட்டுத் தனமாகக் கையாளக்கூடாது. அப்படிக் கையாண்டால் சரீரம் நோய்க்காளாகும். மனது பைத்தியக்கார நிலையை அடைந்து விடும். இயம, நியமங்களை நன்கு அனுஷ்டிப்பவர்கள் தக்க குருவின் உதவியோடு பிராணாயாம முறையைக் கையாளலாம். மற்றவர்கள் பக்தி மார்க்கத்தையும், கர்ம மார்க்கத்தையும், ஞானமார்க்கத்தையும் மேற்கொள்ளலாம்.

அடுத்துப் பிரத்யாகாரத்தைப் பற்றி ஆராய்வோம். எதை உள்ளே வாங்கிக்கொள்கிறோமோ அது ஆகாரமாகும். உபநிஷத் மந்திரமொன்றுக்கு ராமானுஜாச்சாரியார் ஒரு வியாக்யானம் எழுதியுள்ளார். அதே உபநிஷத் மந்த்ரமொன்றுக்குச் சங்கராச்சாரியார் மற்றொரு வியாக்யானம் எழுதியுள்ளார். இவ்விரண்டையும் இணைத்தால் பிரத்யாகாரத்துக்கு நல்ல விளக்கம் கிடைத்துவிடுகிறது. "ஆகார - சுத்தௌ சத்வ சுத்தி:, சத்வசுத்தௌ த்ருவாஸ்ம்ருதி:" இது உபநிஷத் வாக்கியம். ஆகாரம் சுத்தமானால் அந்தக்கரணம் சுத்தம் அடைகின்றது. அந்தக்கரணம் சுத்தி அடைந்தால் ஈசனைப்பற்றிய ஞாபகம் தடைபடாது வந்து கொண்டிருக்கும். ஆகாரத்தைச் சுத்தி செய்வது ஓர் ஆத்மசாதனமாகும். சரீரத்துக்குப் புஷ்டிதருவதை ராமானுஜாச்சாரியார் ஆகாரம் என்கின்றார். சரீரத்துக்குரிய ஆகாரம் மூன்று காரணங்களை முன்னிட்டுக் குற்றமுடையது ஆகிறது. மூன்று தோஷங்களையும் நீக்கிவிட்டால் சரீரத்துக்குரிய ஆகாரம் சுத்தமாகிறது. ஜாதி தோஷம், நிமித்ததோஷம், ஆச்ரயதோஷம் என்ற மூன்றும் சரீரத்துக்குரிய ஆகாரத்திலுள்ள தோஷங்களாகும். ஜனித்து வருவதை ஜாதி என்கின்றோம். சில உணவுகள் உற்பத்தியாகும் பொழுதே தோஷத்தோடு உற்பத்தியாகின்றன. அபினி, கஞ்சா, மது, மயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய காய், கனி, கிழங்கு, இலேகியம் ஆகியவை தோஷமுள்ள உணவுப் பொருள்களாகும். மாமிச உணவும் தோஷமுடைய உணவாகும். மாமிச உணவு ரஜோகுண விருத்தியை உண்டுபண்ணக்கூடியது. பூமிக்கடியில் விளையும் கிழங்குகள் தமோகுண விருத்தி உடையவை. ஆகையால் யோகிகள் கிழங்கு வகைகளைச் சாப்பிடுவதில்லை. சேனைக்கிழங்கும், காரட்டும் அவற்றிற்கு விலக்குகளாகும். மேற்கூறிய ஜாதிதோஷமுடைய உணவுவகைகளைச் சாதகன் விலக்கி வைக்கவேண்டும். ஊசிப்போன உணவு, பழுதுபட்டுப்போன உணவு, உரோமம், குப்பை, தூசி முதலியன விழுந்துகிடக்கும் உணவு குற்றமுடையது ஆகும். அது நிமித்ததோஷஉணவுஎனப்படும். யோகிஅத்தகைய உணவை உண்ணக் கூடாது. ஆச்ரய தோஷத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். உணவைக் கையாளுகின்ற மனிதனுடைய சுபாவம் தன்மாத்திரையாக உணவில் படிகிறது. கீழான சுபாவம் படைத்தவன் உணவைச் சமைத்தாலோ, உணவைக் கையாண்டாலோ அவனுடைய சுபாவம் உணவில் படிந்து உணவு தோஷமுடையதாகிறது. நாளடைவில் மக்கள் தங்களைப்பிறப்பால் பாகுபடுத்திக்கொண்டு தாங்கள்இன்ன ஜாதியோடுதான் சாப்பிடவேண்டும், இன்ன ஜாதியோடு சாப்பிட்டால் அது குற்றமுடையதாகுமென்று தங்களுக்குத் தாங்களே கற்பித்துக்கொண்டார்கள். மேலும் ஒருவர் சாப்பிடுவதை மற்றவர் பார்த்தால் அது தோஷமுடையதாகிறது என்ற மூடக் கொள்கையை வளர்த்துக் கொண்டார்கள். சுவாமி விவேகானந்தர் ஹாங்காங்,

ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்த பொழுது சென்னையிலுள்ள நண்பர் ஒருவருக்கு இங்ஙனம் கடிதம் எழுது கின்றார்: "தெய்வமே! எங்கள் தேசத்தில் சமயம் என்பது ஏதாவது நலனைத் தந்திருக் கிறதா? சில நூற்றாண்டுகளாக ஜலம் அருந் தும் கோப்பையை இடக்கையால் பிடிப் பதா? வலக்கையால் பிடிப்பதா? என்ற பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்துவரு கிறது. சாப்பிடுகின்றபொழுது எத்தகைய மனிதர்கள் எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்பது ஒரு பிரச்னையாக இருக் கிறது. சமையல் அறைதான் இந்தியாவில் உள்ள உங்களுக்குக் கோயிலாகவிருக்கிறது. சமையல் பானைதான் நீங்கள் வணங்கும் தெய்வமாக இருக்கிறது. இதுதான் பிரச் னைக்குரிய காரியமாகவிருக்கிறது. அத்த கைய பிரச்னையிலிருந்து வாழ்க்கையை உயர்த்திக்கொள்வதற்கு நீங்கள் ஏதாவது உதவி பெற்று இருக்கின்றீர்களா?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆகாரத்தின் மூன்று வது தோஷமாகிய ஆச்ரயதோஷத்தில் சிறிது கவனம் செலுத்தினார். ஆனால் விவேகானந்தர் அதில் கவனம் செலுத்த வில்லை. கவனம் செலுத்தவேண்டியது அவ சியமில்லை என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறி னார். நரேந்திரன் ஞானாக்னி என்றும் அதில் எல்லாத் தோஷங்களும் பஸ்பமாகிவிடும் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர்கூறுவார். ஆனால் அவர் தம் வாழ்க்கையில் ஆச்ரயதோஷத் துக்கு விளக்கம் தந்திருக்கிறார். அவர் ஒரு சமயம் கல்கத்தாவிலுள்ள பக்தர் ஒருவர் வீட்டுக்குப் போயிருந்தார். அங்கு மக்கள் பெரும் திரளாகக்கூடி இருந்தனர். அரிய பெரிய விஷயங்களைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ் ணர் அங்குப் பேசினார். பேசி முடிந்தான பிறகு வீட்டுத் தலைவனிடம் பருகுவதற்கு ஜலம் வேண்டுமென்று கேட்டார். வீட்டுத் தலைவன் ஜலம்கொண்டுவரஉள்ளே போனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பேச்சைக் கேட் பதுதடைபட்டுவிடும் என்றுஎண்ணி அவர் தம் தம்பியிடம் கூறி ஜலம் கொண்டுவரச் சொன்னார். அண்ணனுடைய உத்தரவுப்படி ஒரு பாத்திரத்தில் தம்பி ஜலம் கொண்டு வந்து கொடுத்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜலம் கொண்டுவந்தவரைப் பார்த்தார். ஜலத்தைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டு அதைப் பருகாமலேயே பேசிக் கொண்டிருந்தார். சிறிதுநேரம் பொறுத்துத் தம் கையிலிருந்த ஜலத்தைக் கீழே வைத்து விட்டுப் பேசி முடித்தார். இன்னும் சிறிது நேரம் கழித்துத் தம் கைகளைக் கழுவிக் கொண்டார். இன்னும் சிறிது நேரம் கழித்து மூத்தவரிடம் "இந்தப் பாத்திரத் தில் உள்ள ஜலத்தைக் கொட்டிவிட்டுப் பாத்திரத்தைக் கழுவி நீயே ஜலம் கொண்டு வா" என்று கூறினார். அவருடைய செயல் கள் அனைத்தையும் நரேந்திரர் ஒருவர்மட்டும் கூர்ந்து கவனித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அப்படி நடந்துகொண்டதில் ஏதாவது கருத்து இருக்க வேண்டும் என்று எண்ணி னார். முதலில் ஜலம் கொண்டு வந்தவரோடு நரேந்திரர் நட்புக்கொண்டார். ஒரு வாரத் திற்குள் அந்த ஆள் ஒழுக்கமற்றவரென் பதைக் கண்டுபிடித்துவிட்டார். ஒழுக்க மற்றவராகையால் அவர் கொண்டு வந்த ஜலத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணர் பருகமுடிய வில்லை என்பதைக் கண்டுபிடித்தார். உண விற்கு வருகிற ஆச்ரய தோஷத்திற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கையில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சி சிறந்த சான்று ஆகிறது.

தூய மனப்பான்மையுடையவர்கள் உண வைச் சமைக்கவேண்டும். தூய மனப்பான் மையுடையவர்கள் உணவு பரிமாறவேண் டும். அப்பொழுது உணவிலுள்ள ஆச்ரய தோஷம் நீங்குகிறது. ஒருவருடைய இயல்பு உணவில் படிவது மிகச் சூட்சுமமாக நிகழ் கிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்றவர்கள் தாம் அத்தோஷத்தைக் கண்டு பிடிக்க முடி யும். நம் போன்றவர்கள் அச்சூட்சுமமான தோஷத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகையால் நாம் உணவுப் பொருள்களை இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைத்து இறைவனிடமிருந்து அதைப் பிரசாதமாகப் பெற்று உண்ணவேண்டும். நைவேத்திய மாகப் படைக்கும் உணவில் இறைவன் அருள் ஒளிபட்டு உணவிலுள்ள ஆச்ரய தோஷம் நீங்குகிறது. (தொடரும்)

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[250ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்து மதத்தைப்பற்றிச் சரியான கருத்துக்களைக் காசிதாசர் அல்லது கீர்த்திதாசருடைய கிரந்தங்களிலிருந்து பெற முடியும் என்று நான் விவாதிக்கவில்லை. அவர்களுடைய வாக்குகளெல்லாம் அமிர்த வாக்குகளாகும். அவைகளைக் கேட்பவர்கள் புண்ணியவான்களாவார்கள். ஆனால் இந்து மதத்தை அறிந்துகொள்வதற்கு வேதத்தையும் தர்சனங்களையும் ஆச்சாரியர்களையும் இந்தியாவில் உள்ள அவர்களின் சீடர்களையும் அணுகவேண்டும். உங்களுக்கு அவகாசம் இருக்குமானால் யஜுர் வேதத்துக்கு மஹீதரர் எழுதிய முன்னுரையைப் படித்துப்பாருங்கள். வேதங்கள் மனிதனுடைய அத்யாத்மிக வாழ்க்கையைப்பற்றிய விதிகளாக இருப்பதால் அவை நிரந்தரமானவை என்ற கருத்துக்கள் தெளிவானமுறையில் விவாதிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். சிருஷ்டி நித்தியமானதுஎன்னும் கோட்பாடு இந்துசமயத்தில் மட்டுமன்றிப் பௌத்த மதத்திலும்ஜைனமதத்திலும்இருக்கின்றது. இந்தியாவில் உள்ள சம்பிரதாயங்களையெல்லாம்தொகுத்தால் அவைஞானமார்க்கம் அல்லது பக்திமார்க்கத்தை அனுசரிப்பவைகளாக இருப்பதைக் காணலாம். ஸ்ரீ சங்கராச்சாரியருடைய சாரீரஹ பாஷ்யத்தின் முன்னுரையைச் சற்று ஊன்றிக் கவனியுங்கள். அதில் ஞானத்தைப்பற்றி நன்கு ஆராய்ச்சி செய்திருப்பதைக் காண்பீர்கள். அதன் முடிவு ஆன்ம ஞானமும், முக்தியும் கிரியை, சமயம், ஜாதி, நிறம், கோட்பாடு ஆகியவைகளைப் பொறுத்தவை அல்ல என்பதாகும். விவேகம், வைராக்கியம் (சமம், தமம், உபரதி, திதிட்சை, சமாதானம், சிரத்தை) என்று சொல்லக்கூடிய சமாதி ஷட்க சம்பத், முமுக்ஷுத்வம் என்னும் சாதனைகளை உடையவர்களுக்கே ஞானம் உண்டாகும்.

பக்தி மார்க்கம் வங்காளிகளுக்கிடையில் அனுஷ்டிக்கப்படுகின்றது. அவர்களுக்கு அத்தாட்சியாக இருக்கும் நூல்களும் ஜாதி, தேசம், பால் உணர்ச்சி ஆகியவை மோட்சத்துக்குத் தடைகள் என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கின்றன. மனிதனுக்குப் பக்திதான் அவசியம் என்பதைஅவை வலியுறுத்துகின்றன.

ஞானமும் பக்தியும் சமுதாயப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பதுதான் முக்தியடைவதற்குரிய நிபந்தனைகளாகும் என்று எப்பொழுதும் போதிக்கவில்லை. வியாசருடைய சூத்திரத்தைக் குறித்துச் சங்கரர்,இராமானுஜர், மத்துவர் ஆகியவர்கள் விவாதித்திருப்பதையும் நீங்கள் படித்துப் பார்க்கலாம். உபநிஷதங்களையும் படித்துப் பாருங்கள். சம்ஹிதைகளையும் படித்துப் பாருங்கள். அவை மற்ற மதங்களைப்போல் முக்தியைப் பற்றி ஓர் எல்லைக்குட்பட்ட கருத்துக்களைக் கூறவில்லை. புறமதச் சகிப்பை நம் மதத்தில் எங்கும் காணலாம். சம்ஹிதைப் பகுதியில் நாற்பதாவது அத்தியாயம் 'ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானம் கர்மசங்கினும்' என்று ஆரம்பிக்கிறது. இக்கருத்து எங்கும் நிலவி வருகிறது. இந்தியாவில் அவரவர்களுக்கு விருப்பமான தெய்வத்தை வழிபாட்டுக்கு வைத்துக்கொள்ளலாம். தெய்வ நம்பிக்கை அற்றவனாகவும் இருக்கலாம். அக்ஞேயவாதியாகவும் இருக்கலாம். எந்த நிலையில் வேண்டுமானாலும் இருக்கச் சுதந்தரம் உண்டு. ஆனால் அவர்கள் யாவரும் சமூக ஒழுங்குப் பாட்டுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும். சமூகச்சட்டதிட்டத்தை மீறுபவர்களுக்குச் சமுதாயம் தண்டனை தரலாம். ஆனால் அந்த மனிதன் முக்தி அல்லது மோட்சம் அடைவதற்குத் தடைசெய்யப்படுவனல்லன். பதிதனாக இருக்கும் கீழ்மகனும் முக்திக்குத் தடைசெய்யப்படுபவனல்லன். சமுதாயப் பழக்கத்தையும் சமயத்தையும் ஒன்றுபடுத்தி நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது. மலையாள தேசத்தில் கீழ்மகன்

ஒருவன் உயர்ந்த ஜாதியினர் வசிக்கும் தெருவில் போவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் அதே மனிதன் முகமதியனாகவோ கிறிஸ்தவனாகவோ ஆகிவிட்டால் அவன் எங்குவேண்டுமானாலும் செல்ல அனுமதிக்கப்படுகின்றான். இந்த நியதியானது ஓர் இந்து அரசனுடைய ஆட்சியில் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்திருக்கிறது. இது கேட்பதற்கு விசித்திரமாக இருக்கலாம். மதங்களிடத்தில் இந்து மதத்துக்குச் சகிப்புத்தன்மை உண்டு என்று இது அறிவிக்கிறது. மிக மோசமான சந்தர்ப்பங்களிலும் இந்தச் சகிப்புத்தன்மை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதே வாழ்க்கையில் மனிதன் கடவுள் நிலையை அடைந்தாக வேண்டும் என்ற ஒரு கருத்தை இந்துமதம் வலியுறுத்துகிறது. அக்கருத்தை விளக்குவதற்கு ரிஷிகள் அரும்பாடுபட்டிருக்கிறார்கள். மற்ற மதங்களைக் காட்டிலும் இந்துமதம் கடவுளை அடைதலைப்பற்றிய கொள்கையில் வேறுபாடுடையதாக இருக்கிறது. அத்வைதம் கடவுளை அறிவது என்பது கடவுள் மயமாவதாகும் என்று தர்க்க ரீதியாக விளக்குகிறது. வேதகால ரிஷிகளும் விதுரரும் தர்மவியாதரும் இன்னும் அவர்களைப் போன்ற பெரியோர்களும் கடவுள் மயமாவதே மனிதனின் குறிக்கோள் என்று பகர்ந்திருக்கிறார்கள். நிச்சலதாசரும் தம் விசார சாகரத்தில் ஆணித்தரமாகப் பகர்ந்திருப்பதாவது: ''கடவுளை அறிகிறவர் கடவுளே ஆகின்றார். அவருடைய வார்த்தைகள் வேதவாக்குகளாகின்றன. அவருடைய வாக்குகள் அக்ஞானத்தை அகற்றுகின்றன. அவருடைய வாக்குகள் சம்ஸ்கிருதத்தில் அமைந்திருந்தாலும் சரி, மக்கள் பேசும் மொழியில் அமைந்திருந்தாலும் சரி சக்தி உடையவையாகின்றன.''

துவைதிகள் பிரம்மமாகிய கடவுளை அறிய வேண்டும் என்று சொல்கிறார்கள். அத்வைதிகள் பிரம்மமாகி விடவேண்டுமென்று சொல்கிறார்கள். பிரம்மத்தை அறிவதும் பிரம்மமாவதும் வேதத்தின் குறிக்கோளாகும். இறைவனை அடைவதில் உள்ள பல படித்தரங்களைப் பற்றி வேதங்கள் போதிக்கின்றன. வியாசருடைய சூத்திரங்களுக்கு ஸ்ரீ சங்கராச்சாரியார் கொடுத்திருக்கும் அதி அற்புதமான விளக்கம் அவருடைய புத்திக் கூர்மையை விளக்குகிறது.

பிரம்மம் ஒன்றே மெய்ப்பொருள். அதீத நிலையில் பிரம்மம் ஒன்றுதான் இருக்கிறது. கீழ்நிலையில் பிரம்மம் தன்னைப் பலவிதமாகத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. பிரம்மத்தின் பல்வேறு தோற்றங்களே இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் வெவ்வேறு சமயங்கள் விளக்கிக் கொண்டிருக்கின்றன. அச்சமயங்கள் சொல்வதும் உண்மையே. ஆனால் சில சமயங்கள் மற்ற சமயங்களை விட மேலான விளக்கங்களைக் கொடுக்கின்றன. ஒரு மனிதன் சூரியனைநோக்கி நேராகச் செல்ல ஆரம்பிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் செல்லும் ஒவ்வொரு நிலையிலும் சூரியனைப் பற்றிய புதுப்புதுக் காட்சிகளைக் காண்பான். சூரியனை அடையும் வரையில் சூரியனுடைய பருமன், வெளிச்சம் ஆகியவை ஒவ்வொரு நிலையிலும் அவனுக்குப் புதியதாக இருக்கும். அவன் ஆரம்பத்தில் சூரியனை ஒரு பெரிய பந்தாகக் காண்கின்றான். அவன் மேலே போகப்போக அது பெரிதாகிக் கொண்டே வருகிறது. சூரியன் தான் கண்ட பந்துபோன்று சிறியது மன்று; பல படித்தரங்களில் தான் பார்த்த சூரியன்களும் உண்மைச் சூரியன் ஆகா என்பதை அறிகின்றான். ஆனாலும் ஒவ்வொரு படித்தரத்திலும் தான் பார்த்தவை உண்மைச் சூரியனுக்கு வெவ்வேறானவை அல்ல என்று அறிகின்றான். அதேபோன்று வெவ்வேறு சமயங்கள் கூறும் தெய்வங்களும் உண்மையான பிரம்மம் அல்ல என்றாலும் உண்மையான பிரம்மத்துக்கு அவை வெவ்வேறானவையல்ல. சில சமயங்கள் போதிக்கும் கொள்கைகள் பிரம்மத்துக்குப் பக்கத்தில் இருக்கின்றன. இன்னும் சில சமயங்கள் போதிக்கும் கொள்கைகள் பிரம்மத்துக்கு வெகுதூரத்தில் இருக்கின்றன. இவ்வுண்மையை அறிந்து சமயப் பூசல்களை ஒழித்து விட்டு மெய்ப்பொருளை அறிய முயலவேண்டும். (தொடரும்)

சமூகநலன்

(சுவாமி ஸதானந்தர்)

மதமாற்றம்

ஒரு மரத்தின் வாழ்க்கையை விட ஒரு விலங்கின் வாழ்க்கை மேலானது. விலங்கின் வாழ்க்கையை விட மனிதனின் வாழ்க்கை மேலானது. இதை நம்மால் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. அதற்குமேல் மானுட வாழ்க்கையில் எது மேலானது என்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம். அறிவற்றவனை விட அறிவுள்ளவன் சிறந்தவன். சோம்பேறியை விடச் சுறுசுறுப்பும் உழைப்பும் உள்ளவன் மேலானவன். ஆடம்பரக் காரனைக் காட்டிலும் அடக்கமானவன் நல்லவன். சுயநலக்காரனைக் காட்டிலும் சுயநலமற்றவன் சிறந்தவன். சண்டைக்காரனைக் காட்டிலும் ஒற்றுமையை உண்டுபண்ணுபவன் மேலானவன். ஊதாரியை விட எளிமையும் சிக்கனமும் உடையவன் மேலானவன். எல்லா நற்குணங்களையோ ஏதோ ஒரு நல்ல குணத்தையோ உடையவன் சிறந்தவன். தீய இயல்புகள், தீய பழக்கங்கள், தீய செயல்கள் இவற்றின் அளவைக்கு ஏற்றவாறு ஒருவன் கீழ்மகன் ஆகிறான். அவன் இன்னும் பண்பில் உயரவில்லை. இந்தப் பண்பை வளர்ப்பதற்கு என்று ஏற்பட்டது தான் மதம் ஆகும். இயல்பாகவே இவ்வுலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்கிற அவா மிக்கவர்களாக ஜீவர்கள் பிறப்பெடுத்திருக்கிறார்கள். சிற்றுயிர் நிலையில் பஞ்சஇந்திரிய சுகங்களை வேண்டியவாறு அனுபவித்து வந்த ஜீவனுக்கு மானுட நிலையை எட்டியான பிறகு மனது இன்னும் விரிவடைந்து விட்டால் செல்வம், கீர்த்தி, செல்வாக்கு, அதிகாரம், பெயர், புகழ், ஆதிக்கம், கல்வி இன்னோரன்ன விஷயங்களில் பற்றுதலும் நாட்டமும் வந்து விடுகின்றன. ஜீவன் மேலான ஜீவனாகப் பரிணமிப்பதற்கு அவனிடத்து மேலான ஆசைகள் இடம் பெற்று வரவேண்டும். அப்பொழுது தான் மேலான ஜீவனாகப் பரிணமிக்க முடியும். சிற்றுயிர் நிலையில் ஆசையின் விளைவாகப் படிப்படியாகஇந்திரியங்களை ஒவ்வொன்றாகப் பெற்று ஜீவனாகப் பரிணமித்தது. தான் நாடும் இன்பத்தை அனுபவிப்பதற்கு ஏற்ற இந்திரியம் பெற்றதாக அது பரிணமித்தது. மானுட நிலையில் இந்திரியம் மேலும் பெறுதல் என்பது இல்லை. இனி வளர்ச்சி மனதில் அமையவேண்டும். மரத்தில் பூவாகி, பிஞ்சாகி, காயாகி வந்த கனி இனி உள்ளே வளர வேண்டும், கனிய வேண்டும். அப்போது தான் அது சுவைமிக்க கனி ஆகிறது. அதுவே ஒரு மரத்தின் முழுப் பயன் ஆகும். அது போன்று மானுட ஆசாபாசங்களை வென்று பண்பில் மிக்கவனாக வளர்ச்சியடைய உதவுவதற்காக மதம் ஏற்பட்டது. அறிவுள்ள முன்னோர் அனுபவத்தினாலும் அறிவினாலும் கண்டு கொண்ட உண்மைகள் அவை. நன்றாகப்படி, இந்தப் பழக்கம் வேண்டாம், இன்னாரோடு சேர்ந்து பழகு என்று தந்தை மகனுக்குச் சொல்லித் தருவது போன்றது மதம். தந்தை புகட்டாவிட்டாலும் மகனும் நாளடைவில் இந்த உண்மைகளை நன்கு அறிந்து கொள்கிறான். ஆனால் இந்தப் பரிசோதனையில் வாழ்நாள் வீணாகிறது. அறிவுள்ளவர்கள் இந்த வீண் நாளைக் குறைக்கிறார்கள். இந்த நற்போதனைக்கு மதம் என்று பெயர். மதத்தில் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று அறநெறி, ஒழுக்கம், நல்வாழ்வு, சீலம். மற்றது நிராசை, தூய்மை, பக்தி, ஞானம், தியாகம், முக்தி ஆகும். முதல் வகுப்பில் தேர்ச்சி பெறாமல் எப்படி இரண்டாம் வகுப்புக்கு வரமுடியாதோ அப்படி அறநெறியில்லாத வாழ்வில் அதற்கு மேலான அருள்நாட்டம், அதில் வெற்றி காணுதல் ஒருநாளும் சாத்தியமில்லை.

உலகின் பல்வேறு பாகங்களில் பல்வேறு இயல்புகளை உடைய மானுடர் வாழ்ந்து வருகின்றனர். ஆங்காங்கு உள்ள சீதோஷ்ணத்துக்கு ஏற்ற விளைபொருள்கள், வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் இவை தாமாக, இயல்பாக உரு எடுத்தன. இவைகளின் அடுத்த வளர்ச்சி அறிவு, பண்பாடு, நாகரி

கம் ஆகும். இவை உருவாவதில் இயற்கையின் பங்கு பிரதானமானது. அங்ஙனம் பல்வேறு பாங்குடைய மக்களுக்குப் பலவிதமான சமயங்கள் உருவெடுத்தன. தலை வாரசிப்புச் செய்கிறோம். மாட்டுக்கொம்பு, மரம், தந்தம் என்றுபல்வேறுபொருள்களில்செய்ததாக இருந்தாலும் அதன் காரியம் ஒன்று தான். தலையில் அழுக்கைப் போக்குதலும் கேசத்தை அழகாக அமைத்தலும் அதன் காரியம் ஆகும். அதில் வேற்றுமை இல்லை. அதேபோன்று அனுஷ்டான முறைகளில் தான் மதங்களுக்கிடையில் வேற்றுமை உண்டு. அது ஏற்படுத்தும் காரியம் ஒன்று தான். அதாவது மனிதனை மேலானவனாக, நிறை மனிதனாக, தெய்வமனிதனாக ஆக்குதலே ஆகும். இதைச் செய்யத் தவறினால் மதம் பிரயோஜனமற்றது.

மதம் தன்னளவில் பரிசுத்தமானது. அதை அனுஷ்டிக்கிறவர்கள் செய்கிற தவறு மதத்தின் பேரிலேயே வெறுப்பை ஊட்டிவிடும். கிறிஸ்தவர்களும் முஸ்லீம்களும் ஓடி ஓடி மதமாற்றம் செய்கிறார்கள். பிலிப்ஸ் பல்பு ஒன்றுதான் வெளிச்சம் தரும், மற்றது வெளிச்சம் தராது என்பது போலவும், எங்கள் கடையில் சாப்பிட்டால்தான் பசி தீரும் மற்றக் கடைகளில் சாப்பிட்டால் பசி தீராது என்பது போலவும் எங்கள் கடை ஒன்றில்தான் நீங்கள் துணி வாங்கவேண்டும். வேறு கடைகளில் துணி வாங்கக்கூடாது என்பது போலவும் அவர்களின் மதப் பிரசாரம் உள்ளது. ஒருவர் அபிப்பிராயத்துக்கும் இடமில்லை, தன் அபிப்பிராயம்தான் சரி என்பதும், தான் எடுத்துக்கொண்ட கட்சிக்காரன் எச்செயல் செய்திருந்தாலும் அவன் தான் ஜயிக்க வேண்டும் என்று வழக்காடும் வக்கீலைப் போலவும் உள்ளது அவர்களின் மதப்பிரசாரம். இம்முறையில் தனி மனித சுதந்தரம் போய்விடும், நியாயத்துக்குப் பதில் அநீதியே தலையெடுக்கும். அதேபோன்று முகமதிய, கிறிஸ்தவர்களின் இன்றைய மதமாற்றம் உள்ளது. மனிதனிடம் உள்ள பேராசை, போட்டி, பொறாமை, இன்பநாட்டம் இவைகளின் நிலையற்ற தன்மையை, தீய தன்மையை விளக்கிக் காட்டி அவைகளைத் தவிர்க்கவும் நல்வாழ்வில் ஈடுபடவும் மதம் போதிக்கிறது: அதற்குப் பதிலாக ஆசை ஊட்டி, துவேஷங்களை வளர்த்து, சூதும் வாதும் செய்து, பொய்ப் பிரசாரம் செய்து, காசுகொடுத்து, சலுகை கொடுத்து மனதைப் பேதலிக்கச் செய்து, எதிர்க்கிறவர்களைப் பயமுறுத்தி அழிக்கக் குண்டுகளைக் கூடப் பயன்படுத்தும் இந்தக் கூட்டம் ஒரு மதமா? இதனால் உலகுக்கு என்ன நன்மை உண்டாகும்? என்ன நினைத்துக்கொண்டு இத்தனையும் செய்கிறார்களோ அதுவே அவர்களுக்குப் பாதகமாய், அழிவுக்குக் காரணமாய் அமையப்போகிறது. துரியோதனனின் தூண்டுதலில் ஒரு ரிஷி பாண்டவர்களைக் கொல்லும்படி ஒரு பூதத்தை ஏவினார். பாண்டவர்கள் நச்சுப் பொய்கையில் இருந்த நீரை அருந்தியதன் விளைவாக மயங்கிக் கிடந்தனர். இவர்களை இந்தநிலையில் பார்த்த இந்தப் பூதம் செத்தவர்களின் மீது தன்னை ஏவியிருக்கிறாரே என்று ஏவின ரிஷியைக் கொன்றுவிட்டது. விரோதம் பாராட்ட வேண்டிய அவசியமே இல்லாத ஓர் இனத்தின்பேரில் கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் காட்டுகிற விரோதம் அவர்களையே அழிக்கப் போகிறது. மானுட வாழ்வும் அவர்கள் நாடும் இன்பமும் எத்தகையன என்பதை விளக்க வேதாந்தத்தில் ஒரு கதை இருக்கிறது. வழிப்போக்கன் ஒருவன் வனத்திடையே போய்க்கொண்டிருந்தபோது புலி ஒன்று துரத்த, தப்பிக்கஓடிய வழிப்போக்கன்பாழுங்கிணறு ஒன்றில் வீழ்ந்தான். கைக்கு எட்டிய கொடி ஒன்றைப் பற்றிக்கொண்டு தொங்கினான். கிணற்றின் கீழே நல்ல பாம்பு ஒன்று சீறியது. மேலே புலி ஒன்று எட்டிப் பார்த்தது. அந்தக்கொடி மெல்ல மெல்ல அறுந்து அவன் கீழே தாழ்ந்து கொண்டிருந்தான். இந்த நிலையில் கலைந்த தேன் கூட்டினின்று இரண்டு சொட்டுத்தேன் அவன் கையில் விழ அதை நக்கிச் சுவைத்தானாம் அவன். இதே நிலைமையில் இன்றைய அரசியல்வாதி உள்ளான். எங்கும் போட்டியும் பொறாமையும் விரோதமும் ஆபத்தும் அவனை எந்நேரமும் சூழ்ந்திருக்கின்றன. இந்த நிலையில் உள்ள

அரசியல் தன் ஸ்திதியை உறுதியாக்கக் கை யாளுகிற உபாயங்கள் யாவும் சமூகத்தைச் சீர்குலைக்கின்றன. அரசியல் தொழிலாளர் களின் மனப்பான்மையையும், கீழ் இனத்தவ ரின் மனப்பான்மையையும் கெடுத்ததுடன் மதத்திலும் பிரவேசித்திருக்கிறது. ஹிந்து மதத்தை நசுக்கக் கிறிஸ்தவர்கள், முஸ்லீம் கள் முயல்கின்றனர். அதைத்தடுக்க ஹிந்துக் களும் அரசாங்கமும் முன்வராவிடில் நம் சமு தாயம் அழிந்துபட்டுப்போம். ஓர் அபலையின் கண்ணீர் ஒரு ராஜ்யத்தையே அழிக்கவல் லது என்பார்கள். நீதியே ராஜ்யபரிபாலனத் தின் உயிர்நாடி. பாரபக்ஷமற்ற தந்தையின் ஸ்தானத்தில் அரசன் இருக்கவேண்டும். மற்ற மதங்களின்பேரில் தூஷணை, வெறுப்பு, அழித்தல் காரியங்களில் இறங்கியவன் பிறகு தன் சமூகத்தில் ஒரு பிரிவினருடன் இதே கதியில்தான் வாழ்வான். அந்த மனது சும்மா இருக்காமல் தன் இனத்தவரையே பாகுபடுத்தி, குறைகூறி அழிவை உண்டு பண்ணும். மத மாற்றம் செய்யும் மனப் பான்மை மனித சிந்தனையின் சுதந்தரத் திற்கே, அனுஷ்டான சுதந்தரத்திற்கே சாபம்போன்று உள்ளது. ஹிந்து ஒருவனின் மனப்பான்மையை நீங்கள் அறிகிறீர்களா? ‘ஆசை வேண்டாம், நல்லவனாய் இரு, ஒற்று மையாய் இரு, அன்பாய் இரு, உபகாரியாய் இரு’ என்று உபதேசிப்பானே தவிர மதம் மாறு என்று சொல்லமாட்டான். நீங்கள் ஹிந்துவின்பேரில் செலுத்துகிற விரோதம் தர்மத்தின்பேரில் செலுத்துகிற விரோதம் ஆகும். தர்மத்தைப் புறக்கணித்த நீங்கள் நெடிது வாழ்வது எங்ஙனம்? ஹிந்து மதத் தில் உள்ள மேன்மைகளை அறிய, உணர முன் வராத உங்கள் அறிவீனத்தை என் சொல் வது? உலக, உடல் சௌகரியங்களை மட்டும் நீங்கள் ஏற்கிறீர்கள். மேலான பரதத்து வத்தை ஏற்க மறுக்கிறீர்கள். விக்ஞான சௌகரியங்கள் ஸ்தூலக் கண்ணுக்குத் தெரி கின்றன. பரதத்துவங்களை அறிவதற்கோ மனச் சுத்தம் வேண்டும். வெறும் அறிவுக் கூர்மை போதாது. தூய வாழ்க்கையின் விளைவாக ஏற்படும் ஞானக்கண்வேண்டும். ஆகவே முதலில் பரந்த மனப்பான்மை வேண்டும். கடவுள் ஒருவர்; அவருக்கு வடிவங்கள் பல. அவரை அடையச் சாதனங்கள் பல. எல்லாச் சாதனங்களும் அனுஷ்டானத்துக்கு உரியவைகளே. முறை யாகப் பின்பற்றினால் எல்லாவற்றின் மூல மாகவும் அந்தப்பரவஸ்துவை அடையலாம். மானுடர் யாவரும் அன்புக்குரியவர். எல் லாரும் கடவுளின் குழந்தைகள். வெறுப்பும் துவேஷமும், சூதும்வாதும், பொய்யும் பித்த லாட்டமும், பேராசையும் சமூகநலனைக் கெடுக்கும். விவசாயத்தைப் பாழ்படுத்தும் பூச்சிகளைப் போன்றவை அவை. பூச்சியை எப்படித் தீவிரமாக, விரைவாக அழிக்கி றோமோ கட்டுப்படுத்துகிறோமோ அவ்வளவுக் குப் பயிர் உருப்படியாகும். அதே போன்று இக்குணங்களைக் கொண்ட தீயவர்களை உடனேஅரசாங்கம் தடுக்காவிட்டால் சமூகம் அழிந்துபோகும். மனிதனிடம் இயல்பாக உள்ள கெட்ட குணங்களால் ஏற்படும் தீமை களை நீதித்துறையும் காவல்துறையும் போக்குவதைவிடச் சமயம் போக்கியிருக் கிறது என்பது அறிவுள்ளவர்களுக்கே விளங் கும். சமயம் இல்லாவிட்டால் மானுட ஜீவிதம் விலங்கு நிலையிலேயே நின்றிருக் கும். ஆகையால் மதங்கள் சமூக நலனுக்கு வேண்டும். அந்த மதங்கள் பல தரப்பட்ட வையாக இருக்கும்; இருக்கவேண்டியதும் அவசியம். செல்வம் போனால் சம்பாதித்து விடலாம். ஆரோக்கியம் கெட்டால் மறுபடி யும் பெற்றுவிடலாம். சீலம், ஒழுக்கம் கெட்டால் அவைகளைத் திரும்பப் பெறுவது அவ்வளவு எளிதன்று. மிகக் கேவலமான நோக்கங்களால், வெறிகளால் மதமாற்றம் நிகழ்வது சமூகத்தைச்சிதைத்துவிடும். சமூக நலன் நன்கு பாதுகாக்கப்படவேண்டுமானால் மதம் காப்பாற்றப்படவேண்டும். மத மாற் றம் தடை செய்யப்படவேண்டும். மனித னைத் தெய்வீகமயமாக்கும் செயல் மதத்தின் மூலம் நிகழவேண்டும். ஆட்களைத்திரட்டும் நோக்கத்துடன் நிகழும் மதமாற்றம் சமூ கத்துக்கு எவ்வித நலனையும் தராது. மதத் தின் பெயரால் மனிதன் தன்னிடத்தி லுள்ள வெறுப்பையும், குறுகிய மனப்பான் மையையும் வெளிப்படுத்தக்கூடாது.

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி பாலசுந்தரன் M. A.)

எல்லார்க்கும் எல்லாம் கற்பித்தல் வேண்டும் என்னும் நியதி ஒப்புக்கொள்வதற்கு இல்லை. இன்னது கற்ற பிறகு இன்னது கற்கவேண்டும் என்னும் நியதி உண்டு. இம்முறைதான் கற்பித்தலில் நியாயமான முறையாகும்.

ஏற்றுக் கொள்ளும் தகுதி இல்லாதவர்களுக்குக் கல்வி புகட்டுவதால் யாதொரு பயனும் இல்லை. களர் நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சி என்ன பயன்? கேட்கும் அறிவுத்திறன் இல்லாத மூடர்களுக்குக் கல்வி கற்பிப்பதன் காரணமாக, கல்வியின் தகுதி குறைகிறது. கற்பிப்பவரின் ஆற்றல் வீணுகிறது. நேரம் கெடுகிறது.

தகுதியை அறிந்தே ஒரு தொழிலைச் செய்யச்சொல்லுகிறோம். தகுதி அற்றவர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்யச் சொல்ல மாட்டோம். அதேபோன்று, தகுதியுடையவர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிப்பது சாலவும் சிறந்தது.

பொருத்தம் இல்லாதவர்கள் ஒரு தொழிலைச் செய்கின்ற சமயம், செய்யக்கூடிய அந்த நல்ல தொழிலும் கெட்டு விடுகிறது. பிறருக்குத் தீமையாகி விடுகிறது.

அங்ஙனமே, ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற தகுதி ஒரு சிறிதும் இல்லாதவனுக்குக் கற்பிக்கப்படுகின்ற கல்வி பயன் இல்லாமல் வீணுகிறது. அரைகுறையாகச் செவியில் பட்டதற்குத் தவறான பொருள் கொள்கின்றான். அப்படிப் பொருளைத் திரித்துக் கொண்டதன் காரணமாக உண்மைப் பொருளைக் காண முடியாமல் போய் விடுகிறது. கேட்டவனுக்கும், மற்றவனுக்கும் தீமை ஏற்பட்டு விடுகிறது.

கல்லாதவர்களுடைய இயல்பை அறிந்து, அவர்கள் இயல்புக்கு ஏற்றவாறு கற்பிப்பதே கல்வி கற்பிக்கும் முறையாகும்.

உலகத்தில் வாழ்கின்ற மக்களை நாம் பார்க்கிறோம். சிலரோடு பேசிப் பழகுகிறோம். சிலரைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். மக்கள் என்கிற முறையில் எல்லாரும் ஓர் இனமே. ஆனால், சில வேறுபாடுகள் உள்ளன. உருவத்தில் வேறுபாடு இருக்கலாம். நிறத்தில் வேறுபாடு இருக்கலாம். குணத்தில் வேறுபாடு இருக்கலாம். பழகும் பழக்கத்தில் வித்தியாசம் இருக்கும்.

இந்த வேறுபாடுகளுடன் வேறு ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு என்ன? அறிவு வித்தியாசம் தான் அந்த வேறுபாடு. அறிவில் வித்தியாசப்படுகின்றவர்களும் நம்மிடையே உள்ளனர். ஒருவருடைய அறிவைப் போன்று, மற்றவருடைய அறிவு இருப்பதில்லை. இதை நாம் நம்முடைய அனுபவத்திலே பார்க்கிறோம்.

நிறத்திலோ, உருவத்திலோ ஏதாவது உறுப்புக் குறைபாடுகள் இருந்தாலோ அவற்றின் காரணமாக மக்களுக்குள் வேறுபாடு கருதக்கூடாது; அப்படிக் கருதுவது தவறு. பெரியவர்கள் அம்மாதிரி வித்தியாசம் பாராட்டமாட்டார்கள்.

ஆனால், அறிவில் வித்தியாசம் உள்ளவர்களிடையே வேறுபாடு உண்டு. அந்த வேறுபாட்டைச் சான்றோர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அறிவில் மேம்பட்டவர்களுக்குச் சிறப்பு உண்டு. எல்லாரும் அறிவுடையவர்களை மதிப்பார்கள்.

அறிவில் கீழ்த்தரமானவர்களுக்கு எந்த விதச் சிறப்பும் இல்லை. அவர்களைச் சான்றோர்கள் பாராட்டமாட்டார்கள்.

அறிவுடையவர்களை எல்லாரும் பார்க்க விரும்புவார்கள். அவர்களுடைய அறவுரைகளைக் கேட்க விழைவார்கள். அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளுவதைத் தங்களுக்குக் கிடைக்கும் பாக்கியமாகக் கருதித் தொடர்பு வைத்துக் கொள்ளுவார்கள்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது அனுபவ மொழி. ஒருவரிடத்தில் அறிவு இருந்தால் போதும். வேறு எதுவும் இல்லாமல் போனாலும் சரி; எல்லாம் அவரிடத்தில் இருப்பதாகவே கருதப்படும்.

எல்லாம் அவரிடத்திலே இருக்குமானல்

அவருக்கு யாருடைய தயவும் வேண்டியது அவசியம் இல்லை; யாரையும் தேடிச்செல்ல வேண்டிய தேவையும் இல்லை. அறிவுடைய வராகிய அவர் எங்கே இருந்தாலும் சரி; எல்லாரும் அவரை நாடியே செல்லுவார் கள். கடலைப்போன்ற ஆழமான நுட்பமான அறிவு, பரந்து விரிந்த அனுபவ அறிவு இரண்டும் அவரிடத்தில் உள்ளன. நதிகள் எல்லாம் கடலைத் தேடியே செல்லுகின்றன.

அதே போன்று அறிவுடையவர்களை, அவர்கள் தங்கி இருக்கக்கூடிய இடத்தைத் தேடிச் சென்று பயன் பெறுவார்கள். அறிவு உடையவர்கள் எங்கே இருந்தாலும் சிறப் பைப் பெறுவார்கள்.

ஸ்ரீ குமர குருபரர் இதைப் பற்றி ஒரு பாட்டலில் சொல்லுகிறார்.

“ வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங்கு உவப்பெய்தார்—
[மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு”

வீட்டுக்குள்ளே இருப்பது பூனை. வீட்டுக் குள்ளே இல்லாமல் வெளியே கட்டுத்தறி யில் கட்டப்பட்டிருப்பது யானை.

வீட்டுக்குள்ளே இருக்கின்ற காரணத் தால் பூனைக்குப் பெருமை வந்து விடாது. வீட்டுக்கு வெளியே, கட்டுத்தறியில் கட்டப் பட்டிருப்பதால் யானை இழிந்தது ஆகி விடாது.

அரசனுடைய சபையைக் காத்துக் கொண்டு, அந்த அரச சபையிலே இருந்தால் தான் பெருமைகளெல்லாம் நம்மை வந்து அடையும் என்று எண்ணிக்கொண்டு, அங் கேயே சான்றோர்கள் காத்துக் கிடக்கமாட் டார்கள்.

மேன்மைக் குணம் இல்லாத இழிந்தவர் கள், அந்த அரச சபையிலேயே எந்த நேர மும் காத்துக் கிடப்பவர்களாக இருந்தாலும் அதனல், அவர்களுக்குப் பெருமை வந்து விடாது; மகிழ்ச்சி அடையமாட்டார்கள்.

இருக்கின்ற இடத்தால் மட்டும் ஒருவருக் குச் சிறப்பு வந்து சேர்ந்துவிடாது. இருக் கின்றவரின் தகுதியால் இடத்திற்குப் பெருமை வந்து சேருவதும் உண்டு.

பிறரைச் சார்ந்து வாழ்பவர்களிடத்தில் மனேபலம் கிடையாது. தன்னம்பிக்கை இருக்காது. நுட்பமான அறிவுத் திறன் இருக்க நியாயம் இல்லை. மற்றவர்களைச் சார்ந்து அவர்கள் வழிகாட்ட அதன் பிரகா ரம் வாழ்கின்றார்கள். மற்றவர்களுக்கு வழி காட்டும் திறன் அவர்களிடத்தில் இல்லை.

சான்றோர்களிடத்தில்எல்லாவகைப்பண்பு களும் நிரம்பியுள்ளன. நிறைந்த மன வலிமை உடையவர்கள் அவர்கள். தன் னம்பிக்கை உடையவர்கள். நுண்மாண் நுழைபுலம் உடைய பெருமக்கள் அவர்கள். ஆறறிவு பெற்றுள்ள மனிதனின் அடிப் படைப் பண்பு என்ன? உயிர்க்கு உறுதி தரும் சிறந்த ஒன்றைத் தெரிந்துகொள்ளுத லாகும்.

சான்றோர்கள் தங்களுக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி நன்மை செய்கிறார்கள். இன்னும் சொல்லப்போனல், தாங்கள் அறிகின்றவை அனைத்தும் மற்றவர் களுக்காகவே என்னும் பேருணர்வுகொண்ட வர்கள் அவர்கள். அவர்களுக்குரிய பெரு விருப்பம், தங்களால் மற்றவர்கள் நன்மை பெறுதல் வேண்டும் என்பதே. ‘‘தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு’’ மகிழ்ச்சி அடைபவர்கள் அவர்கள்.

மனத்தில் தெளிவு உடைய அச் சான்றோர் கள், நுண்மைப் பொருளான எண்ணத்தின் வாயிலாகவும், பருப்பொருளான செயல் களின் வாயிலாகவும் வாழ்கின்றார்கள். எண் ணத்தின் வாயிலாகச் சிந்தித்தவற்றைச் சொற்களின் வாயிலாக விளக்கிக் காட்டு கிறார்கள்.

ஞானிகள் உலகத்தைப் பொருள்படுத்துவ தில்லை. ஏனென்றால் உயர்வு என்பது உல கப் பொருள்களில் இல்லை; காண்கின்ற உள் ளத்தில்தான் இருக்கிறது என எண்ணுபவர் கள் அவர்கள். மண் ஓட்டைச் செம்பொன் ஞகவும், செம்பொன்னை ஓடாகவும் காண் பவர்கள் அவர்கள். ‘‘மா மனிதர்கள்’’ அவர் கள். மனித வாழ்க்கையில், மனிதனே பின் னிய வலைகளில் அவனே சிக்கிக்கொண்டு மீள முடியாமல், மீள்வதற்கு வகை தெரியா மல் தவிக்கிறான். வலைகள் இருப்பதால் வலை

களில் விழவேண்டும் என்பது இல்லை. தடைப் பந்தயத்தில் [Hurdles Race] தடைகள் வைக்கப்பட்டிருக்கும். தடைகளைக் கடந்து ஓடி வெற்றி பெற வேண்டும். அது போன்று, வாழ்க்கையில் ஏற்படுகின்ற வலைகள், தடைகளிலிருந்து தப்பி, வாழ்க்கையை நினைத்த குறிக்கோளில் செலுத்துவதே உண்மையான வாழ்வு ஆகும். இந்த லட்சிய வாழ்வினை உடையவர்கள் ஞானியர்கள். இவர்கள் எங்கு இருந்தாலும் போற்றுதற்கு உரியவர்கள். இவர்களை நாடிப் பயன் பெறும் பொருட்டுச் செல்பவர்கள் பேறு பெற்றவர்கள் ஆவார்கள்.

எனவே, சான்றோர்கள் எங்கு வாழ்ந்தாலும் நல் வணக்கத்துக்கு உரியவர்கள் ஆகிறார்கள்.

> "நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றுஇகழ்தல்
> பக்கத்தார் யாவரையும் ஐயுறுதல்—தக்கார்
> நெடுமொழி கோறல் குணம்பிறிது ஆதல்
> கெடுவது காட்டும் குறி"

—நண்பர்களைப் பகைவர்களாக ஆக்கிக் கொள்ளுதல், பகைவர்களை நட்பினராக ஆக்கிக்கொள்ளுதல், வேவு பார்ப்பவர்களை இழிவாகப் பேசுதல், பக்கத்தில் உள்ள எல்லாரையும் சந்தேகப்படுதல், பெரியவர்களுடைய அறவுரைகளை மீறுதல், இயல்பாக அமைந்திருக்கும் நல்ல குணத்தில் இருந்து மாறுபடுதல் ஆக இந்த ஆறும் பின்னால் வரும் கேடுகளுக்குரிய அடையாளங்கள் ஆகும்.

சமூகத்தில் கூடி வாழும் இயல்பு படைத்தவர்கள் மக்கள். கூடி வாழாமல், தனித்து வாழுதல் என்பது தற்காலத்தில் இயலாது. இணைந்து வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற சாதனமாக விளங்குவது நட்பு ஆகும். நல்லவர்களோடு நட்புக்கொள்ளுதல் வேண்டும். நட்புக்கொள்ளுவதற்கு முன்னால் அடுத்தவர்களிடம் கேட்டு நட்புக்கொள்ளுவது என்பது இயலாது. யாரிடம் சிநேகம் கொள்ளுகின்றோமோ அவரிடம் கேட்டுக் கொண்டு சிநேகம் கொள்ளவும் இயலாது. ஆரம்பத்தில் பழகுகின்ற சமயத்தில் அவர் எப்படிப்பட்டவர் என்பதை அனுபவ பூர்வமாகப் படிப்படியாக உணரத் தொடங்கலாம். ஏற்றுக்கொள்ளக் கூடிய, விடாது கைக்கொள்ளவேண்டிய நட்பாக இருக்கும் பட்சத்தில், அந்தச் சிநேகத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

தவிர்த்து ஒதுக்கக்கூடிய வேண்டாத சிநேகமாக இருந்தால், பழித்துப் பேசிக் குறை சொல்லாமலே, அந்தச் சிநேகத்தை விட்டுவிடலாம்.

ஆனால் நல்ல நண்பர்கள் கிடைத்தால் விட்டுவிடக் கூடாது. ஏனென்றால், நல்ல நண்பர்கள் எல்லாருக்கும் கிடைக்கமாட்டார்கள். அப்படியே ஒருவேளை கிடைத்தாலும் அவர்களைக் காலம் பிரித்துவிடும். படிப்புக் காரணமாகவோ, உத்யோகம் காரணமாகவோ, பிரிந்துசெல்லும் காலம் ஏற்பட்டால் பிரிந்து சென்று விடுவார்கள்.

அவர்களை இடம் பிரித்துவிடலாம். வேறு ஊருக்கோ இடத்துக்கோ பிரிந்து சென்று விடுவதால், கூட இருந்து பழகக்கூடிய நட்பு தொடர்ந்து கிடைக்காமல் போய்விடுகிறது.

ஒரேயடியாகப் பிரிந்து சென்றுவிடக் கூடிய சந்தர்ப்பமும் ஏற்பட்டு விடுவதுண்டு.

எனவே, நல்லார் கூட்டுறவு கிடைத்தற்கரிய பேறு ஆகிறது. அப்படி அரியதாய்க் கிடைத்திருக்கும் நட்பினால் பெறக்கூடிய பயன்கள் மிகவும் அதிகம். ஒருவர் எல்லாம் தெரிந்தவராக இருக்க முடியாது. நல்ல நட்பாளர் வாய்க்கின்றபோது, அவரிடமிருந்து பல நன்மைகளைப் பெறுகிறார்.

எனவே, "நட்புப் பிரித்தல்" கேட்டின் அடையாளமாகும். நல்ல நட்பினர்களைப் பகைமை பாராட்டிப் பிரித்தல் கூடாது. நல்ல நட்பினர்களை இழந்துவிடக் கூடாது.

"பகை நட்டல்"—பகைவர்களுடன் நட்புக்கொள்ளுதல் தவறு.

உலகத்தில் ஒருவருக்கு ஒருவர் பகைமை கொள்ளுவதற்குச் சிறிதளவுகூட நியாயமே இல்லை. நல்ல மனம், நல்ல உணர்வு ஆகியவற்றையே இறைவன் நமக்கு அளிக்கிறான். தீயமனம், தீயஉணர்வு ஆகியவற்றை இறைவன் ஒருபோதும் அளிக்கமாட்டான். குழந்தைப் பருவத்தில் இருக்கின்ற மன இயல்பு

வயது ஆக ஆக மாறி விடுகிறது. குழந்தைகளிடத்தில் வெறுப்புக்கொண்டு ஒதுக்குபவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். விருப்பம் உடையவர்களே உள்ளனர். காரணம் என்ன? களங்கம் இல்லாத தூயமனம் குழந்தையிடத்தில் இயல்பாக இருக்கிறது.

தான் என்னும் அகங்காரம் காரணமாக, பகுத்தறிவு வளர வளர, தீய சிந்தனை, அடுத்தவர்களைக் கெடுக்கவேண்டும் என்னும் அழுக்கு மனம், கெடுதலான செய்கை ஆகியவை மனிதரிடத்தில் உண்டாகின்றன. இதன் காரணமாக மனித உள்ளத்தில் பகைமை உணர்வு தோன்றி வளர்ந்து விச்வரூபம் எடுக்கிறது.

எனவே, தீங்கு விளைவிக்கக்கூடிய பகைவர்களுடன் நட்புக்கொள்ளுவது மாபெரும் தவறு.

வெளிப்பகை, உட்பகை என இருவகைப் பகைகளிருக்கின்றன. நேருக்கு நேராக விரோதம் கொண்டு, வெளிப்படையாகப் பகைமை உணர்ச்சியைக் காட்டிக் கேடு சூழ்பவர்களும் உள்ளனர்.

நம்மோடு பழகி, நம்முடன் இருந்து கொண்டே நமக்குக் கேடு செய்பவர்களும் உள்ளனர். இவர்கள் கேடு செய்கிறார்களா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. நாம் அறியாமலே நமக்குக் கேடு சூழ்கிறார்கள். வெளிப்படையாகத் தெரியக்கூடிய பகையைக் காட்டிலும் உட்பகையே மிகவும் தீமை தருவதாகும். வெளிப்படையாகத் தெரியக்கூடிய பகையால், பகை நமக்கு இருக்கிறது எனத் தெரிந்து கொண்டு தப்பித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. உட்பகை அப்படியில்லை. சிநேகிதர் போலவே உடன் இருந்து வருகிறார்கள். எனவே பகைவர்கள், பகைமை பாராட்டுபவர்கள் என்கிற விஷயம் தெரியாமல் போய் விடுகிறது. அவர்களால் துன்பம் அனுபவிக்கின்ற வேளையில் தான் அவர்களுடைய பகைமையை நாம் உணர்கிறோம்.

எனவே, எப்படிப்பட்ட பகைவர்களோடும் நாம் சிநேகம் கொள்ளுதல் கூடாது.

**" தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும் "**

என்பது வள்ளுவர் வாக்கு.

சந்தேகத்திற்கு உரியவனிடத்தில் சந்தேகம் கொள்ளாமல் நம்பிக்கை வைப்பதும், சந்தேகப்பட வேண்டாதவனிடத்தில் சந்தேகம் கொள்ளுதலும் ஆகிய இந்த முரண்பட்ட செயல்கள் எப்போதும் நீங்காத துன்பத்தையே தரும் என்பது திருக்குறள் கூறும் கருத்து.

எனவே, நல்ல நட்பினர்களை வெறுத்து ஒதுக்க வேண்டாம். பகைவர்களோடு நட்புக் கொள்ளவும் வேண்டாம்.

" ஒற்று இகழ்தல் "— அரசன் ஒருவன், அன்னிய நாட்டிலிருந்து தனது நாட்டுக்குள் வந்து தன்னையும், தனது நாட்டையும் உளவு பார்ப்பவனை எளிதில் கேவலமாக நினைத்து விட முடியாது.

ஒற்றன் ஒருவன் சந்தேகத்திற்குச் சிறிதும் இடம் இல்லாதபடி ஒன்றுகவே கூடி இருந்து நமது நடவடிக்கைகளை யெல்லாம் கவனித்துப் பகைவனுக்குச் சொல்லுகின்றுன் என்பதை அரசன் ஒருவன் அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொள்ளுவது அரசனுக்கு நல்லது; அவனுடைய ஆட்சிக்கு நல்லது. அவனுடைய நாட்டுக்கு வருகின்ற பேராபத்தைத் தடுத்துக் காப்பாற்றலாம்.

"பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்" —நம் அருகில் வாழ்கின்ற எல்லாரையும் நம்பாமல் சந்தேகப்படுதல் நல்வாழ்வுக்கு, அமைதியான வாழ்வுக்கு உகந்தது ஆகாது.

ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வது சமூக அமைப்பில் முக்கியமானதாகிறது. எவருடைய உதவியுமில்லாமல் தனித்து வாழும் சமூக அமைப்பு இப்பொழுது இல்லை. அங்ஙனம் கூடி வாழும் சமூக வாழ்வில் ஒருவரை ஒருவர் நம்பித்தான் வாழுதல் வேண்டும். இருந்தாலும், எல்லாருடைய பண்பு நலன்களும் ஒன்று போல இருப்பதில்லை. சந்தேகப்படக்கூடியவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள், நமது அறிவு நுட்பத்தால், அப்படிப்பட்டவர்கள் யார் என்பதைக் கண்டறிந்து கொள்ளவேண்டும். அத்தகையவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் கேடுதரும்.

ஆனால், எல்லாரையும் ஐயப்பட வேண்டியதில்லை. பலரால் நமக்குப் பல நன்மைகள் வந்து அமைகின்றன. மற்றவர்களிடமிருந்து வருகின்ற நன்மைகளையும், உதவிகளையும் எதிர்பார்த்து வாழ்கின்றோம். அப்படி இருக்கையில் எல்லாரையும் சந்தேகப்படக்கூடாது. சந்தேகப்பட்டால் அடையக் கூடிய நன்மைகள் கிடைக்காமல் போய் விடும்.

''தக்கார் நெடுமொழி கோறல்''— சான்றோர்களுடைய அறிவுரைகளைப் புறக்கணிப்பது கேடுதரும்.

சிந்திக்கத் தெரிந்த காலம் முதலாக அறவுரை சொல்லித் திருத்தும் வழக்கமும் ஏற்பட்டது. உணர்ச்சி, அறிவு என்னும் இரண்டும் ஒவ்வொருவருக்கும் உண்டு. உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பயன் இல்லை. உணர்வுக்கு முதலிடம் கொடுப்பது ஆபத்து. எல்லாவற்றையும் கடந்த நிலையில், விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட நிலையில், லௌகிக வாழ்வுக்கு உட்படாத நிலையில் சான்றோர்கள் உணர்ச்சி வசப்படுவார்கள். அந்த நிலை வேறு. அதனால் ஏற்படுவது நன்மையே. சான்றோர்கள் உணர்ச்சி வசப்படுவதால் உலகம் நன்மையே அடைந்திருக்கிறது.

அறிவுக் குறைபாடு உடையவர்கள், சான்றோர்கள் அல்லாதவர்கள் உணர்ச்சி வசப்படுவது கேட்டினை உண்டாக்கும். இதனால் அவர்களுக்கும் தீமை ஏற்படுகிறது. மற்றவர்களுக்கும் துன்பம் உண்டாகிறது.

உலகம் கீழான நிலையில் இருக்கிறதே! உலக மக்களில் பலர் கீழ்த்தரமான முறையில் நடக்கிறார்களே என்று எண்ணி உணர்ச்சி வசப்பட்டவர்கள் புத்தர், ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் போன்ற ஞானியர் ஆவார்கள். இப் பெருமக்கள் உணர்ச்சி வசப்பட்டதன் விளைவாக, அவர்களின் அறவுரைகளை உலகம் பயனாகப்பெற்றது. அவர்களுடைய அறிவுரைகளின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் பெற்றார்கள். திருந்திய வாழ்க்கையை அடைந்தனர்.

சான்றோர்களின் அறவுரைகள் ஆப்த வாக்கியங்கள். அந்த வாக்கியங்களுக்குத் தனித்த, பெருமைமிக்க ஆற்றல் உண்டு. அவற்றிற்கு விளைவுகளும் உண்டு. அடிக்கடி பயன்படுத்தப்படாத இயந்திரத்துக்கு ஆற்றல் இருந்து கொண்டே இருக்கும். அதே போன்று, தம் சொற்களை அடிக்கடி பயன்படுத்தாத, சிந்தித்துப் பேசுகின்ற ஞானியரின் சொற்களுக்கு ஆற்றல் உண்டு.

நின்று நிலைத்துப் பயன் தரும் ஞானியரின் அறவுரைகளைக் கேளாத செவி செவிட்டுச் செவி. சிந்தித்துப் பார்க்காத உணர்வு பயன் அற்ற உணர்வு. ஏற்க மறுக்கும் மூளை மனித மூளை ஆகாது.

அறம் என்னும் தர்மம் ஒன்றுதான் உலகத்தை ஆளும் சட்டமாக அன்றிலிருந்து இன்றுவரை இருந்து வந்திருக்கிறது. என்றும் இருக்கக் கூடியதும் அதுதான். தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட தவ ஞான சீலர்களின் வாரி வழங்கும் அறிவுரைகள் மனத்தைத் தூய்மைப்படுத்தி வாழ்க்கையை நல்வழிப்படுத்தக் கூடியவை.

தக்கவர்களாகிய சான்றோர்கள் கூறுகின்ற அறவுரைகளை உதாசீனம் செய்கின்றவர்கள் வாழ்க்கையில் கேடு அடைவார்கள்.

மாரீசன் சொன்ன அறவுரைகளை இராவணன் கேட்டானா? விபீஷணன் சொன்ன அறவுரைகளையாவது இராவணன் கேட்டானா? இல்லை. அதனால், இராவணன் தன்னுடைய வாழ்வில் யாரும் அடையாத துன்பத்தை அடைந்தான். விதுரன்கூறிய அறவுரைகளைத் துரியோதனன் கேட்டிருந்தால் எல்லாருக்குமே நன்மை ஏற்பட்டிருக்கும். மேலும் பீஷ்மர், கண்ணன் முதலிய பெரியோர்களுடைய அறவுரைகளையும் துரியோதனன் கேட்கவில்லை. அதனால் வாழ்க்கையில் கெட்டழிந்தான்.

இவ்வாறு பலருடைய வாழ்க்கை நமக்கு நல்ல பாடம் புகட்டியுள்ளது. அறிவிலும் பண்பிலும் சிறந்தவர்களே பெரியோர்கள். அவர்கள் பிறர் நலன் கருதியே வாழ்வார்கள். அவர்களுடைய சொல்லும் பிறருக்கு நலனையே தரும். அப்படி இருக்கும்போது பெரியோர்களின் அறவுரைகளைக் கேட்டுப் பயன் பெறாமல் இருக்கலாமா?

ஜயதேவர் சரிதம்

(277ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரவுஞ்ச இராஜன் ஜயதேவரைத் தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டான். கைகளும் கால்களும் ஊனமுற்றுக் கிடந்த ஜயதேவரைப் பல்லக்கில் ஏற்றி நாட்டுக்கு அழைத்துச் சென்றான். ஆங்கு அவரைத் தன் அரண்மனையில் வைத்துத் தக்க சிகிச்சை செய்தான். ஜயதேவரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டான். அரச வாழ்வைத் துறந்து பேரின்ப வாழ்வைப் பெற விரும்பினான். அதற்குரிய மார்க்கத்தைக் காட்டியருளும்படி ஜயதேவரைப் பணிந்தான். ஜயதேவர் கருணை உள்ளத்துடன் அரசனை நோக்கிப் பகர்ந்ததாவது: ''குடிகளுக்கு அரசனே, இல்லறத்தைத் துறப்பதால் என்ன இலாபம்? யான்,எனது என்னும் அகங்காரம், மமகாரம் அழிய வேண்டும். அகங்காரம் அழியாவிடில் ஞானம் உண்டாகாது. சாதுக்கள் சேவையினால் புத்தியும் பக்தியும் வளரும். சாதுக்களுக்குச் சேவை செய்வதால் உன் உள்ளம் பக்குவமடையும். உன் உள்ளம் பக்குவமடையும்பொழுது மஹாவாக்கியத்தைச் சாதுக்கள் போதிப்பார்கள். ஆதலால் சாதுக்கள் சேவை செய்துகொண்டு அறத்தினைக் காக்க ஆட்சி செய்து ஆணவ அகங்காரங்களை அகற்றி உத்தமனாக இல்லறத்தை நடாத்திவா.'' இங்ஙனம் அரசனுக்கு உபதேசம் செய்துவிட்டு மௌன சமாதியில் ஜயதேவர் மூழ்கினார்.

ஜயதேவரும் இல்லறத்தில்தான் இருக்கிறார் என்பதை அரசன் அறிந்தான். ஜயதேவருடைய மனைவி பில்வகாமில் இருப்பதையும் அறிந்தான். பில்வகாமில் உள்ள பத்மாவதியைப் பல்லக்கைக் கொண்டு போய்ப் பக்தியுடன் அழைத்து வரும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிட்டான். அரசனுடைய ஆட்கள் பத்மாவதியை அழைத்து வருவதற்குப் பல்லக்குடன் பில்வகாமுக்குப் புறப்பட்டார்கள்.

அரசன் ஜயதேவருக்குச் சேவை செய்வதில் சிரத்தையுடன் ஈடுபட்டான். ஒருநாள் அரசன் ஜயதேவரை நோக்கி வினவியதாவது: ''தேவரீர்! இத்தகைய துன்பத்திற்கு ஆளாகக் காரணம் என்ன? ஞானிகளுடைய சித்தம் கலங்கினால் தீவினை மூண்டுவிடும் என்று பெரியோர்கள் பகர்ந்திருக்கிறார்கள். தங்களுக்கு இவ்விதத் துன்பம் விளைவித்தவர்கள் ஏன் எரிந்து சாம்பலாகப்போகவில்லை?''

''நித்தியானந்தத்தை நாடும் வேந்தனே, மூவர், தேவர், முனிவர் மற்று யாவரையும் பிராரப்தம் விட்டுவிடாது. அப்படியிருக்க நான் மட்டும் பிராரப்தத்தை வெல்ல முடியுமோ? பிராரப்தத்தை வெல்ல முடியாது என்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் கேள்'' என்று ஜயதேவர் சொல்லத் தொடங்கினார். ஜீவன் முக்தி அடைந்திருந்த ஒரு மஹான் இருந்தார். அவருக்கு அருள் நாட்டமுடைய ஒரு சிஷ்யன் இருந்தான். அவன் குருவுக்குப் பக்தியுடன் பணிவிடை புரிந்து வந்தான். குரு மெய்ஞ்ஞான நிஷ்டையிலிருந்து எழுந்து உலக ஞாபகம் வரும்பொழுது எப்பொருள்வேண்டுமென்று நினைப்பாரோ அப்பொருளை அவர் கேட்பதற்கு முன்னமேயே அவர் முன் வைத்து அவரை அவன் வழிபடுவான். ஆகையால் அம்முனிவர் ஒருநாளாவது தனக்கு இன்ன பொருள் வேண்டுமென்று கேட்டதில்லை. சிஷ்யனும் குருவுக்கு எது வேண்டும் என்று ஒருநாளும் கேட்டதில்லை. இப்படிச் சிஷ்யன் குருவுக்குச் சேவைசெய்து வந்தான். ஒருநாள் குரு சீடனைச் சோதிக்க எண்ணி ஒன்றையும் நினைக்காமல் கண்களைத் திறந்து மௌனமாயிருந்தார். அப்போது குருவுக்கு என்ன பொருளைக் கொடுப்பது என்று சிஷ்யனுக்குத் தெரியவில்லை. அவன் தான் ஏதோ குற்றம் செய்ததனால் குருவுக்குப் படைப்பதில் தவறிவிட்டதாக எண்ணி இனி வாழ்க்கையை வைத்திருப்பது பொருந்தாது என்று குருவின் பாதத்தில் வந்தனம் செய்து தலையைக் கொய்துகொள்ள முனைந்தான். அப்போது அம்முனிவர் ''நன் மாணாக்கனே, நான் கேட்கும் முன்னமேயே நான் நினைத்த பொருளைக் கொடுத்துவந்

தாய். உன்னுடைய விவேகத்தையும் பணி விடையையும் எண்ணி வியப்படைந்து நான் வேறொன்றையும் எண்ணாமல் கண்களை விழித்திருந்தேன். ஆகையினால் உன்னுடைய உள்ளத்தில் எனக்குத் தருவதற்கு ஒன்றும் புலப்படாமல் போய்விட்டது. உன்னைப் போல் பணிவிடை செய்பவர்கள் இவ்வுல கில் யாரும் இருக்கமாட்டார்கள். நீ எனக்கு உகந்த மாணுக்கனுவாய். உன்னை நான் ஆட் கொண்டேன். உனக்கு உபதேசிக்கின்றேன்'' என்று கூறிச் சிஷ்யனைக் குறித்துத் தியானம் செய்தார். அவர் ஞான திருஷ்டியில் சிஷ்ய னுக்கு அற்ப ஆயுள் இருப்பதை அறிந்தார். மும்மூர்த்திகளையும் முனிவர் பிரார்த்தித் தார். மும்மூர்த்திகளும் சிஷ்யனுடைய ஆயுளை நீடிக்கத் தங்களுக்கு இயலாதுஎன்று கூறிவிட்டனர். முனிவர் நேரே யமபுரிக்குப் புறப்பட்டார். யமலோகம் அடைவதற் குள்ளாக மாணுக்கனுக்கு ஆயுள் முடிந்து மரணமடைந்தான். முனிவர் கோபமடைந்து யமனுலகை எரிக்கத் தொடங்கினுர். அப் பொழுது யமன் பயந்து முனிவரிடம் வந்து ''தவ சிரேஷ்டரே, உங்களுடைய மாணுக் கனை நீங்களே மாய்த்துவிட்டீர்கள். உங்கள் மாணுக்கனை நீங்களே நீண்டகாலம் வாழும் படி ஆசீர்வதித்திருக்கலாம் அல்லது மும் மூர்த்திகள் ஆசீர்வதித்திருக்கலாம். உங்கள் மாணுக்கன் உங்களுக்குப் பணிவிடை செய்த தனுல் மும்மூர்த்திகளுடைய தரிசனம் பெற் ருன். என்னைத் தரிசிக்காமல் மரணமடைந் தான். அவனுடைய பிராரப்தம் உங்களையும் மும்மூர்த்திகளையும் ஆசீர்வாதம் செய்யா மல் தடைப்படுத்தி விட்டது. இதுதான் உண்மை. இதற்காக என்மேல் தாங்கள் கோபம் கொள்ளலாமோ? உங்கள் மாணுக் கனை இப்போதே நீங்கள் எழுப்பித் தீர்க்கா யுளுடன் வாழ ஆசீர்வதியுங்கள்'' என்ருன் யமன். முனிவரும் கோபம் தீர்ந்து ஓங்கா ரத்தை உச்சரித்துச் சிஷ்யனை எழுப்பி ஆசீர் வாதம் செய்தார். இந்நிகழ்ச்சியைக் கூறிப் பிராரப்தத்தினுடைய போக்கை ஜயதேவர் அரசனுக்கு விளக்கினுர். ஆனுல் தெய்வீக அருளும் பெரியோர்களின் ஆசீர்வாதமும் திடஞானமும் உள்ளவர்களுக்கு மலைபோல் வரும் வினை பனிபோல் நீங்கும். ஆகையால் பிராரப்தத்தின் பிரகாரம் வருவது வரட்டும் என்று அதைப் பொருட்படுத்தாது சாதுக் கள் சேவையிலும் தெய்வப் பணிவிடையி லும் ஈடுபடவேண்டும்.

அரசன் சாதுக்கள் சேவையைச் சிறப் பாகச் செய்து வந்தான். அரசன் அனுப்பிய ஆட்கள் பல்லக்குடன் பில்வகாமுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். பில்வகாமில் ஜய தேவருடைய பத்தினி பத்மாவதி இருக்கும் வீட்டை விசாரித்துச் சென்றடைந்தார்கள். பத்மாவதியைக் கண்டு வணங்கினுர்கள். பத்மாவதியின் கணவன் ஜயதேவர் கிரவுஞ்ச இராஜனிடம் நலமாக இருக்கும் விஷயத் தைக் கூறினுர்கள். பத்மாவதியை அழைத் துக்கொண்டுவரும்படியான அரசனது ஆணை யையும் தெரிவித்தார்கள். இச்செய்தியைக் கேட்ட பத்மாவதி உடலை விட்டு அகன்ற உயிர் உடலின் உள்ளே புகுந்தது போன்று மகிழ்ச்சியடைந்தாள். ஸ்ரீராமனைப் பிரிந்து அசோகவனத்தில் இருந்த சீதாப் பிராட்டி உயிர் விடும் தருணத்தில் அவள் முன் தோன்றி ஸ்ரீ ராமனின் நலத்தைக் கூறிச் சீதையின் உயிரைக் காப்பாற்றினுன் அனுமன். அனுமனுக்கு நிகராகத் தன் கணவனின் நலம் கூறித் தன் உயிரைக்காத்த கிரவுஞ்ச இராஜனுடைய ஆட்களைப் பத்மா வதி மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரணை செய்தாள். அவர்கள் பல்லக்கில் ஏறும்படி கூறியபொழுதுகணவனைப்பிரிந்துஇவ்வளவு நாள் உயிர் வைத்திருந்த பாதகி பல்லக்கில் ஏறுவது தகாது என்று கூறித் தாய் தந்தை யரிடம் விடைபெற்றுக்கொண்டு கணவனைப் பார்க்கக் கடுகி நடக்கத் தொடங்கினுள். ஆனுல் காவலர்கள் விரைவில் போய்ச்சேர வேண்டும் என்று கூறிப் பத்மாவதியை மிக வும் வேண்டிப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு கிரவுஞ்ச இராஜனுடைய பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். அரசன் அரண்மனை யில் கணவன் ஜயதேவர் வீற்றிருப்பதைப் பார்த்து அவரை வலம் வந்து கைகூப்பி அவர் முன் நின்று அவரைத் தோத்திரம் செய்து விழ்ந்து வணங்கினுள். அப்பொழுது ஜயதேவருடைய கை, கால்கள் வெட்டுண்டி

ருப்பதைப் பத்மாவதி கண்டாள். உடல் நடுக்கமுற்ருள். கதறிப் பதறி அழுதாள். மூர்ச்சையடைந்து கீழே விழுந்தாள். மூர்ச்சை தெளிந்து கணவனுக்கு அந்நிலை ஏற்படக் காரணம் என்ன என்று ஜயதேவரைக் கேட்டாள். ஜயதேவர் பத்மாவதியை ஆறுதல் படுத்தினுர். ''யாரும் எனக்குத் தீங்கு செய்து விடவில்லை. யாரையும் நோவதில் பயனில்லை. முன் செய்த தீவினைப் பயனுக எனக்கு வந்த இந்நிலையைக் குறித்து யாரை நோவது? நோயும், துன்பமும், பிரிவும் பிராரப்தத்தால் நிகழ்கின்றன என்று அம்மையே, நீ தெளிவடைய வேண்டும். ஹரிச்சந்திரன் அடைந்த துன்பத்தை நீ அறியாயோ? வினைப்பயனை ஏற்றே ஆகவேண்டும். நீ எனக்கு நேர்ந்ததைக் குறித்துக் கவலைப் படவேண்டாம்.'' ஜயதேவரின் அருள் மொழியைக் கேட்டு ஆறுதல் அடைந்த பத்மாவதி கணவனுக்குச் சேவை செய்வதில் முனைந்தாள். அரசனும் ஜயதேவரையும் பத்மாவதியையும் தெய்வங்களாக எண்ணி வலம் வந்து பணிந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தலே தான் செய்யும் தவம் என்று தீர்மானம் செய்தான். துறவிகளையும் இறைவனுடைய அடியார்களையும் அதிதிகளையும் தக்க முறையில் உபசரித்து அவர்களுக்குச் சேவை செய்து வந்தான். அரசனுடைய பட்டணம் முழுவதும் பக்தர்கள் பகவானைக் குறித்துத் துதிசெய்த வண்ணம் இருந்தார்கள். அரசன் இருந்த பட்டணம் விஷ்ணு வீற்றிருக்கும் வைகுண்டம் போன்றும், சிவனுர் வீற்றிருக்கும் கயிலை போன்றும், பிரம்மன் வீற்றிருக்கும் சத்தியலோகம் போன்றும் விளங்கலாயிற்று. ஹரிச்சந்திரன், நளன், இரகுராமன், தர்மன் முதலாயினோர் செய்த ஆட்சிபோன்று அரசன் செங்கோலாட்சி செய்து வந்தான்.

கிரவுஞ்ச இராஜன் சாதுக்களுக்குச் செய்துவந்த உபசாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்த திரவியத்தையும்பற்றி ஜயதேவரைக் கை, கால்களைத் துண்டித்துக் கிணற்றில் தள்ளிய கள்வர்கள் கேள்விப்பட்டார்கள். சாதுவேடம் பூண்டு கிரவுஞ்ச இராஜனின் அரண்மனைக்குப் போனுல் ஏராளமான செல்வங்களைப்பெற்று வந்து சுகமாய் வாழ்ந்திருக்கலாம் என்றுஅக்கள்வர்கள் நினைத்தனர். சாதுக்கள் வேடம்பூண்டு அவர்கள் அரசனின் அரண்மனைக்கு வந்தார்கள். அரசனுடைய காவலர்கள் அவர்களுக்கு வணக்கம் செய்து அரண்மனைக்குள் அழைத்துச் சென்ருர்கள். அரசனுடைய இருப்பிடத்தையும் ஜயதேவர் இருக்கும் மேடையையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினர்கள். முதலில் ஜயதேவருடைய ஆசியைப் பெற்ருல் பொருள் மிகக் கிடைக்கும் என்று காவலர்கள் கூறினுர்கள். அதைக் கேட்ட கள்ளச் சாதுக்கள் ஜயதேவரின் இருப்பிடமாகிய மேடைக்குச் சென்ருர்கள். அங்கிருந்த காவலர்கள் அன்போடு அவர்களை அழைத்து ஜயதேவர் முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினர். சாதுக்களைக் கண்ட ஜயதேவர் ஊனமான கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினுர். ஜயதேவரைப் பார்த்ததும் அவர்களுடைய உள்ளத்தில் பீதி வந்து விட்டது. அவர்கள் யாருடைய கை, கால்களைத் துண்டித்தார்களோ அவரே அங்கு வீற்றிருப்பதைக் கண்டு மேலும் அங்கிருப்பது உயிருக்கு ஆபத்து என்று எண்ணி அரண்மனையை விட்டு ஓடத்தொடங்கினுர்கள். ''சாதுக்களே, உங்களுக்கு வணக்கம். பிரயாசைப் பட்டு இங்கு வந்து எனக்குத் தரிசனம் தந்தும் சில நாள் தங்கிப்போகாமல் போகின்றீர்களே! நீங்கள் அப்படிப் போகக் கூடாது. தயவு செய்து சற்று நில்லுங்கள். உங்களை வணங்கி அழைக்கின்றேன்'' என்று அவர்களை ஜயதேவர் அழைத்தார். அவர்கள்நில்லாது ஓடினுர்கள். ஜயதேவர் அங்கிருந்த காவலாளர்களைப் பார்த்து, ''நீங்கள் அவர்களைப் பின்தொடர்ந்துசென்று அன்போடு அழைத்து வாருங்கள்'' என்ருர். காவலாளர்களும் அவர்களைத் துரத்திச் சென்று எட்டிப் பிடித்துவிட்டார்கள். அவர்களிடம் அன்புமொழிகள் பேசி அரண்மனைக்கு அழைத்து வந்து ஜயதேவர் முன் நிறுத்தினுர்கள். அவர்களை நன்கு உபசரிக்கும்படி ஜயதேவர் கூறினுர். ஆனுல் அக்கள்வர்கள் மனத்தில் அச்சம் உடையவர்

களாகவே இருந்தார்கள். ஜயதேவர் அரசனை வரவழைத்துக் கூறியதாவது: ''அரசனே, இதோ இங்கு இருக்கும் இவர்கள் புண்ணியவான்கள். இவர்களுக்கு நல்ல ஆடையும் உணவும் தர ஏற்பாடு செய்யவும். அவர்களுக்கு நல்ல இருக்கை தந்து அவர்களுக்குவேண்டிய உபசாரங்களைச் செய்வதற்கு ஆட்களை நியமிக்கவும்.'' ஜயதேவர் கூறிய மொழியைக்கேட்ட அரசன் அரண்மனையில் எல்லா வசதிகளுடன் அவர்கள் தங்குவதற்கும், உணவுக்கும் தக்க ஏற்பாடு செய்தான். கள்வர்களோ இத்தகைய உபசாரங்களெல்லாம் தங்களை வதைப்பதற்கே செய்யப்படுகின்றன என்று எண்ணினார்கள். அவர்கள் செய்த துரோகத்துக்குப் பலன் கிட்டிவிட்டதாக எண்ணினார்கள். ''அவர்களுடைய முகத்தில் சந்தோஷ அறிகுறிகள் இல்லாததை அரசன் பார்த்தான். அவர்களுக்கு எவ்வளவோ உபசாரம் செய்தும் திருப்தி அடையாதவர்களாக விசனத்துடன் இருக்கிறார்கள்'' என்று அரசன் ஜயதேவரிடம் கூறினான். ''அவர்களுக்கு அரண்மனையில் இருக்க விருப்பம் இல்லை போல் தெரிகிறது. அவர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து அனுப்பிவிடு'' என்றார் ஜயதேவர். அதற்கு அரசன் பகர்ந்ததாவது: ''சுவாமி! அவர்கள் ஆசை அற்றவர்கள். உடல்பற்றையும் ஒழித்த சீலர்கள். அவர்களுக்குப் பணத்தின்மேல் ஆசை இருக்குமா? பணத்தின்மேல் ஆசை இருக்குமாகில் அவர்கள் ஞானிகளாய் இருக்கமுடியுமா?'' ''அரசனே! அகஸ்தியரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர். அவர் விரும்பினால் மலையை எல்லாம் பொன்னாக்கும் சக்தி உடையவர். வாதாபியை ஜீரணம் பண்ணியவர். தாருகாவனத்து ரிஷிகளை வென்றவர். அத்தகைய அகஸ்திய முனிவர் தம் மனைவியின் வேண்டுகோளுக்காக அரசனிடம் சென்று பொருள் சம்பாதித்தார். ஜனகர் அளவற்ற திரவியங்களையும், பசுக்களையும் ஞானியாய் இருப்பவர்க்குக் கொடுப்பதாகப் பறைசாற்றிய பொழுது அவற்றைப் பெறுவதற்குப் பூரண ஞானியாகவிருந்த யாக்ஞவல்கியர் முன் வரவில்லையா? இது ஒரு புறம் இருக்க, தங்களிடம் உள்ள பொருள்களைக் கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லாது வழங்கிய ததீசிமகரிஷி, கர்ணன், ஹரிச்சந்திரன் முதலான உத்தமர்களையும் அறிவாய். ஆதலால் இல்லை என்று கேட்பவர்களுக்கு, இல்லை என்று சொல்லாமல் கொடுத்து அனுப்புவதே பொருள் படைத்துள்ள விவேகிகளுக்கு அழகாகும். பிறர் குற்றத்தைக் காணாதவர்களே பெரியவர்களாவார்கள். ஆதலால் என் வாக்கை மறுக்காமல் இச்சாதுக்களுக்கு அளவற்ற செல்வம் தந்து அவர்களை அனுப்பி வைப்பாயாக'' என்று ஜயதேவர் அரசனிடம் பகர்ந்தார். அரசன் உடனே வேண்டிய திரவியங்களை யானை, குதிரை, ஒட்டகங்களின் மீது ஏற்றிச் சாதுக்களைப் பல்லக்கில் அமரச் செய்து அவர்கள் விரும்பிய இடத்துக்குப் போவதற்கு அனுமதி தந்தான். பொருள்களை அவர்கள் இருப்பிடத்துக்குக்கொண்டு போய்ச்சேர்த்து வருவதற்கு யானை, குதிரை, ஒட்டகங்களுடன் ஆட்களையும் அனுப்பினான். சாது வேடம் போட்டிருந்த கள்வர்கள் திரவியத்தோடும் ஆட்களோடும் காட்டுக்குச் சென்றார்கள். காட்டில் ஓர் இடத்தைக் காட்டி அவ்விடத்தில் திரவியங்களை வைத்துவிட்டு யானை முதலானவைகளை ஓட்டிக்கொண்டு நகரத்துக்கு ஓடிவிடுங்கள் என்று அக்கள்வர்கள் அரசனுடைய பணியாளர்களை விரட்டினார்கள். பணியாளர்கள் அவர்களிடம் பணிவோடு கேட்டதாவது: ''உத்தமர்களே, நீங்கள் இதுநாள் பரியந்தம் மௌனமாய் இருந்ததன் காரணம் யாது? உங்களிடம் ஜயதேவர் மரியாதையோடு நடந்துகொண்டது மட்டுமன்றி உங்களுக்கு ஏராளமான திரவியத்தையும் கொடுத்தனுப்புமாறுக் கூறியுள்ளார். அவருக்கும் உங்களுக்கும் என்ன உறவு? அவர் முன்பு உங்களை அறிந்திருக்கின்றாரா?'' இதற்குக் கள்வர்கள் அளித்த பதிலாவது: ''அரசனுடைய பணியாளர்களே, உங்கள் அரண்மனையிலுள்ள ஜயதேவன் வஞ்சகன். அவன் கடின நெஞ்சம் படைத்தவன். அவன் பாசாங்குக்காரன். முன்பொரு சமயம் ஓர் அரசனிடம் தன்னை ஒரு மஹான் என்று

சொல்லிக்கொண்டு வெகுநாள் மௌனமாய் இருந்தான். தக்க சமயம் பார்த்து அரண்மனையிலிருந்த சில இரத்தினங்களைத் திருடிக் கொண்டு ஓட முயன்றான். அவ்வரசன் அரண்மனையில் நாங்கள்சேவகர்களாக இருந்தோம். ஜயதேவனைக் கட்டிப் பிடித்துஅவனை இரண்டாக வெட்டிக் கோட்டை வாயிலின் எதிரில் வெட்டிய துண்டுகளைக்கட்டிவையுங்கள் என்று எங்களுக்கு அரசன் உத்தரவு போட்டான். நாங்கள் ஜயதேவன்மீது இரக்கப்பட்டு அவனை இக்காட்டிற்குக்கொண்டு வந்து கைகால்களை மட்டும் வெட்டி ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டோம். அதன் பிறகு அவ்வரசனிடம் போக அஞ்சிச் சில நாட்கள் இக்காட்டில் தவத்தில் ஈடுபட்டோம். இங்கிருந்து தேசசஞ்சாரம் புறப்பட்டோம். பல நாடுகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு உங்கள் நாட்டிற்கும் வந்திருந்தோம். கிணற்றில் தள்ளப்பட்ட ஜயதேவன் உங்கள் அரண்மனைக்கு எப்படி வந்தான் என்று ஆச்சரியப்பட்டோம். எங்களைப் பார்த்தவுடன் ஜயதேவன் பயந்து விட்டான். தன்னுடைய சூது எங்கள் மூலம் வெளியாகிவிடும் என்று அஞ்சி எங்களைப் பலவந்தமாக அழைத்துப் பல உபசாரங்கள் செய்தான். மேலும் அவனுடைய சூதை நாங்கள் வெளியிடாமல் இருக்கும் பொருட்டு எங்களுக்கு ஏராளமான திரவியங்களைக்கொடுத்தனுப்பி இருக்கிறான்.'' இங்ஙனம் அவர்கள் ஜயதேவரைக் குறித்துக் கொடிய வார்த்தைகளைப் பகர்ந்தார்கள். இவ் அநியாயத்தைக் கேட்கப் பூமிதேவிக்கே பொறுக்க முடியவில்லை. பூமி இரண்டாகப் பிளவுபட்டது. அக்கள்வர்கள் பூமியில் அழுந்திப்போனார்கள். பூமி வெடித்துப் பூமிக்குள் கள்வர்கள் அழுந்திப் போனதை அரசனுடைய பணியாளர்கள் நேரில் பார்த்தார்கள். அவர்கள் நடுக்கம் அடைந்தார்கள். எல்லாவற்றையும் அங்கேயே விட்டுவிட்டு மூலைக்கு ஒருவராக நகரத்தை நோக்கி ஓடினார்கள். நிகழ்ந்ததை அரசனுக்கு எடுத்துச் சொல்ல அஞ்சிக் கண்ணீர் சொரிந்தவர்களாக அரசன் முன்னே ஊமையர்களாக நின்றார்கள். அரசன் அவர்களுடைய நிலையைப் பார்த்துக் கோபமடைந்தான். ''அடே பணியாளர்களே, நீங்கள் அப்பெரியவர்களுக்கு ஏதோ குற்றம் செய்துவிட்டீர்கள் போல் தெரிகிறது. உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள்'' என்று அரசன் அவர்களைக் கோபித்துக்கொண்டான். அரசனுடைய பணியாளர்கள் அக்கள்ளச் சாதுக்கள் தங்களைக் காட்டுக்கு அழைத்துப்போனதையும் ஆங்கு அவர்கள் ஜயதேவரைப்பற்றித் தூஷணையாகப் பேசியதையும் அத்தூஷணையைப் பூமிதேவியே பொறுக்கமாட்டாமல் பூமி இரண்டாகப் பிளவுபட்டதையும் அப்பூமிக்குள் அவர்கள் அமிழ்ந்துபோனதையும் விரிவாக எடுத்துச் சொன்னார்கள். அப்பொழுதுதான் அரசன் அவர்கள் கள்ளச் சாதுக்கள் என்பதையும் துன்மார்க்கர்கள் என்பதையும் அறிந்து கொண்டான். அத்தகைய வஞ்சகர்களிடத்தும் ஜயதேவர் காட்டிய கருணையையும், நடந்துகொண்ட தன்மையையும் எண்ணியெண்ணிஅரசன் வியப்படைந்தான்.

(தொடரும்)

குறிப்புகள்

உள்ளம் கவர்ந்த குகை

ஆண்டுதோறும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாபநாசத்தில் மூன்றுநாட்கள் அந்தர்யோகம் நிகழ்ந்து வருகிறது. இவ்வாண்டு ஜூலை 16, 17, 18 தேதிகளில் ஆங்கு மூன்று நாட்கள் அந்தர்யோகம் நடந்தது. அந்தர்யோகத்தில் நாம ஜபம், பஜனை, தியானம், மௌனம், பாரமார்த்திகப் பேச்சு, ஸத் ஸம்பாஷணை முதலியன மாறி மாறி நடைமுறையில் பின்பற்றப்படுகின்றன. மற்ற எல்லா இடங்களிலும் நடப்பனபோன்று பாபநாச அந்தர்யோகத்திலும் இம் முறைகள் பின்பற்றப்படுகின்றன. பாபநாச அந்தர்யோகத்தில் பின்பற்றப்படுகின்ற மௌனத்தில் தனிச் சிறப்பு உண்டு. வாய் பேசாதிருந்து பழகுதல் அந்தர்யோகத்தில் பின்பற்றப்படும் மௌனமாகும். பாபநாச அந்தர்யோகத்தில் மௌன

நேரத்தில் வாய் பேசாது இருப்பதோடு மட்டுமன்றி அன்பர்களும் தாய்மார்களும் சரீரத்தைக்கொண்டு சிறந்த தெய்வப்பணி ஆற்றுகின்றார்கள். பாபநாசத்தில் சிவாலயம் ஒன்று உளது. அவ்வாலயத்துக்குமுன் இரண்டு படித்துறைகள் இருக்கின்றன. அப்படித்துறைகளை வானரங்களும், நரர்களும் அழுக்குப்படுத்தி ஆபாசமாகச் செய்துவிடுவார்கள். ஒவ்வோர் ஆண்டும் பாபநாச அந்தர்யோகத்தில் முதல் நாள் ஒரு படித்துறையையும், இரண்டாவது நாள் மற்றொரு படித்துறையையும் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்களும் தாய்மார்களும் சுத்தம்செய்யும் பணியை மன மகிழ்ச்சியோடும் ஆர்வத்தோடும் மௌனநேரத்தில் செய்வார்கள். மூன்றாவதுநாள் மௌன நேரத்தில் பாபநாசம் ஆலயத்தின் உட்புறம் முழுவதையும் பெருக்கித் தாமிரபரணியிலிருந்து நீர்கொண்டுவந்து தரையை அலம்பிக் கோயிலின் உட்புறத்தையும் தூய்மைப் படுத்துவார்கள். இவ்வாண்டும் இந்த ஆத்ம சாதனைசிறப்பாக நடந்தது. மௌன நேரத்தில் வாய்பேசாதிருப்பதோடு இவ்வுழவாரப் பணியைச் செய்வதற்கு அன்பர்களும் தாய்மார்களும் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். கர்மத்தில் அகர்மம் என்னும்கோட்பாட்டைச் செயல் மூலம் அன்பர்களும் தாய்மார்களும் அப்பொழுது விளக்கிக்காட்டுகின்றனர். புறத்தோற்றத்தில் அவர்கள் செயலே வடிவெடுத்தவர்களாகத் தென்பட்டாலும் அகத்தில் 'செயல் செய்தோம்' என்னும் அகங்காரம் அவர்களுக்கு இருப்பதில்லை. அவர்களுடைய அகம் அகர்மத்தில் ஈடுபட்டிருக்கிறது. கர்மயோகம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் அனுபவ மூலமாக அவர்களுக்கு அப்போது கிடைக்கிறது. படிக்கட்டுக்களில் உள்ளமலத்தையும் குப்பை கூளங்களையும் மனதில் எவ்வித அருவருப்பும் கொள்ளாது சுத்தம் செய்வதில் அவர்கள் ஈடுபடுகின்ற செயல் கர்மயோகத்தின் சிறப்பை விளக்குகிறது. விடுகளில் வேலையாள் வைத்துத் தங்களுக்குரிய வேலைகளைச் செய்துகொள்பவர்கள் ஆங்குச் சிவனுக்கு வேலையாளாக விளங்கும் காட்சி தொண்டின் பெருமை எத்தகையது என்பதை விளக்குகிறது. உலகத்துக்கு நாங்கள் அடிமைகளல்லர்; இறைவனுக்கு நாங்கள் அடிமைகள் என்பதை அவர்கள் அப்பொழுது விளக்கிக் காட்டுகின்றார்கள். ஆலயத்தின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் தெய்வீக உணர்வோடு நான் என்னும் அகங்காரம் இன்றிச் சுத்தம் செய்யும் அவர்களுடைய உள்ளம் தூய்மையடையாது எப்படி இருக்க முடியும்? கர்மயோகத்தின் முக்கியக் குறிக்கோள் சித்த சுத்தி செய்வதாகும். சித்தத்தைச் சுத்திசெய்வது எப்படி என்பதை மௌன நேரத்தில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கும் அந்தர்யோகிகள் செயல் மூலமாகத் தெளிவாக அறிந்துகொள்கிறார்கள். பாபநாசம் அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் உண்மையிலேயே பாபத்தை நாசம் செய்யும் செயலில் ஈடுபடுகின்றார்கள். கிறிஸ்தவ மதத்தில் பாப மன்னிப்பு என்ற ஒரு மூடக் கொள்கை உண்டு. பாதிரிமார்கள் பாபத்தை மன்னித்துவிடுவதாகக் கூறினால் பாபம் தீர்ந்துவிட்டதாக எண்ணுகின்றவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறவர்களாகின்றார்கள். மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணங்களையும் தன்னலமற்றத் தெய்வப்பணியில் கர்த்திருத்துவமில்லாது ஈடுபடுத்தும்பொழுதுதான் மனதில் உள்ள பாப சம்ஸ்காரங்கள் அழிக்கப்படுகின்றன. பாபநாசத்தில் மௌன நேரத்தில் செய்யும் உழவாரப்பணி பாபத்தை நாசம் செய்கிறது என்பதில் ஐயம் இல்லை.

பாபநாசத்தில் ஓடும் நதி தாமிரபரணியாகும். அந்நதி பொதிகை மலையில் உற்பத்தியாகிப் பாபநாசத்தில் சமவெளியை அடைகின்றது. அந்நதி மலைப்பகுதியில் ஓடிவரும் பொழுது பல இடங்களில் நீர்வீழ்ச்சிகளாக விழுகிறது. அகஸ்தியர் தீர்த்தம், கல்யாண தீர்த்தம், பானதீர்த்தம் என்னும் பல தீர்த்தங்கள் மலைப்பகுதியில் அந்நதிக்கு அமைந்திருக்கின்றன. ஆடி அமாவாசையன்று பான தீர்த்தத்தில் குளிப்பதற்கு அப்பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்கள் செல்லுகின்றார்கள். தாமிரபர

ணிக்கு அமைந்திருக்கும் மேலணையிலிருந்து படகின்மூலம் தாமிரபரணி நதியில் சென்று பான தீர்த்தத்தை அடையலாம். அவ்வழி தான் பான தீர்த்தத்துக்குச் செல்லும் சுருக்கு வழியாகும். கார் மூலமாகவோ, ஜீப் மூலமாகவோ மலையைச் சுற்றிக்கொண்டு பான தீர்த்தத்துக்குச் செல்லும் நெடுவழி ஒன்றும் உண்டு. அவ்வழி ஆடி அமாவாசை யின் பொழுதுதான் சரி செய்யப்பட்டுக் காரும் ஜீப்பும் போவதற்கு ஏற்ப அமைக் கப்படுகிறது. மற்றக்காலங்களில் காரும் ஜீப்பும் போக முடியாதபடி வழியைக் காட் டுப் புல் மூடிவிடும். மேலணை வரையிலும் செல்வதற்குப் பஸ்வசதி உண்டு. நல்ல சாலை யும் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலணையி லிருந்து படகின் மூலமாகப் பான தீர்த்தத் துக்குச் செல்லலாம். மேலணைவரை சென்று படகின் மூலமாகப் பான தீர்த்தத்துக்கு ஆண்டு முழுவதும் செல்லலாம். ஆடி அமா வாசை ஒருநாள் மட்டும் ஸ்நானத்துக்குச் செல்லுகின்ற பக்தர்களுக்குச் சங்கர் சிமெண்ட்கம்பெனியார் இலவசமாக உணவ ளித்துவருகின்றார்கள். கார், ஜீப் போகும்வழி யைச் செப்பனிட்டு அருவிக்குப் பக்கத்தில் ஆடி அமாவாசையன்று டியூப்லைட் போட்டு ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தை உண்டு பண்ணி விளக்கு எரித்து வழியில் வெளிச் சத்தை உண்டுபண்ணும் பணியையும் அவர் கள் செய்து வருகிறார்கள்.

இவ்வாண்டு ஆடி அமாவாசைக்கு முதல் நாள் பாபநாசம் அந்தர்யோகம் முடிந்த பின் 19—7—82 திங்கட்கிழமை யன்று நாங்கள் எட்டுப்பேர் ஜீப் ஒன்றின் மூலம் பான தீர்த்தம் சென்றோம். காலை 6-45 மணிக்குப் புறப்பட்டு எட்டு மணிக்குப் பான தீர்த்தத்தை அடைந்தோம். அருவி யில் ஜலம் நன்றாக விழுந்து கொண்டிருந் தது. இயற்கைக் காட்சி உள்ளத்துக்கு உற் சாகத்தையும் உன்னத நிலையையும் தந்தது. அருவிக்குப் பக்கத்தில் மலையில் சிறு படிகள் செதுக்கி மேலே ஏறுவதற்கு வழி அமைத் திருக்கிறார்கள். அப்படியில் ஏறும்பொழுது பிடித்துக் கொள்வதற்கு ஆதரவாக இரும்புச்சங்கிலி அமைக்கப்பட்டுள்ளது. அச் சங்கிலியை ஆதரவாகப் பிடித்துக்கொண்டு எங்களுள் மூவர் மேலே ஏறினோம். மூவருள் ஒருவர் அருவியின் அழகையும் இயற்கை யின் அழகையும் இரசித்து விட்டுக் கீழே இறங்கி வந்து விட்டார். நாங்கள் இருவர் அம்மலைமீதிருந்த குகைக்குச் சென்றோம். அக்குகையில் தியானத்தில் அமர்ந்தோம்.

மனம் பிரபஞ்சத்தை விட்டு விலகி அதீ தத்துக்குப் போவது அக்குகையில் அனுபவ வாயிலாக விளங்கியது. பிரபஞ்ச அதீதம் என்றால் பேரானந்த நிலை என்பது தெளி வாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் ‘கற்கண்டுக் கட்டி சுவைத்தவனுக்குக் கருப்பட்டிப்பாகு சுவைக்குமா?’ என்று கேட்கிறார். பிரபஞ்ச அதீதத்தில் உண்டாகும் பேரின்பச் சுவை கண்டவர்களுக்கு உலக இந்திரிய சுகங்கள் சுகங்களாகத் தோன்றா என்பது ஆங்கு விளங்கியது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் விவே கானந்தரை நிர்விகல்ப சமாதிக்கு எடுத்துச் செல்லும்போது அவர் பிரபஞ்ச உணர்ச்சி யெல்லாம் மனதைவிட்டு அகலுகிறது என்று கூறினார். அம்மலைக் குகையில் தியா னம் பண்ணியபொழுது அவ்வுண்மையை உணர முடிந்தது. மனம் அதீத நிலைக்குப் போகும்போது எத்தகைய உணர்வுடனும் பேரானந்தத் தெளிவுடனும் இருக்கிறது என்பதை அனுபவம் ஏற்படுகின்ற போது தான் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

பான தீர்த்தத்தில் உள்ள அம்மலைக்குகை யில் உயர்ந்த எண்ண அலைகள் மிதந்து கொண்டிருப்பதை அங்குத் தியானம் செய் தால் உணரலாம். யோகிகளும் சித்தர்களும் ஞானிகளும் பரத்தைக் குறித்த தியானத் தில் ஒரு காலத்தில் அக்குகையில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்க வேண்டும். இன்றைக்கும் அவ்வெண்ணங்கள் ஆங்கு மிதந்துகொண்டி ருக்கின்றன என்பதை அக்குகைக்குச் செல் கின்றபோது உணரமுடிகின்றது. பிரபஞ் சப் பற்றுக்களை எல்லாம் விட்டொழிப்பது அக்குகையிலிருக்கும்போது மிகவும் சுலப மாகத் தோன்றுகின்றது. அக்குகைக்குப் பக்கத்தில் விழும் அருவியின் ஓசையும் சுற் றிலும் உள்ள இயற்கையின் அழகும் பரத் தைப்பற்றிய உணர்வை ஊட்டுவதாக

இருக்கின்றன. அக்குகைக்குள் அமர்ந்திருந்தபோது மனதில் ஏற்பட்ட எண்ண அலைகள் பரத்தின்பால் இழுத்துச் சென்று கொண்டிருந்தன. பரவாழ்வைப்பற்றிய ஓர் அனுபவம் ஆங்குத் தெளிவாக ஏற்பட்டது. பேரானந்தம், பிரபஞ்ச அதீதஉணர்வு, உள்ளத்தெளிவு என்று அவ்வனுபவத்தைச் சொற்களால் விளக்கலாம். அவ்வனுபவம் ஏற்படுபவர்களுக்கே அதன் மகிமை உள்ளபடி விளங்குகிறது. ஆன்மபோதம் என்றும், அதீதநிலை என்றும், அருள்நிலை என்றும் சொல்லுகின்ற ஒப்பற்றநிலை உண்டு என்பது மனதுக்கு உறுதியாயிற்று. இயற்கையில் மனதை உன்னத நிலையில் எடுத்துச் செல்கின்ற இத்தகைய இடங்களைப் பண்டைக்கால ரிஷிகள் தவத்துக்கு உரிய இடங்களாக அமைத்துக்கொண்டதில் பெரிய கருத்து இருக்கிறது என்பது அன்றைக்கு விளங்கியது. மனம் ஓரளவு பண்பட்டுவிட்டால் அத்தகைய இடங்களின் மகிமையை நாம் நன்கு அனுபவிக்கலாம். தூய மனதாலன்றி வெறும் அறிவைக்கொண்டும், பொருளைக்கொண்டும், போகத்தைக் கொண்டும் அத்தகைய இடங்களின் மகிமையை அறிய முடியாது. அவ்விடத்தில் இருக்கும்போது பொருளும், போகமும், உலகியல் அறிவும் துச்சமெனத் தோன்றுகின்றன.மனம் அவற்றில் நாட்டம் கொள்வதில்லை. இந்த அற்புதக் குகை உள்ளத்தைக் கவர்ந்ததில் என்ன வியப்பு இருக்கிறது!

அக்குகையை விட்டு வெளியேறுவதற்கு முன் மனம் அதை உள்ளத்தில் வாங்கிக் கொண்டது. பின்னர் அதைப்பற்றிச் சி, திக்குந் தோறும் மனதில் தீரம் உண்டா கிறது. மனதால் அதை வழுத்துகின்ற பொழுது ஞானமும் ஆனந்தமும் உண்டா கின்றன. மனதில் அதைப்பற்றிய சிந்தனை வருகின்றபோது மனதில் உள்ளஅழுக்குக்கள் அகலுகின்றன. இத்தகைய பெருமைபொருந்திய அக்குகையை ஆங்குச் செல்பவர்கள்அனைவரும் தரிசிக்க வேண்டும். அதனுள் சிறிது நேரம் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அதன் மஹிமையை உணரலாம். இமயமலையில் உள்ள அமரநாதத்திற்கும், பத்திரிநாதத்திற்கும், கேதாரநாதத்திற்கும், பசுபதிநாதத்திற்கும், சமவெளியிலுள்ள புண்ணியக்ஷேத்திரமாகிய காசிக்கும் சென்றிருக்கின்றோம். ஆங்கெல்லாம் கிடைக்காத பாரமார்த்திக அனுபவம் பானதீர்த்த அருவிக்கு அருகில் உள்ள மலைக்குகையில் கிடைக்கிறதென்றால் அக்குகையின் மகிமைதான் என்னே! உள்ளங் கவர்ந்த குகை என்று அதைத்தான் குறிப்பிடுகின்றோம். அடங்காத ஐம்பொறிகளும் ஆங்கு அடங்கி மனம் பாரமார்த்திக எண்ணங்களை மாலையாகக் கட்டிப் பரத்தின் வழிபாட்டில் பாங்குடன் ஈடுபடுகின்றது. ஐம்பொறிகளையும் மனதையும் பரமன் வழிபாட்டில் ஈடுபடுத்துகின்றவர்கள் தொண்டர்கள் ஆகின்றார்கள். தொண்டர்களுக்கு ஐம்பொறிகளும் மனதும் அடங்குகின்றன. அக்குகையின்கண் எத்தனையோ தொண்டர்கள் இருந்து வழிபாடு செய்திருக்கவேண்டும். எனவே அதைப் புனிதக் குகை எனலாம்.

செய்திகள்

நிகழ்பவை:

20—8—82 வெள்ளிக்கிழமையன்று ஆடிவிடு முறைக்குப்பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுலப் பள்ளி திறக்கப்படுகிறது.

22—8—82 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ விநாயக சதுர்த்தி ஆகும். அன்று ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், நண்பகல் 11-00 மணியிலிருந்து 12-00 மணிவரை ஐக்கிய வணக்கமும், மாலை 7-00 மணிக்கு மேல் மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து விநாயகர் பூஜையும் செய்து விநாயக சதுர்த்தியைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

10—9—82 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணிநேரம் அகண்ட நாம பஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணிவரை ஐக்கியவணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு
பிரசார விலை ரூ. 18-00
மஹாபாரதம் பிரசார விலை ரூ. 7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள் ,, ... 6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி ,, ... 5-50
இராமாயணம் ,, ... 5-00
தினசரி தியானம் ,, ... 4-00
கர்மயோக விளக்கம் ... 10-00
ஞானயோக விளக்கம் ... 8-00
ராஜயோக விளக்கம் ... 8-00
பரமஹம்சரின் பெருமை ... 6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் ... 6-00
விவேகானந்த விவரணம் ... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I ... 3-50
அனுஷ்டான வேதாந்தம் ... 3-00
எதிர்கால இந்தியா ... 3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் ... 3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை ... 3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்) ... 2-50

தாயுமானவர் இயற்றிய

கருணாகரக் கடவுள் விரிவுரை ... 3-50
பரிபூரணானந்தம் ஷை ... 3-00
சின்மயானந்த குரு ஷை ... 3-00
ஆனந்தமானபரம் ஷை ... 3-00
சுகவாரி ஷை ... 3-00
மௌனகுரு வணக்கம் ஷை ... 3-00
எங்குநிறைகின்றபொருள் ஷை ... 2-50
பரசிவ வணக்கம் ஷை ... 1-00

கண்ணன் என்னும் கடவுள் ... 2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்) ... 2-00
விரதவீரர் பீஷ்மர் ஷை ... 1-50
விபீஷணன் சரணாகதி ஷை ... 1-50
பரமஹம்சர் பாமாலை ... 1-50
காயத்ரீ ... 1-50
நன்மக்களைப் பெறுதல் ... 1-50
அமரநாத யாத்திரை ... 1-25
சந்நியாசி ... 1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? ... 1-25
இறைவணக்கம் ... 1-00
குழந்தைகளின் களிக்கூடம் ... 1-00
இராவண தத்துவம் ... 1-00
வாலி மோட்சம் (நாடகம்) ... 1-00
தவப்புதல்வர்கள் ,, ... 1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,, ... 1-00
தானவீரன் கர்ணன் ,, ... 1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் ... 1-00
மார்க்கண்டேயன் (நாடகம்) ... 1-00

பிரஹ்லாதன் (நாடகம்) ... 1-00
தபோபலன் (நாடகம்) ரூ. 1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும் ... 1-00
நோய்க்கு இடம் கொடேல் ... 1-00
*ஆத்ம சக்தி ... 1-00
*ஆலய வழிபாடு ... 0-75
*சக்தி தத்துவம் ... 0-70
*சிவதத்துவம் ... 0-70
*மனிதனது நிஜசொரூபம் ... 0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு ... 0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும் ... 0-60
*கணபதி ... 0-60
சைவன் யார்? ... 0-50
*முருகக் கடவுள் ... 0-50
*விஷ்ணு தத்துவம் ... 0-50
தெய்வீக மகிமைகள் ... 0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது? 0-50
வர்ணாச்ரம தர்மம் ... 0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும் ... 0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை ... 0-30
கந்தர் அநுபூதி ... 0-25

The Bhagavad Gita (11th Imp.) ...24-00
Tirukkural (with plastic cover) ... 8-00
The Indian National Education ... 8-00
Ramakrishna Lives Vedanta ... 8-00
Facets of Brahman or The Hindu Gods ... 5-00
Daily Divine Digest (DELUXE) ... 4-50
Daily Divine Digest (Ordinary) ... 2-50
Mahabharata (with plastic cover) ... 6-00
Sri Krishna-The Manifest Divinity ,, ... 6-00
Ramayana ,, ... 4-00
Sri Vishnu Sahasranama Stotram ... 4-00
The Bhagavad Gita (Small Size) ... 4-00
Siva Sahasranama Stotram ... 3-50
Bheeshma The Superman ... 3-50
Hinduism Hosts Christianity ... 3-00
Holy Bible—In the Light of Vedanta ... 1-50
Reminiscences of Master Mahashaya ... 1-50
*Introducing the Gita ... 1-50
The Garland of Paraaparam ... 1-50
*Key to Higher Life ... 1-25
*The Student ... 1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami ... 1-00
*The Nursery School ... 1-00
*The School ... 1-00
*The Teacher ... 1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 5-00ம், மஞ்ஜரிக்கு ரூ. 1-80ம் இராமாயணத்திற்கு ரூ. 1-60ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் தினசரி தியானத்திற்கு ரூ 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 5-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

Edited by SWAMI NITHYANANDA,

Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.